உதயன்


விலை ரூபா 7.00

சுடர் 18 வள்ளுவர் ஆண்டு 2034 பங்குனி 2 ஞாயிற்றுக்கிழமை (16-03-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்: 110

## கப்பல் அழிக்கப்பட்ட சம்பவத்துக்கு கடும் கண்டனம்:

# ஜப்பான் பேச்சுக்களில் பங்குபற்றி ஆட்சேபம் தெரிவிக்க புலிகள் முடிவு

## பாலா தலைமையில் பேச்சுக்குழு இன்று வன்னியிலிருந்து புறப்படும்



கிளிநொச்சி,மார்ச்16

**ஜப்பானில் அடுத்தவாரம் ஆரம்பமாகவிருக்கும் ஆறாவது சுற்று சமாதானப் பேச்சுக்களில் கலந்துகொள்வது என்று விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடம் முடிவுசெய்திருக்கிறது.**

**தங்கள் வர்த்தகக் கப்பல் தாக்கி மூழ்கடிக்கப்பட்ட சம்பவம் மிகப் பாரதூரமானது என்று கண்டனம் தெரிவித்திருக்கும் புலிகள், அதற்காக ஜப்பானில் நடைபெறவுள்ள பேச்சுக்களில் கலந்துகொண்டு அரசுத் தரப்பிடம் கடும் ஆட்சேபத்தை வெளியிடுவது என்று தீர்மானித்திருக்கின்றனர்.**

அன்ரன் பாலசிங்கம் அங்கு தெரிவித்ததாவது:-

ஜப்பானில் ஹக்ரோன் என்னும் இடத்தில் நடைபெறும் பேச்சுக்களில் பங்குபற்றுவதென விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடம் முடிவு எடுத்துள்ளது. பேச்சை பகிஷ்கரித்து எமது ஆட்சேபனையை தெரிவிப்பதிலும் பார்க்க பேச்சில் பங்குகொண்டு, நேரடியாக எமது ஆட்சேபனையை -

(12ஆம் பக்கம் பார்க்க)

ஜப்பான் பேச்சுக்களில் கலந்துகொள்வதற்காக அன்ரன் பாலசிங்கம் தலைமையிலான புலிகள் தரப்புக் குழு இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11மணிக்கு புறப்படவுள்ளது. அவர்கள் இன்றிரவே கொழும்பிலிருந்து டோக்கியோ பயணமாவார்கள்.

பேச்சுக்களில் கலந்துகொள்வது என்ற முடிவை புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் நேற்று மாலை கிளிநொச்சியில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் அறிவித்தார்.

கிளிநொச்சியில் இயங்கும் சமாதான செயலகத்தில் நேற்று மாலை 6.15 மணிக்கு இந்த செய்தியாளர் மாநாடு நடைபெற்றது.

செய்தியாளர் மாநாட்டில் பாலசிங்கத்துடன் அவரது துணைவியார் அடேல் பாலசிங்கமும் உடனிருந்தார்.

## தற்காப்பு ஆயுதங்களே கப்பலில் இருந்துள்ளன

### பாலா தெரிவிப்பு

கிளிநொச்சி,மார்ச்16

கடற்படையால் தாக்கி அழிக்கப்பட்ட விடுதலைப் புலிகளின் வர்த்தகக் கப்பலில் தற்பாதுகாப்புக்கான சிறியரக ஆயுதங்களே இருந்துள்ளன என்று புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

கொழும்புப் பத்திரிகைகள் கூறுவது போன்று பெருமளவு ஆயுதங்கள் எவையும் அதில் இருக்கவில்லை என்றும் அவர் கூறினார்.

நேற்று கிளிநொச்சியில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் அவர் இந்தத் தகவல்களைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தாக்கப்பட்ட கப்பலில் விடுதலைப் புலிகளின் ஆயுதக் கொள்வனவுக்குப் பொறுப்பான கே.பி.அண்ணா இருந்ததாக வந்த செய்திகள் தவறானவை. அவர் கப்பலில் இருக்கவில்லை. கப்பலில் இருந்ததாக ஆயுதப் பட்டியல் ஒன்றை கொழும்புப் பத்திரிகைகள் வெளியிட்டுள்ளன. அதற்கு எந்த ஆதாரமும் இல்லை.

அது ஒரு எண்ணெய் தாங்கிக் கப்பல். அழிக்கப்பட்டு ஒரு மைல்

(12ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல் தாக்கப்பட்ட சம்பவத்தை நியாயப்படுத்தவே முடியாது

### பாதுகாப்பு அமைச்சருக்கு தமிழ்ச்செல்வன் கடிதம்

கிளிநொச்சி,மார்ச்16

சர்வதேசக் கடற்பரப்பில் வைத்து தமது கப்பலைக் கடற்படை தாக்கி அழித்த சம்பவத்தை எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாது என்று பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவுக்கு எழுதிய கடிதத்தில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் காட்டமாகத் தெரிவித்துள்ளார்.

கப்பல் தாக்கப்பட்ட விடயம் தொடர்பாகத் தமது கடும் ஆட்சேபத்தை வெளிப்படுத்தி முன்னர் ஒரு கடிதம் அனுப்பியிருந்தார். அதற்கு பாதுகாப்பு அமைச்சர் பதில் கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார். அதில் கப்பல் தாக்கப்பட்ட இடம் எது என்பது குறித்து தெளிவாக எதுவும் தெரிவிக்கப்படவில்லை. அத்துடன், கடற்படையினரின் தாக்குதலை நியாயப்படுத்தும் விதத்திலும் அவரது கடிதம் அமைந்திருந்ததாகக் கூறப்பட்டது.

இதற்குப் பதிலளித்தே தமிழ்ச்செல்வன் புதிய கடிதத்தை அனுப்பிவைத்துள்ளார். அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சர்வதேசக் கடற்பரப்பில் வைத்து எமது வர்த்தகக் கப்பலை இலங்கை

(12ஆம் பக்கம் பார்க்க)

## களுத்துறைக் கைதிகள் போராட்டத்தை கைவிட்டனர்

கொழும்பு,மார்ச்16

கடந்த 15 நாள்களாக களுத்துறைச் சிறையில் உண்ணாவிரதம் இருந்துவந்த தமிழ் அரசியல் கைதிகள் தமது போராட்டத்தை நேற்றுக் கைவிட்டனர்.

நேற்றுக்காலை களுத்துறைச் சிறைக்குச் சென்ற தமிழ்க் காங்கிரஸ் தலைவர் அ.விநாயகமூர்த்தி மற்றும் மனித உரிமைகளுக்கும், அபிவிருத்திக்குமான நிலையத்தின் பணிப்பாளர் என்.கந்தசாமி ஆகியோர் வழங்கிய உறுதிமொழியை அடுத்தே உண்ணாவிரதத்தை தாம் கைவிட்டதாக கைதிகள் அறிவித்துள்ளனர்.

சட்டமா அதிபர் திணைக்களத்தால் விடுக்கப்பட்ட அறிவுறுத்தல்க

(12ஆம் பக்கம் பார்க்க)

## அறிக்கை இன்று வெளியாகும்

கொழும்பு,மார்ச்16

விடுதலைப் புலிகளுக்குச் சொந்தமான கப்பல் தாக்கி அழிக்கப்பட்டமை தொடர்பான விசாரணை அறிக்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவால் இன்று வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இந்த அறிக்கை இன்று அனுப்பிவைக்கவிருக்கிறது. திங்களன்று அது ஊடகங்களுக்கும் அனுப்பிவைக்கவுள்ளதாகத் தெரிவிக்

(11ஆம் பக்கம் பார்க்க)

## ஈராக் மீதான தாக்குதலை கண்டித்து பேரணி

கொழும்பு,மார்ச்16

ஈராக் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்துவதைக் கண்டித்து எதிர்க்கட்சிகள் ஆர்ப்பாட்டப்பேரணி ஒன்றை கொழும்பில் நடத்தவுள்ளன.

எதிர்வரும் 21ஆம் திகதி இடம்பெறவுள்ள இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் ஈராக் மீதான அமெரிக்காவின் தாக்குதல் குறித்து அரசாங்கம் கொண்டுள்ள நிலைப்பாட்டினை விளக்க வேண்டும் எனக் கோரவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-12)

# சமாதானத்தின் வெற்றி தோல்வி சம்பந்தப்பட்டோர் கைகளிலேயே!

## நோர்வே பிரதி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு,மார்ச்16

தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான முயற்சியின் வெற்றியும் தோல்வியும் சம்பந்தப்பட்ட இரு தரப்பினரதும் கைகளிலேயே தங்கியுள்ளது. வெளியுலகத்தினரால் இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்த முடியாது.

- இவ்வாறு தெரிவித்தார் நோர்வே வெளிவிவகார பிரதி அமைச்சர் விடர் ஹெல்கிஸன். கொழும்பில் நடந்த கருத்தரங்கு ஒன்றில் பேசும் போதே அவர் இப்படிக் கூறினார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சமாதானம் என்பது சம்பந்தப்பட்ட இருதரப்பினரதும் விட்டுக்கொடுப்பிலும், உண்மைத் தன்மையிலுமே தங்கியிருக்கின்றது.

விடுதலைப் புலிகள் முற்றுமுழுதாக ஆயுதக் கலாசாரத்தில் இருந்து விடுபட்டு அரசியல் நீரோட்டத்தில் இணைவதற்கு சற்று நீண்டகால அவகாசம் தேவைப்படும்.

சமாதானப் பேச்சுக்களில் ஈடுபடும் இரண்டு தரப்புகளில் ஒரு தரப்பினர், அரசியலில் நிபுணத்துவம் பெற்றவர்களாகவும் அரசியல் சம்பிரதாயங்களில் நன்கு அனுபவம் வாய்ந்தவர்களாகவும், பக்குவமும் தேர்ச்சியும் உடையவர்களாகவும் இருக்கிறார்கள்.

மறுபுறம் அரசியல் துறையில் குறைந்த அனுபவத்தைக் கொண்டுள்ள ஒரு பகுதியினரே பேச்சுக்களில் ஈடுபடுகின்றனர்.

கெரில்லாப் படையாக இருந்த ஒரு அமைப்பைச் சேர்ந்தவர்கள் தம்மை அரசியல் நீரோட்டத்தில் இணைப்பதற்கு கால அவகாசம் தேவை. நூற்றுக்கணக்கான அல்லது ஆயிரக் கணக்கான கெரில்லாப் போராளிகள் அரசியல் ரீதியாகச் சிந்திப்பதற்கும், ஜனநாயக நடைமுறைக்குத் தம்மைப் பழக்கப்படுத்திக்கொள்வதற்கும் காலம் எடுக்கும்.

அவர்கள் போராளிகளாக இருந்து அரசியல்வாதிகளாக மாறவேண்டிய



வர்களாக உள்ளனர்.

சமாதானத்தை ஏற்படுத்தப் பாடுபடும் மூன்றாம் தரப்பினர் தமது கடமை என்ன என்பதில் தெளிவாக இருக்கவேண்டும். சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அழுத்தம் கொடுக்கும் செயலை நோர்வே செயற்படுத்த முடியாதுள்ளது. அனுசரணையாளர்களாக மட்டுமே நாம் இயங்க முடிகின்றது -

என்றார் ஹெல்கிஸன். (ம-12)

## கேணல் பதுமன் வன்னி சென்றார்

மட்டக்களப்பு,மார்ச்16

விடுதலைப் புலிகளின் திருமலை மாவட்டக் கட்டளைத் தளபதி கேணல் பதுமன் நேற்றுக் காலை விஷேட ஷெலி மூலம் வன்னிக்குச் சென்றுள்ளார்.

விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடம் விடுத்த திடீர் அழைப்பை அடுத்தே மூதூர் கிழக்குப் பிரதேசத்தின் சம்பூரில் இருந்து அவர் அவசரமாக வன்னி நோக்கிச் சென்றிருக்கின்றார். (ம-12)

## மட்டக்களப்பில் நாளை ஹர்த்தால்

மட்டக்களப்பு,மார்ச்16

சர்வதேச கடற்பரப்பில் வைத்து விடுதலைப்புலிகளின் வர்த்தகக் கப்பல் தாக்கி அழிக்கப்பட்டதைக் கண்டித்து நாளை திங்கட்கிழமை மட்டக்களப்பில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடக்கும் இந்தக் ஹர்த்தாலை முன்னிட்டு மட்டக்களப்பில் சகல அலுவலகங்களும், கடைகளும் மூடப்பட்டிருக்கும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.(ம-12)

ரூ. 16910 முதல்
தொலைக்காட்சிப் பெட்டிகள்
சிங்கர்
புதிய பார்வை
இல.1, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே.: 021-2225408

ASIAN
COMPUTER EDUCATION
தரமான கணனிப் பாடநெறிகள்
2G,ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்

எக்ஸ்போ ஏவியேஷனில் கொழும்புக்கு பயணியுங்கள்
இலவச போக்குவரத்து வசதி
எக்ஸ்போ ஏவியேஷன் (பிரைவட்) லிமிட்டட்
1a, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பேசி: 021-2223891, 071-349999
296,A/1, காலி வீதி, கொழும்பு 6
தொ.பேசி: 01-360290,360291,074-512666

# ஆஸ்திரேலியா வெற்றி!

டேர்பன்,மார்ச்16


உலகக் கிண்ணப் போட்டித் தொடரின் கடைசி 'சுப்பர் சிக்ஸ்' ஆட்டத்தில், ஆஸ்திரேலிய அணி கென்ய அணியை 5 விக்கெட்டுக்களால் தோற்கடித்தது. இதன் மூலம் தொடர்ந்து 15 வெற்றிகளைப் பெற்ற அணி என்ற சாதனையை ஆஸ்திரேலியா தக்க வைத்துக்கொண்டுள்ளது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஆஸ்திரேலிய அணித் தலைவர்ரிக்கி பொன்டிங் முதலில் பந்துவீச முடிவு செய்தார். களமிறங்கிய கென்யா அணி ஆரம்பத்தில் பிரட் லீயின் பந்து வீச்சில் சிதறியது. 3 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்கள் இழப்பு என்ற இக்கட்டுக்குள் தள்ளப்பட்டது.

பின்னர் வந்த கென்யத் துடுப்பாளர்கள் நிதானமாக நின்றாடினர். என்றாலும், ஓட்டங்கள் பெருமளவில் பெறப்படவில்லை. 50 ஓவர்கள் நிறைவில் 8விக்கெட்டுக்கள் இழப்புக்கு 174என்ற கௌரவமான இலக்கை எட்டியது கென்யா. டிக்கோலா 51 ஓட்டங்களையும் ஷா 46 ஓட்டங்களை

(11ஆம் பக்கம் பார்க்க)

## SHARP Action of the day



சிம்பாப்வேயுடன் சதம் அடித்த அத்தப்பத்து பந்தை 'கட்' செய்ய முனைகிறார்

பிரவுன்ஸ் எலக்ரோனிக்ஸ் Browns
BROWNS ELECTORINICS

# ஒருவழியாக நுழைந்தாயிற்று!

ஒரு வழியாக, தட்டுத் தடுமாறி இலங்கை அரையிறுதிக்குள் நுழைந்து விட்டது. ஒரு பக்கத்தில் நியூஸிலாந்துக்குப் பழி தீர்த்துக் கொண்டு இலங்கை அடுத்த சுற்றுக்குள் நுழைவதற்கும் கைகொடுத்தது இந்தியா. நியூஸிலாந்து விக்கெட் காப்பாளர் மக்குலம் அணியின் வெற்றியை கை நழுவ விட்டார். திராவிட்டின் பிடியை அவர் நழுவ விடாவிட்டால் ஆட்டத்தின் போக்கைக் கூறியிருக்க முடியாது.

இலங்கையை அரையிறுதிக்குள் கொண்டு வருவதற்கான தமது உள் நோக்கம் என்ன என்பதை இந்திய அணித் தலைவர் வெளிப்படையாகவே கூறிவிட்டார். போர்ட் எலிசபெத் மைதானத்தில் ஆஸ்திரேலியர்களை வெல்லும் திறமை இலங்கையர்களுக்கே இருப்பதாக இந்தியா நம்புகின்றது. அவ்வாறு நடந்து இலங்கை இறுதியாட்டத்துக்கு வந்துவிட்டால் 'சுப்பர் சிக்ஸி'ல் வென்றது போன்று இலகுவாக அவர்களை வென்று விடலாம் என்பது இந்தியர் கனவு. இலங்கை பலிக்கடாவா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். அதற்கு ஆஸ்திரேலியர்கள் வேறு அனுமதிக்க வேண்டும்.

ஒரு கட்டத்தில் உலகக் கிண்ணத்தில் இருந்து வெளியேற வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்ட இலங்கை இப்போது அரையிறுதிக்கு தகுதி பெற்றுவிட்டது. சிம்பாப்வே அணி மீதான வெற்றி அதற்கு வழிவகுத்துவிட்டது. ஹீத் ஸ்ரீக் சொன்னது போன்று சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து நேற்றுடன் ஓய்வு பெற்ற சிம்பாப்வே வீரர் அன்டி பிளவருக்கான சிறந்த பரிசாக இலங்கை மீதான வெற்றியை அவர்களால் வழங்க முடியவில்லை.

இலங்கையர்களுக்கு நேற்றைய ஆட்டம் மிகமிக முக்கியமானது. மறுபுறத்தில் இலங்கையின் தோல்வி நியூஸிலாந்தினருக்கும் மிக முக்கியமானது. அதனாலோ என்னவோ இலங்கை நேற்று தன் வழமையான ஆட்டத்தை தூக்கி ஒருபுறம் வைத்துவிட்டு மிகப் பொறுமையாகவும் நிதானமாகவும் ஆடியது. ஆட்டத்தின் ஆரம்பப் பந்தை எதிர் கொண்டது முதல் 50ஆவது ஓவரின் கடைசிப் பந்தை தூக்கி அடித்தது வரை அத்தப்பத்துவின் அந்தப் பொறுமையும் நிதானமும் மிகமிகப் பெறுமதியானவை; வெற்றிக்கு

(11ஆம் பக்கம் பார்க்க)



நேற்று 38ஓட்டங்களில் ஆட்டமிழந்து வெளியேறும் அன்டி பிளவரை வாழ்த்தும் அவரது சகா அலிஸ்ர காம்பிள்.

# ஒலங்காவும் திடீர் ஓய்வு

ஈஸ்ட் லண்டன்,மார்ச்16

சிம்பாப்வேயின் வேகப் பந்து வீச்சாளர் ஹென்றி ஒலங்கா சர்வதேசப் போட்டிகளில் இருந்து தான் ஓய்வு பெறப்போவதாகத் திடீரென அறிவித்துள்ளார். நேற்று நடந்த இலங்கையுடனான தமது கடைசி 'சுப்பர் சிக்ஸ்' ஆட்டத்தின் பின்னர் அவர் இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

இது தொடர்பாக அவர் நேற்று வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தன் தனிப்பட்ட விருப்பின்படி இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளதாகத் தெரிவித்துள்ளார். தற்போதைய அரசியல் சூழ்நிலையில் தான் சிம்பாப்வே திரும்புவது ஆபத்தானது என்று நம்புவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தன்னுடைய அணி சர்வதேச மட்டத்தில் தொடர்ந்தும் விளையாடுவதற்கு நாட்டில் மனித உரிமைகள் மதிக்கப்படுவது அவசியம் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

ஒலங்கா



ஒலங்கா (வயது 26) மற்றும் அன்டி பிளவர் இருவரும் தமது

(11ஆம் பக்கம் பார்க்க)

# பிளவரின் ஆட்டமிழப்பு முக்கியதிருப்பம்!

ஈஸ்ட் லண்டன்,மார்ச்16

நேற்று நடைபெற்ற இலங்கைக்கு எதிரான ஆட்டத்தில் சிம்பாப்வே துடுப்பாளர் அன்டி பிளவரின் ஆட்டமிழப்பே ஆட்டத்தின் திருப்பமாக அமைந்தது என்று அணித் தலைவர் ஹீத் ஸ்ரீக் தெரிவித்தார்.

அரவிந்த டி சில்வாவின் பந்தில் எல்பிடபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார் அன்டி பிளவர். ஆனால் தொலைக்காட்சியில் அதனை மீண்டும் பார்த்த போது, பந்து பிளவரின் காலில் படுவதற்கு முன்னர் மட்டையின் விளிம்பில் பட்டு எகிறியது தெரியவந்துள்ளது.

"அது மிக முக்கியமான கட்டம். அன்டி பிளவரும் கிரான் பிளவரும் நல்லதொரு இணைப்பாட்டத் திறனில் இருந்தார்கள். அன்டி சுழல் பந்துகளைக் கையாள்வதில் உலகத்தில் உள்ள துடுப்பாளர்களில் மிகச் சிறந்தவர்.

"அந்தச் சமயத்தில் அவர் அதனை சிறந்த முறையில் கையாண்டிருப்பாரானால், எம்மிடம் கைவசம் விக்கெட்டுக்கள் இருந்திருக்கும். ஆட்டத்தின் திசை வேறு விதமாக இருந்திருக்கும்" - என்றார் ஸ்ரீக்.

இந்த உலகக் கிண்ணத் தொடரில் சிம்பாப்வே அவ்வளவு சிறப்பாக

(11ஆம் பக்கம் பார்க்க)




# பிரட் லீ 'ஹற்றிக்'



பிரட் லீ

டேர்பன்,மார்ச்16

ஆஸ்திரேலிய வேகப் பந்துவீச்சாளர் பிரட் லீ உலகக் கிண்ணப் போட்டியில் 'ஹற்றிக்' சாதனை நிகழ்த்தியுள்ளார். கென்யாவுக்கு எதிராக நேற்று நடைபெற்ற கடைசி 'சுப்பர் சிக்ஸ்' ஆட்டத்தில் அவர் இந்தச் சாதனையை நிகழ்த்தினார். இதன் மூலம் உலகக் கிண்ணப் போட்டியொன்றில் 'ஹற்றிக்' பெற்ற முதல் ஆஸ்திரேலிய வீரர் என்ற பெருமையையும் அவர் பெற்றுள்ளார்.

தனது இரண்டாவது ஓவரில் அவர் இதனைச் சாதித்தார். முதல் பந்தில் கென்யாவின் கென்னடி ஓட்டினோ 'போல்ட்' ஆனார். அடுத்து வந்த பிரிஜல் பட்டேல், லீயின் அடுத்த பந்தில் ரிக்கி பொன்டிங்கிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார். மூன்றாவதாக லீ வீசிய மிக அருமையான 'ஜோக்கர்' பந்தில் டேவிட் ஓபுயா ஆட்டமிழந்தார். அப்போது கென்ய அணி 3 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்கள் இழப்பு என்ற நிலையில் இருந்தது. எனினும் பின்னர் சுதாகரித்துக் கொண்ட அது 50 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட்டுக்களை மட்டுமே இழந்தது. 176 ஓட்டங்களைப் பெற்றது.

ஏற்கனவே உலகக் கிண்ணப் போட்டிகளில் 'ஹற்றிக்' எடுத்துள்ள இந்தியாவின் சேத்தன் சர்மா, பாகிஸ்தானின் சக்லைன் முஷ்டாக், இலங்கையின் சமிந்த வாஸ் ஆகியோரின் பட்டியலில் இப்போது லீயும் இடம்பிடித்துள்ளார்.

(11ஆம் பக்கம் பார்க்க)

# தலைமைப் பதவியிலிருந்து ஷேன் பொலக் திடீர் நீக்கம்




டேர்பன்,மார்ச்16

உலகக் கிண்ணப் போட்டியில் மோசமாக ஆடிய தென்னாபிரிக்க அணியின் தலைமைப் பதவி ஷேன் பொலக்கிடம் இருந்து பறிக்கப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்க கிரிக்கெட் தேர்வாளர்கள் வெள்ளிக்கிழமை கூடி ஆராய்ந்த பின்னர் பொலக்கை (வயது 29) தலைமைப் பதவியில் இருந்து நீக்குவதற்கு முடிவு செய்தனர்.

இம்முறை உலகக் கிண்ணப் போட்டியில் கிண்ணத்தைக் கைப்பற்றக்கூடிய அணி என்று முன்னர் எதிர்வு கூறப்பட்ட தென்னாபிரிக்க அணி, போட்டியின் இரண்டாவது சுற்றுக்குக் கூட தகுதி பெறமுடியாமல் போய்விட்டது.

தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை விடுத்த அறிக்கையில் அவசர நடவடிக்கையாக பொலக்கின் தலைமைப் பதவி பறிக்கப்படுகின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(11ஆம் பக்கம் பார்க்க)

என்றென்றும் தரம் அது நிரந்தரம்
10 YEARS WARRANTY
உங்களின் மனதில் என்றுமே முதல்வன்!
Lumala
Bicycles Supreme

MICRO PC SYSTEMS
◆ கணனி விற்பனை ◆ பழுதுபார்த்தல் ◆ பராமரிப்பு
intel IBM hp Mercury PROLINK
175/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 077-7301417
MPAQ COMPUTERS

SHARP
உத்தரவாதத்துடன் கூடிய விற்பனைக்குப் பிந்திய சிறந்த சேவை
80, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 021-2225150
Browns




ஜப்பானிய தலைநகரில் போருக்கு எதிராக நடத்தப்பட்ட ஒரு பேரணியில் பெண் ஒருவர் தாங்கி நின்ற சுலோகம் இது. டோக்கியோவின் மத்திய பகுதியில் ஆயிரக்கணக்கானோர் இந்தப் பேரணியில் கலந்துகொண்டனர்.

# அமெரிக்காவை ஈராக் முதலில் தாக்குமா?

வாஷிங்டன்,மார்ச்16

அமெரிக்கா அல்லது இஸ்ரேல் படைகள் மீது ஈராக் படைகள் முதலில் தாக்கக் கூடும் என்று கூறப்படுகிறது.

ஏபிசி, என்பிசி தொலைக்காட்சிகளில் இதுபற்றி செய்தி வெளியாகியுள்ளது. ஈராக் மீது அமெரிக்கா தாக்குவதற்கு முன்பாகவே ஈராக் முந்திக்கொள்ள வாய்ப்புள்ளதாக அமெரிக்க உளவுத்துறை வட்டாரங்கள் கருதுகின்றன.

ஈராக் அருகே குவைத்தில் அமெரிக்க இராணுவத்தினர் முகாமிட்டுள்ளனர். அங்கு பீரங்கிக் குண்டுகள் மூலமாக ஈராக் தாக்குதலைத் தொடங்கலாம். குண்டுகளில் விஷ வாயுக்களை நிரப்பி, அமெரிக்க இராணுவத்தினரை செயலிழக்கச் செய்யலாம். குவைத்தில் உள்ள எண்ணெய்க் கிணறுகள் மீது குண்டுகளை வீசலாம் அல்லது இஸ்ரேல் இராணுவத்தின் மீதும் தாக்குதல் நடத்தலாம் என்று அமெரிக்க உளவுத்துறை கருதுகிறது.

ஈராக் படைகள் முதலில் தாக்கக் கூடும் என்ற சந்தேகம் உறுதியாகி விட்டால் அமெரிக்க இராணுவம் தனது தாக்குதலை முதலில் தொடங்கிவிடும்.

போர் தொடங்குவதில் தாமதம் ஏற்பட்டு வருகிறது. குவைத்தில் பாலைவனப் பகுதியில் தங்கியுள்ள அமெரிக்க இராணுவத்தினர் பாலைவனப் புயலை இப்போதே சந்திக்கத் தொடங்கிவிட்டனர். பாலைவனத்தில் புயல் அடிக்கும் போது, தூரத்தில் இருக்கும் பொருள்களைப் பார்க்க இயலாது. (ஐ)

## ஈராக், போர் மாதக் கணக்கில் தொடர்ந்தால்

# ஆசியாவில் அரைவாசி நாடுகளின் பொருளாதாரம் முடங்கும் ஆபத்து

ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுத்து, அது பல மாதங்களுக்கு நீடித்துக்கொண்டே சென்றால், ஆசியக கண்டத்தில் உள்ள நாடுகளில், தென்கொரியா, சிங்கப்பூர், தாய்லாந்து, தாய்வான் உள்ளிட்ட அரைவாசி நாடுகளில் பொருளாதார வளர்ச்சி மந்த நிலையை அடைந்து விடும்; அதோடு பணவீக்கமும் அதிகரித்து விடும் என்று பொருளாதார நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

இப்போது சர்வதேச சந்தையில் ஒரு பீப்பாய் கச்சா எண்ணெயின் விலை 37 டொலர் அளவில் இருந்து வருகிறது. ஈராக் மீது அமெரிக்கா படையெடுத்தால், பல நாடுகள் கச்சா எண்ணெயை வாங்கி தமது இருப்பை அதிகரிக்கத் தொடங்கும். போர் பல மாதங்கள் நீடிக்கும் பட்சத்தில் ஒரு பீப்பாய் கச்சா எண்ணெய் விலை 80டொலரில் இருந்து 100 டொலர்கள் வரை உயரக்கூடும் என்றும் அந்த நிபுணர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அண்மைய ஆண்டுகளில் ஆசிய நாடுகள் பலவற்றில் தொழிற்சாலைகள் அதிகரித்துள்ளன. அதனால், அவற்றின் பெற்றோலிய நுகர்வும் அதிகரித்துள்ளது. அந்நாடுகளின் தொழில் நிலைமை கச்சா எண்ணெயைச் சார்ந்ததாகி விட்டது. எனவே, கச்சா எண்ணெயின் விலையில் ஏற்படக்கூடிய ஏற்ற இறக்கங்களுக்கு ஏற்ப அந்நாடுகளின் பொருளாதாரத்திலும் பாதிப்புகள் இருக்கும்.

கடந்த ஆண்டில் கச்சா எண்ணெயின் விலை பீப்பாய் ஒன்றுக்கு சராசரியாக 26.20 டொலர்களாக இருந்தது. அவ்விலை 10சதவீதம் உயர்ந்தால், ஆசிய நாடுகளின் பொருளாதாரத்தில் 0.23 சதவீதச் சரிவு ஏற்படும்; பணவீக்கம் 1.1வீதம் அதிகரிக்கும்.

இப்போதைய நிலையுடன் ஒப்பிட்டால், ஆசிய நாடுகளின் ஒட்டு மொத்த உற்பத்தி மதிப்பில் 3.1 வீத சரிவு ஏற்படும். பணவீக்கம் 14வீதம் அதிகரிக்கும் என்று ஆசிய பிராந்திய பொருளாதார நிபுணர் கோனிபொலண்ட கூறினார்.

ஈராக் மீது போர் தொடுத்த 4 அல்லது 6 வாரங்களிலேயே அமெரிகக் படைகளுக்கு வெற்றி கிடைத்து விட்டால், பொருளாதாரப் பாதிப்பு அவ்வளவு தீவிரமாக இருக்காது என்றும் அவர் குறிப்பிட்டார். (ஐ)

# ஈராக் மீது எப்போது போர்? புஷ் விரைவில் அறிவிப்பார்

வாஷிங்டன்,மார்ச்16

ஈராக் மீது எப்போது தாக்குதல் தொடங்கப்படும் என்பதை அதிபர் ஜோர்ஜ் புஷ் விரைவில் அறிவிப்பார்.

பிரான்ஸின் கடுமையான எதிர்ப்பை அடுத்து ஈராக்குக்கு எதிரான 2ஆவது தீர்மானத்தை ஐ.நா. பாதுகாப்புக் கவுன்ஸிலில் பிரிட்டன் கைவிட்டுள்ள நிலையில் அமெரிக்க அதிகாரிகள் இதைத் தெரிவித்துள்ளனர்.

பேரழிவு ஆயுதங்களை ஒழிப்பதற்கான இறுதி அவகாசம் ஈராக்குக்கு அளிப்பது தொடர்பான விவாதம் ஐ.நா. பாதுகாப்புச் சபையில் முடிந்தவுடனேயே இது தொடர்பான அறிவிப்பை அதிபர் புஷ் வெளியிடுவார் என அதிகாரிகள் கூறினர்.

அதிபர் புஷ் ஆற்றும் உரையில் ஈராக் மீது எப்போது தாக்குதல் தொடங்கும் என்பது தொடர்பான விவரங்கள் வெளியிடப்படும் என அதிகாரிகள் கூறியதாக 'வாஷிங்டன் போஸ்ட்' நாளேடு செய்தி வெளியிட்டுள்ளது.

புஷ்ஷின் உரைக்குப் பிறகு ஈராக் செல்வது தொடர்பான தங்களது பயணங்களை பத்திரிகையாளர்கள், மனித உரிமைக் குழுவினர் திட்டமிட்டுக் கொள்ளலாம் எனவும் அதிகாரிகள் கூறியுள்ளனர்.

இந் நிலையில், தேசிய பாதுகாப்பு உயர் அதிகாரிகளுடன் அதிபர் புஷ் புதன்கிழமை அவசர ஆலோசனை நடத்தினார்.

இக்கூட்டத்தில் அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் டொனால்ட் ரம்ஸ்பீல்ட், வெளியுறவு அமைச்சர் கொலின் பவல், அமெரிக்க பாதுகாப்பு கூட்டுப்படைகளின் முன்னாள் தளபதி, தற்போதைய விமானப்படைத் தளபதி ரிச்சர்ட் மையர்ஸ் ஆகியோரும் பங்கேற்றதாக 'வாஷிங்டன் போஸ்ட்' தெரிவித்துள்ளது. (ஐ)



குவைத் பாலைவனத்தில் பெரும் அணியாக தரித்து நிற்கும் அமெரிக்க துருப்புகளையே படத்தில் காண்கிறீர்கள். அமெரிக்காவின் ஏழாவது கவசப் படைப்பிரிவைச் சேர்ந்த துருப்புக்கள் தங்கள் கவச வாகனங்களுடன் காணப்படுகின்றன. (ஐ)




மும்பையில் புறநகர் ரயில் நிலையத்தில் வியாழக்கிழமை இரவு பயணிகள் ரயில் பெட்டியில் குண்டு வெடித்ததில் 10 பேர் உயிரிழந்தனர். சேதமடைந்த பெண்களுக்கான பெட்டியை படத்தில் காணலாம்.

# மும்பை ரயில் குண்டுவெடிப்பு முக்கிய துப்பு கிடைத்தது

மும்பை,மார்ச்16

மும்பை ரயிலில் வியாழக்கிழமை இரவு நடந்த குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக முக்கிய துப்பு கிடைத்துள்ளது என மகாராஷ்டிர முதல்வர் சுஷில் குமார் ஷிண்டே கூறியுள்ளார்.

இச்சம்பவம் குறித்து முதற்கட்ட விசாரணை நடந்து வருவதால் விளக்கமாக எதுவும் கூறமுடியாது எனவும் அவர் கூறினார்.

குண்டுவெடிப்பில் இறந்தோரின் எண்ணிக்கை 12 ஆக உயர்ந்துள்ளது.

காயமடைந்தோர் பல்வேறு மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சம்பவம் நடந்த இடத்தை வெள்ளிக்கிழமை பார்வையிட்டார் முதல்வர் ஷிண்டே. பின்னர் இச்சம்பவம் குறித்து அவரது தலைமையில் உயர்நிலைக் கமிட்டிக் கூட்டம் ஆய்வு செய்தது. (ஐ)

## குவைத்தில் மோசமான காலநிலை

# கடும் புழுதிப் புயலில் சிக்கி அமெ. துருப்புக்கள் தடுமாற்றம்

குவைத் சிற்றி,மார்ச்16

ஈராக் மீது போர் தொடுப்பதற்காக குவைத் பாலைவனத்தில் குவிக்கப்பட்டிருக்கும் அமெரிக்கத் துருப்புக்களுக்கு அங்கு நிலவும் காலநிலை பெரும் சவாலாக உருவெடுத்திருக்கிறது.

நேற்று முன்தினம் இரவு வீசிய கடும் புழுதிப் புயலினால் அமெரிக்கத் துருப்பினரும், பிரிட்டிஷ் படையினரும் பாதிக்கப்பட்டனர் என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

புழுதியை வாரி இறைக்கும் கடும் காற்று படையினர் தங்கியுள்ள கூடாரங்களை தாக்கியிருக்கின்றது. இராணுவ ஹெலிக்கொப்டர்கள், டாங்கிகள் மற்றும் கணனிகள் போன்ற சாதனங்கள் புழுதிப் புயலினால் பாதிப்படைகின்ற நிலை உருவாகியிருக்கிறது.

தொலைவில் இருக்கும் இடங்களைப் பார்க்க முடியாதவாறு எங்கும் புழுதி படிந்துள்ளது. படையினர் உறக்கம் இன்றி அந்தரிக்கின்றனர்.

கடும்புழுதிப் புயலுக்கு மத்தியில் வாகனம் செலுத்திச் சென்ற படைவீரர்களின் கண்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

பொஸ்ரன் மருத்துவமனையில் கண்களுக்கு பண்டேஜ் போடப்பட்ட நிலையில் சிகிச்சை பெறும் லெப்டினன்ட் தர சிப்பாய் ஒருவர் பின்வருமாறு கூறினார்.

"இயற்கைக்கு எதிராக யாரும் சண்டையிட முடியாது."

(ஐ)

# டில்லி ரயில் நிலையத்தில் 6 குண்டுகள்

புதுடில்லி,மார்ச்16

புதுடில்லி ரயில் நிலையத்தில் 6 வெடி குண்டுகள் வெள்ளிக்கிழமை கண்டுபிடிக்கப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டன.

சரியான நேரத்தில் இவை கண்டுபிடிக்கப்பட்டதால் நேரவிருந்த பெரிய ஆபத்து தவிர்க்கப்பட்டது.

புதுடில்லி ரயில்வே நிலையத்துக்கு அருகே உள்ள ஓட்டோ நிறுத்தத்தில் ஒரு பிளாஸ்டிக் பையில் இவை வைக்கப்பட்டிருந்தன. இதைப் பார்த்த கீர்த்தி ராம் என்பவர் பொலீஸாருக்குத் தகவல் அளித்தார். (ஐ)

# கார்கள் மோதி விபத்து; லண்டனில் ஐவர் மரணம்!

லண்டன்,மார்ச்16

வடக்கு லண்டனில் நேற்று அதிகாலை 1.20 மணியளவில் இடம்பெற்ற கார் விபத்தில் ஐந்துபேர் உயிரிழந்தனர்.

வடக்கு சேர்குலர் வீதியிலிருந்தும கிறீன் வீதியிலிருந்தும் வந்த, இரண்டு கார்கள் நேர் எதிராக மோதியதால் இந்த விபத்து நேர்ந்தது.

ஒரு காரின் சாரதியும் அதிலிருந்த மற்றொருவரும் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர்; அடுத்த காரில் இருந்த மூவர் பின்னர் மரணமாகினர்.

இறந்தவர்களில் எவருமே உடனடியாக அடையாளம் காணப்படவில்லை என்று லண்டன் பொலீஸ் தெரிவித்தது.

# காஷ்மீரில் கிராமத்துக்கு தீ!

ஜம்மு,மார்ச்16

ஜம்முகாஷ்மீர் மாநிலம் ரஜௌரி மாவட்டத்தில் தீவிரவாதிகள் சனிக்கிழமை ஒரு கிராமம் முழுவதற்கும் தீ வைத்தனர். ஆனால், இதில் யாருக்கும் காயமில்லை என்று அதிகாரப்பூர்வத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ரஜௌரி மாவட்டத்தின் மலைப்பகுதியில் உள்ளது, நெரேஜல் கிராமம். (ஐ)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

அன்னை மடியில்
27 - 03 - 1927



ஆண்டவன் அடியில்
15 - 02 - 2003

### அமரர் கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம்

*(சின்னத்தம்பி)*

(முன்னாள் நந்தினி ஸ்ரோர்ஸ் உரிமையாளரும். முன்னாள் கொடிகாம பிரபல வர்த்தகரும்)

எங்கள் குடும்ப குலவிளக்கின் மறைவையொட்டி நேரில் வருகை தந்து அன்னாரின் இறுதிக்கிரியைகளில் பங்குபற்றியோருக்கும், அஞ்சலிப் பிரசுரங்களை வெளியிட்டவர்களுக்கும், தொலைபேசி, கடிதமூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும் மற்றும் சகல வழிகளிலும் உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அன்னாரது வீட்டுக்கிருத்திய சபிண்டீகரண நிகழ்வுகள் இன்று (16. 03. 2003) ஞாயிற்றுக்கிழமை கச்சாயில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறுகின்றன. இந்நிகழ்வுகளிலும் மற்றும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*"இராஜபவனம்"*
*கச்சாய் தெற்கு, கொடிகாமம்.* (15607)

-குடும்பத்தினர்.

---

## விற்பனையாகிறது

**உயிரியல் - BIOLOGY**
'தொழிற்படும் தாவரம்-1'
பரீட்சை வழிகாட்டி வினா - விடைகள்
**எஸ்.செல்வநேசன்**

ஸ்ரீலங்கா புத்தகசாலை,
234, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 222 2573
(15603)

---

## தேவை

எமது ஸ்தாபனத்துக்கு அனுபவமுள்ள வெல்டர் லேத்மன் உடன் தேவை.

**சிவம் இரும்புத் தொழிலகம்**
370, மணிக்கூட்டு வீதி,
*(வெலிங்டன் சந்தி அருகில்)*
(15599) யாழ்ப்பாணம்.

---

## தேவை

கொம்பியூட்டர் ரைப்செற்றிங் தெரிந்த பக்க வடிவமைப்பாளர்கள் (பெண்பிள்ளைகள்) தேவை.

தொடர்பு:
**திருவள்ளுவர் அச்சகம்**
593, பருத்தித்துறை வீதி,
*(யாழ்.மாநகரசபை அருகில்)*
நல்லூர்,
(15590) யாழ்ப்பாணம்.

---



மட்டுவில் மத்தி கிராம உத்தியோகத்தர்

## திரு.க.வாமதேவன்

அவர்களின் 13 வருட சேவையினைப் பாராட்டியும் அவர் அண்மையில் தரம் I இற்குப் பதவி உயர்வு பெற்றமையையிட்டும் மட்டுவில் மத்தி மக்களால் நடத்தப்படும்

## சேவைநலன் பாராட்டு விழா

*காலம்:* 16-03-2003 ஞாயிறு பிற்பகல் 2.00 மணி (பழையநேரம்)

**இடம்: மட்டுவில் தெற்கு அ.மி.த.க.பாடசாலை**

| | |
|---|---|
| தலைமை: | திரு.சி.கந்தசாமி (ஓய்வுபெற்ற கிராம உத்தியோகத்தரும் சமாதான நீதிவானும்) |
| பிரதம விருந்தினர்: | உயர்திரு.க.கேதீஸ்வரன் (பிரதேச செயலர், தென்மராட்சி) |
| சிறப்பு விருந்தினர்கள்: | திரு.க.அருந்தவபாலன் (பிரதிநிதி - சிரான்) |
| | திரு.சு.சிவநாத் (அரசியற் பொறுப்பாளர், தென்மராட்சி) |
| கௌரவ விருந்தினர்கள்: | திரு.ந.பாலச்சந்திரன் (தலைவர், ப.நோ.கூ.ச., சாவகச்சேரி) |
| | டாக்டர் பே.பிலிப்ஸ் (சமாதான நீதிவான்) |
| | திரு.வே.துரைசிங்கம் (கிராம உத்தியோகத்தர்) |

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

மட்டுவில் மத்தி மக்கள் சார்பாக
விழாக்குழுவினர்.

(15586)

---

# உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம்

### உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம்

**தினம் ஒரு பரிசு - 35**

கடந்த 20ஆம் திகதி நடைபெற்ற ஆட்டத்தில் வெற்றியீட்டிய அணி எது? அதில் சிறப்பாட்டக்காரராக தெரிவு செய்யப்பட்டவர் யார்?

முழுப்பெயர் : ..............................
முகவரி : ..............................
அ. அட்டை. எண்: ..............................

இக்கேள்விக்கான விடையை இந்த கூப்பனில் எழுதி நாளை (17.03.2003) நண்பகல் 1மணிக்குள் தினம் ஒரு பரிசு - 35, உதயன் பணிமனை, 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு தபாலில் அனுப்பலாம் அல்லது உதயன் கிளைகளில் உள்ள இதற்கான பெட்டியில் நேரில் சேர்க்கலாம். உடனே விரையுங்கள்.

**உதயன்**

'அருணஸ்' பரிசுக் கூப்பன்களை வெல்வதற்கான கேள்விகள் விரைவில்







முதற் பரிசு
மைக்கிரோ பிசி தரும்
**கணனி**

2ஆம் பரிசு
சிங்கர் நிறுவனம் தரும்
**தொலைக்காட்சி**

Super Six பரிசு
லுமாலா நிறுவனம் தரும்
**சைக்கிள்கள்**

3ஆம் பரிசு
ஷார்ப் நிறுவனம் தரும்
**வானொலி**

விசேட பரிசுகள்
அருணஸ் ஸ்போட்ஸ் ஸ்பொட்டின்
**கூப்பன்கள்**

தினம் தினம் ஒரு பரிசு
ஏசியன் நிறுவனம் தரும்
**கழிவுக் கூப்பன்கள்**

ஆறுதல் பரிசுகள்
எக்ஸ்போ நிறுவனம் தரும்
விமான
**ரிக்கெட்டுக்கள்**

**தினம் தினம் ஒரு பரிசு:**
ஆட்டம் நடைபெறும் நாளுக்கு முதல் நாள் கேட்கப்படும் கேள்விக்கு நீங்கள் விடையளிக்க வேண்டும். சரியான விடை எழுதுபவருக்கு ஏசியன் நிறுவனம் வழங்கும் 1000 ரூபாவுக்கான கழிவுக் கூப்பன் கிடைக்கும்.

**விசேட பரிசுக் கூப்பன்கள்:**
முக்கிய ஆட்டங்களின்போது மேலதிகமாக ஒரு கேள்வி கேட்கப்படும். அதில் வெல்லும் அதிர்ஷ்டசாலிக்கு அருணஸ் ஸ்போட்ஸ் ஸ்பொட் வழங்கும் 500 ரூபா பெறுமதியான பரிசுக் கூப்பன் கிடைக்கும்.

**மாபெரும் இறுதிப் போட்டி:**
இது பெரும் பரிசுகளைக் கொண்டது. வெல்லும் 3 அதிர்ஷ்டசாலிகள் 1ஆம், 2ஆம், 3ஆம் பரிசுகளைப் பெறுவர். ஆறுதல் பரிசுகளாக 10 இருவழி விமானப் பயண ரிக்கெட்டுக்கள் காத்திருக்கின்றன. இதற்கான முடிவு திகதி மார்ச் 15 ஆகும்.

**விதிகள்:-**
ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்பலாம், போட்டோப் பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. அ.அட்டை பெறும் வயதுக்குக் குறைந்தவர்கள் பெற்றோரின் அ.அட்டை எண்ணைக் குறிப்பிடலாம், உதயன் மற்றும் உதயன் சார்ந்த நிறுவனங்களின் ஊழியர்கள், அவர்களது குடும்பத்தவர்கள் போட்டிகளில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள், நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியானது, முடிவுகள் குறித்து எந்த விளக்கங்களுக்கும் தொடர்புகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. அனைத்து முடிவுகளும் மார்ச் மாதம் 27ஆம் திகதிய உதயனில் அறிவிக்கப்படும்.

### உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம்

கிரிக்கெட் உலகக் கிண்ணம் - 2003

**மாபெரும் இறுதிப் போட்டி**

1. இறுதியில் கிண்ணத்தை வெல்லப்போகும் அணி எது?
(..............................)
2. இறுதியாட்டத்தின் ஆட்டநாயகன் யார்?
(..............................)

**உதயன்** 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
முடிவு திகதி: மார்ச் 15

முழுப்பெயர் : ..............................
முகவரி : ..............................
அ.அட்டை எண்: ..............................

# உதயன்

## ஈ.பி.டி.பிக்கு என்ன தகுதி?

கிழக்கு ஆழ்கடலில் விடுதலைப் புலிகளின் வர்த்தகக் கப்பல் கடற்படையினரால் அநியாயமாகத் தாக்கி அழிக்கப்பட்டதை அடுத்து தமிழர் பிரதேசத்தில்-குறிப்பாக இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள தமிழர் தாயகத்தில் - பதற்றநிலை உருவானது.

இதையடுத்து, இராணுவக்கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் அரசியல் பணியில் ஈடுபட்டிருந்த தமது உறுப்பினர்களில் கணிசமானோரை விடுதலைப் புலிகள் வன்னியில் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கு மீள அழைத்துக்கொண்டனர்.

அதற்கான காரணங்களை புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் செய்தியாளர்களிடம் விளக்கினார்.

"கப்பல் தகர்ப்புச் சம்பவத்தை அடுத்து எழுந்துள்ள அரசியல் நிலைமைகள் குறித்து எமது போராளிகளுக்கு விளக்க விரும்பினோம். அத்தோடு, அங்கு ஏற்பட்டுள்ள பதற்ற நிலைமை காரணமாக அரச துருப்புக்களே எமது உறுப்பினர்கள் மீது தாக்குதல் நடத்தக்கூடிய ஆபத்தும் இருந்தது. அத்தகைய நிலைமை ஏற்படாமல் தவிர்க்கவும் விரும்பினோம். இந்தக் காரணங்களினால்தான் கணிசமான எண்ணிக்கைப் போராளிகளை இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் இருந்து எமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கு எமது தலைமைப்பீடம் மீள அழைத்தது." - இப்படி விவரித்தார் அன்ரன் பாலசிங்கம்.

அவரது இந்த விளக்கம் வெளியாவதற்கு முன்னர் - முந்திக்கொண்டு முந்திரிக்கொட்டைபோல இவ்விடயம் குறித்து 'கிண்டல்' கலந்த அறிக்கை ஒன்றை ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் ஜெகன் பத்திரிகைகளுக்கு அனுப்பிவைத்தார்.

அந்த அறிக்கை, ஈ.பி.டி.பியின் அரசியல் நிலைப்பாட்டையும், நப்பாசையையும், அவர்கள் காணும் பகல் கனவையும் அம்பலப்படுத்தப் போதுமானது.

'வெளியேறச் சொன்னவர்கள், வெளியேறிச் செல்கின்றனர்'-என்ற தலைப்பில் அந்த அறிக்கை வெளியாகியிருந்தது.

அதில் சில விடயங்களை ஈ.பி.டி.பி. திட்டவட்டமான வசனங்களில் வெளிப்படுத்தாவிட்டாலும் அந்த அறிக்கையின் ஊடாக அது சாடைமாடையாகச் சுட்டிக்காட்ட முயலும் அம்சங்கள் நோக்கற்பாலவை.

★ "எங்களைக் குடாநாட்டிலிருந்து வெளியேறச் சொன்னவர்கள், இப்போது தாங்களே குடாநாட்டிலிருந்து வெளியேறுகின்றார்கள்."

★ "குடாநாட்டிலிருந்து எம்மையும் எம்மைச் சார்ந்தவர்களையும் பலவந்தமாக வெளியேறச் சொன்னவர்கள் இப்போது தங்களுக்கு எதிராகப் பழி வாங்கும் செயற்பாடுகள் எதுவும் இடம்பெறலாம் என அஞ்சுகின்றனர். ஆனால், நாம் பழிவாங்கமாட்டோம்."

- இவை இரண்டும் ஈ.பி.டி.பி.அறிக்கையில் இடம்பெற்ற அம்சங்கள். தீவகத்திலிருந்து ஈ.பி.டி.பியினரைத் துரத்த வேண்டும் என்று துடியாய்த் துடித்தவர்கள் - துடித்துக் கொண்டு இருப்பவர்கள் - குடாநாட்டை விட்டு வெளியேறிச் சென்ற அல்லது செல்லும் புலிகள் அல்லர். குடாநாட்டு மக்களே. குறிப்பாகத் தீவக மக்களே. அதை ஈ.பி.டி.பியினர் முதலில் புரிந்துகொள்ள வேண்டும்.

ஏதோ சந்திரிகாவின் ஆட்சிக்காலத்தில் ஜனநாயகத்தின் பெயரால் தாங்கள் கோலோச்சிய காலம் மீண்டும் திரும்பி வந்துவிட்டது போலவும், அப்படி அதிகாரமிடுக்கு தங்களுக்கு வந்துவிட்டாலும் கூட, தாங்கள் யாரையும் பழிவாங்க விரும்பாத தூய ஜனநாயகவாதிகள் போலவும் ஈ.பி.டி.பியினரின் அறிக்கை அமைந்திருக்கின்றது.

அதிகாரக் கனவில் அதிகாரம் வந்துவிட்டதாகக் கருதி மனப்பால் குடிக்கிறார் ஈ.பி.டி.பி. ஜெகன்.

'அண்ணன் எப்போது சாவான்; திண்ணை எப்போது காலியாகும்' என்று காத்துக்கிடக்கும் தம்பியின் நிலையில் ஈ.பி.டி.பி. ஆவலோடு நாக்கைத் தொங்கப் போட்டுக்கொண்டு காத்துக்கிடக்கின்றது என்பதை இந்த அறிக்கை துலாம்பரப்படுத்துகின்றது.

எப்போது புலிகள் குடாநாட்டை விட்டு வெளியேறுவார்கள், அரச துருப்புகளின் முகாம் காலடிகளில் சுருண்டு கிடக்கும் தங்களது நிலைகளை குடாநாடு முழுவதும் பரந்து கடை விரிக்கலாம் என்று காத்துக் கிடப்பது அப்பட்டமாகத் தெரிகின்றது.

விடுதலைப் புலிகள் மிகப்பெரிய இராணுவ சக்தி என்றாலும், தமிழ் மக்களின் ஏகோபித்த விருப்புக்குத் தலை வணங்குபவர்கள். தமிழ் மக்களும் அமைதியையும் சமாதானத்தையுமே இன்று விரும்புகின்றார்கள். அவர்களுககு அதுதான் அவசியமானது என்பதைப் புரிந்தவர்கள் புலிகள். அதனால்தான் கப்பல் தகர்ப்பை அடுத்து ஏற்பட்ட பதற்றத்தில் இராணுவப் பிரதேசத்தில் இராணுவத்துடன் வீண் மோதல் ஏற்படாமல் இருக்கத் தமது உறுப்பினர்களை வாபஸ் பெற்றுக்கொண்டு மோதலைத் தவிர்த்தார்கள். ஆயுதபலம் வலுவாக இருந்தும் மக்கள் மனதை அறிந்ததால் மக்கள் விரும்பியதைச் செய்தார்கள்; செய்கின்றார்கள்.

ஆனால், ஈ.பி.டி.பி. அப்படியல்ல. அவர்கள் செய்த அராஜகங்கள் காரணமாக தீவகம் உட்பட சகல இடங்களிலும் இருந்தும் அவர்களைத் துரத்தியடிக்க மக்கள் ஒன்று திரண்டு முனைகின்றார்கள். ஆனால், ஈ.பி.டி.பியோ ஜனாதிபதி குமாரதுங்கவின் ஏவலர்களாக - அவர் வழங்கிய அரச துருப்புகளின் உதவி, பாதுகாப்போடு - மக்கள் விருப்பத்துக்கு மாறாக மக்களோடு மோதிக்கொண்டு - அங்கு ஒட்டிக்கொண்டு பிய்ச்சல், பிடுங்கலில் இன்னும் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றது.

அத்தகைய குழு, புலிகள் குறித்து இப்படி விமர்சிப்பது எந்தத் தகுதியோடு? அதுதான் புரியவில்லை.

## திருநெல்வேலியில் அடுத்த மாதம் முதல் தேசிய சேமிப்பு வங்கிக்கிளை இயங்கும்

வலி.வடக்கு,மார்ச்16

தேசிய சேமிப்பு வங்கியின் கிளையொன்று அடுத்தமாதம் முதல் திருநெல்வேலியில் இயங்கவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அடுத்த மாதம் 6ஆம் திகதி முதல் மேற்படி வங்கிக்கிளை சம்பிரதாயபூர்வமாக இயங்க ஆரம்பிக்கும்.


ஆடியபாதம் வீதியில் நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைமை அலுவலகத்துக்கு அண்மையில் உள்ள தனியார் கட்டடத்தில் வங்கிக்கிளை இயங்கவுள்ளது.

இதேநேரம் எதிர்வரும் 25ஆம் திகதி முதல் சம்பிரதாயபூர்வமற்ற முறையில் வங்கிச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் -

அன்றுமுதல் பணவைப்புக்களை ஏற்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை - வங்கியின் சேவை சம்பந்தமான பிரசாரம் உரிய உத்தியோகத்தர்களினால் அரச திணைக்களங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (எ-86)

## மாதர் மான்மியம்



மெல்லியல் அந்த நங்கை
மிதிலை நற்செல்வி போல்வாள்
நல்ல பேர் பண்பில் மிக்காள்
நலம்பெறு குணத்தில் குன்று
வல்லவன் வடிவில் மிக்கான்
வரதனை முடித்து வைத்தார்
நல்லவனாய் நடித்த காளை
நாளும் கால் கசிப்பை உண்டான்
பொல்லாத காலம் என்று
பூவையோ பொறுத் திருந்தாள்
எல்லாமே பயன் அற்றுப்போக
ஏந்திளை உண்டாள் நஞ்சு!

- விகடகவி.

# ஒன்றுபட்ட சக்தியாக நிமிர்ந்து நிற்பின் உரிமைகளை வென்றெடுக்க முடியும்!

## மாமனிதர் குமாரின் அஞ்சலிக் கூட்டத்தில் வெண்ணிலவன் தெரிவிப்பு

வடமராட்சி,மார்ச்16

ஒருசிலரைத் தவிர, அனைவரும் ஒரே இனம் - ஒரே தலைமையில் ஒன்றுபட்டுள்ளார்கள். தமிழ்க்கட்சிகள் ஒன்றுபட்டது போல ஏனையோரும் ஒன்றுபட்டு உழைக்கவேண்டும். ஒன்றுபட்ட சக்தியாக நிமிர்ந்து நிற்கும் போதுதான் எமது உரிமைகளை வென்றெடுக்கமுடியும்.

- இவ்வாறு மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் மூன்றாம் வருட நினைவஞ்சலிக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய விடுதலைப் புலிகளின் அரசியல்துறையைச் சேர்ந்த வெண்ணிலவன் கூறினார்.

நெல்லியடி ராஜலக்சுமி திரையரங்கில் சட்டத்தரணி இ.உருத்திரா தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் வெண்ணிலவன் மேலும் தெரிவித்ததாவது:-

வீரத்தமிழன் குமார் பொன்னம்பலம் சிங்கத்தின் குகையிலிருந்து சீறி எழுந்தவர். அவர் பற்றிக கேள்விப்பட்டிருக்கிறோம். அவரது குரலை ஊடகங்கள் மூலம் அறிந்தோம். பேரினவாதக் குகையிலிருந்து ஓங்கி ஒலித்த தமிழனின் குரல் குமார் பொன்னம்பலத்தினுடையது.

சிங்கள தேசத்துக்கு தமிழின விடுதலை உணர்வை தெளிவாக - ஆணித்தரமாக - குமார் பொன்னம்பலம் எடுத்துச் சொல்லியிருந்தார். நேர்மையான - சத்தியத்துக்கும் நீதிக்குமான - இனத்தின் சுபீட்சமான வாழ்வுக்காக நடைபெற்றுவரும் விடுதலைப் போராட்டத்தையும் உலகத் தமிழ் மக்களின் விடிவுக்காக எமது தேசிய விடுதலைப் போராட்டத்தையும் உலகறியச் செய்தவர் இவர்.

எமது இழப்புக்கள், இன்னல்களை நேர்மையோடும் நெஞ்சுறுதியோடும் குமார் உலகுக்கு எடுத்துச் சொன்னார். மக்களுக்கு உதவுவதோடு, விடுதலைக்காக போராடுகிறோம் எனப் பலர் சொன்ன போதிலும் இதற்காக அவர் தன்னையே அர்ப்பணித்தார்.

ஆயுதம் ஏந்தாத விடுதலை வீரனாக இருந்து சிங்கள தேசத்துக்கு தமிழர் உரிமைகளை எடுத்துச் சொன்ன குமார், தமிழர் உரிமைகளைப் புரிந்துகொள்ளாத பேரினவாதிகளால் கொடூரமாக - மனித நாகரிகத்துக்கு - அப்பால் சாகடிக்கப்பட்டுள்ளார்.

இம்மண்ணிலே பிறந்து, தேசத்துக்காக வாழ்ந்த வீரர்களின் சாவு ஒருபோதும் வீணாகாது. இது ஒரு வரலாறு. சிந்தப்பட்ட குருதிக்கு ஒரு வரலாறு நிச்சயம் பிறக்கும். அது ஈழத்தமிழர் கௌரவமான வாழ்வு வாழ வழிபிறக்கும்.

கொடுமையான போரை நாங்களும் விரும்பவில்லை. ஒவ்வொரு மக்களையும் தாய் மண்ணையும் நாம் பாசத்துடன் நேசிக்கின்றோம். அதற்காக புலிகள் சாவை வாழ்வாக ஏற்றுள்ளார்கள்.

அடிப்படை மனித உரிமைகளை நாம் கேட்டு நிற்கிறோம். கௌரவமாக, மதிப்போடு வாழவேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும்.

ஒன்றுபட்ட சக்தியாக, பலம்பொருந்திய சக்தியாக நின்றால்தான் பேரினவாதிகளுக்கு சாவுமணி அடிக்க முடியும். எந்த மக்களுக்காக விடுதலை உணர்வோடு சுதந்திரத்துக்காக குமார் பொன்னம்பலம் குரல் கொடுத்தாரோ அம்மக்களுக்கு நல்ல வாழ்வு கிடைக்கவேண்டும். தமிழீழ விடுதலைக்கு ஒரே சக்தியாக நின்று உழைப்பதே குமாருக்கு நாம் செய்யும் அஞ்சலியாகும் - என்றார்.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி பேசுகையில் கூறியதாவது:-

தமிழர்களின் தலைவர் பிரபாகரன் என்றும், விடுதலைப் புலிகள்தான் தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகள் என்றும் அந்தக் காலத்திலேயே சொன்னவர் குமார் பொன்னம்பலம். நாம் இப்போது நடத்தும் அரசியலுக்கு தளம் இட்டவர் அவர்.

கைதிகளின் விடுதலைக்காக 1985ஆம் ஆண்டு வழக்குப் பேசி அவர், பலருக்கு விடுதலை பெற்றுக்கொடுத்தார். அவர் இறந்தபோது களுத்துறை சிறையிலும் கறுப்புக்கொடி பறந்தது. குமார் பொன்னம்பலம் இன்றிருந்தால் களுத்துறைச் சிறைச் சாலையில் இன்று உண்ணாவிரதம் நடந்திராது - என்றார்.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் உபதலைவர் சி.வீ.கே.சிவஞானம் தனது உரையில் -

தமிழ் மக்களின் விடுதலையை - தன்னாட்சியை - உலகுக்கு எடுத்துச் சொன்ன கட்சி தமிழ்க் காங்கிரஸ் கட்சிதான் - என்றார்.

தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் மற்றோர் உபதலைவர் ஆர்.இ.ஆனந்தராஜா, நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அதிபர் வி.சேதுராஜா, கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி அதிபர் வே.சிவசிதம்பரம் உட்பட பலர் உரையாற்றினார்கள். ச.செவ்வந்திநாதர் நன்றி தெரிவித்து உரையாற்றினார்.

(எ-173)

## சீருடைத் துணி பெறுவதில் இடம்பெயர்ந்தோர் சிரமம்

யாழ்ப்பாணம்,மார்ச்16

பாடசாலைச் சீருடைத் துணி பெறுவதில் மீளக் குடியமர்ந்தோர் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றார்கள்.

மீளக்குடியமர்ந்த குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் தாம் இடம்பெயர்ந்து வசித்தபோது கல்விகற்ற பாடசாலையில் சீருடைத்துணி பெறாததை உறுதிப்படுத்தி அப்பாடசாலை அதிபரிடமிருந்து உறுதிப்படுத்தல் கடிதம் பெற்றுவருமாறு பணிக்கப்படுகின்றனர்.

இதனால் கொழும்பு, கண்டி, மாத்தறை மற்றும் வன்னிப் பகுதிகளில் வசித்துவிட்டு மீளக்குடியேறியோர் மீண்டும் அப்பிரதேசத்திற்குச் சென்று வருவதில் பெரும் சிரமத்தினை எதிர்நோக்கவேண்டி உள்ளது.

குறிப்பாக, இரு நூறு ரூபா பெறுமதியான பாடசாலைச் சீருடையைப் பெறுவதற்காக 500ரூபாவிற்கு மேல் செலவு செய்யவேண்டி உள்ளதாகவும், இதனால் பலர் சீருடைத் துணியைப் பெறுவதற்கு முயற்சிக்காது விட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகினறது. (ஐ-12)

### நாளை

பங்குனி 03
திங்கட்கிழமை
(17.03.2003)
திதி : சதுர்த்தசி
மாலை 6.59 வரை.
நட்சத்திரம: பூரம்
வைகறை 5.14 வரை.
சுபநேரம் : 12.20 - 1.50
ராகுகாலம்: 7.50 - 9.20
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

ஒரு கருத்து மக்களைப் பற்றிக்கொண்டால் அது பெரும் சக்தியாக உருவெடுக்கும்.


### பரம கருணாநிதியே சரணம்!

*கண்ணிய வாழ்வருள்வாய் கயிலை மலை நாதனே!*
*புண்ணியஞ் செய்த பயனால் பூமியில் கண்டு தொழவே*
*எண்ணிய கருமந் தனையே எழிலுற முடிக்கக் கருதி*
*பண்ணிய பாவம் நீக்கிடும் பரம கருணாநிதியே சரணம்!*

- பரமபதம் பணிவோன்.

(வண்ணை வைத்தீஸ்வரன் ஆலய பதினேழாம் நாள் திருவிழா இன்று)



## பிள்ளைகளின் கருத்துக்களுக்கும் செவிகொடுப்போம்!



இந்த விடயத்திற்கான உலகச் சிறுவர் நிலையின் மையப் பொருள், "சிறுவர் பங்குபற்றுதல் ஆகும்." இதன் நோக்கம் சிறுவர்களினதும் வளரிளம் பருவத்தினரதும் வாழ்க்கையைப் பாதிக்கின்ற தீர்மானங்களை எடுக்கும்போது, இவர்களின் எண்ணக் கருத்துக்களை கவனத்திலெடுப்பதற்கும் வெளிக்கொணர்வதற்கும் வளர்ந்தவர்களுக்கு இருக்கக்கூடிய கடப்பாட்டினை உணர்த்துவதாகும்.

- கோபி ஏ.அனான்
ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம்
*(நன்றி உலகச் சிறுவர் நிலை - 2003)*

உங்கள் தொடர்புகளுக்கான எங்கள் முகவரி:
மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு,
அறை எண் - 30,
யாழ்.போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம். : T.P.:222- 2261 Ext.274

*வெளியீட்டு அனுசரணை:* SC (UK)
(சி-26979)

உ

## புத்தூர் அருள்மிகு காரைக்கூடல் வைரவர் தேவஸ்தான
## வருடாந்த அலங்கார உற்சவம்

அடியார்களே!

எதிர்வரும் பங்குனி 4ஆம் நாள் 18-03-2003 செவ்வாய்க்கிழமை பங்குனி உத்தர நன்னாளில் எம்பெருமானின் வருடாந்த அலங்கார உற்சவம் ஆரம்பமாகும். அன்றையதினம் சங்காபிஷேகமும் பங்குனி உத்தரவிழாவும் நடைபெறும்.

விழா தினமும் காலை 8.00 மணிமுதல் நண்பகல் 12 மணிவரையும் பிற்பகல் 1.00மணிமுதல் மாலை 6.00 மணி வரையும். விழாநாள்களில் மாலை 6மேணிக்கு அருள்மிகு வைரவப் பெருமான் திருவீதியுலா வருங் காட்சி இடம்பெறும்.

27-03-2003 - பங்குனி 13 வியாழக்கிழமை
சங்காபிஷேகம்

29-03-2003 - பங்குனி 15 சனிக்கிழமை
நண்பகல் 12.00 மணிக்கு தீர்த்தத் திருவிழா

கிரியைகளும் விழாக்களும் பிரதிஷ்டா வித்தகர்
**பிரம்மஸ்ரீ வே.நடராசாக் குருக்கள்**
தலைமையில் நடைபெறும்.

அடியார்கள் அனைவரும் வைரவப் பெருமானைத் தரிசித்து இஷ்ட சித்திகளைப் பெற்றேகுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

காரைக்கூடல்வைரவர் தேவஸ்தானம்,
புத்தூர்.

(15245)

அறங்காவலரும்,
உபயகாரரும்,
பொதுமக்களும்.

## ஈர விழிகளுடன்
## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணுலகில் 30 - 10 - 1942



சிவன் திருவடி நிழலில் 26 - 03 - 2002

## அமரர் Dr.கதிர்காமு கந்தசாமி D.A.M. (Cey.)

திதி: 16-03-2003

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
வானுறையும் தெய்வமாகிவிட்ட

*உங்கள் ஆத்மா சாந்தியடைய*
*இறைவன் திருவருள் வேண்டிப் பிரார்திக்கின்றோம்.*
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

- குடும்பத்தினர்.

"சிவகாமி"
15/13, மாரி அம்மன் வீதி,
திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம்..

(15613)

## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம் 17 - 04 - 1933



மறைவு 26 - 03 - 2002

## அமரர் சபாபதிப்பிள்ளை வேலாயுதம்

(முன்னாள் மொறட்டுவ நாதன்ஸ் உரிமையாளரும். பிரபல வர்த்தகரும்)

*அன்பே ஆருயிரே எமது அருமை நாயகரே!*
*பண்பின் திருவுருவே பாசத்தின் உறைவிடமே!*
*எமது குடும்பத்தின் ஒளிவிளக்கே – எம் அருமை ஐயாவே!*
*நேசமோடும் பாசமோடும் எமை அரவணைத்து முத்தமிட்டு*
*வளர்த்து வந்தீர்*
*ஓராண்டென்ன ஓராயிரம் ஆண்டுகள் சென்றாலும்*
*உம் நினைவுகள் எம்மை விட்டுப் பிரியாது!.*

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைத் தினம் தினம் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

*"தங்கவாசா"*
*சுழிபுரம் கிழக்கு,*
*சுழிபுரம்.*

(15619)

## வலயக் கல்வி அலுவலகம், வடமராட்சி
# கேள்வி அறிவித்தல்


கீழே குறிப்பிட்டுள்ள வேலைக்கான கேள்விகள் கேள்விச் சபைத் தலைவரும், வடமராட்சி வலய கல்விப் பணிப்பாளருமாகிய என்னால் 2003-04-03ஆம் திகதி முற்பகல் 10.00மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்றையதினம் முற்பகல் 10.30 மணிக்கு திறக்கப்படும். அச்சமயம் விரும்பும் கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்து மூலம் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி சமுகமளிக்கலாம்.

| *பாடசாலையின் பெயரும் வேலை விவரமும்* | *மீளளிக்கப்படாத வைப்புப் பணம்* | *மீளளிக்கப்படும் வைப்புப்பணம்* |
|---|---|---|
| யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை 40X25 க.பொ.த. (சா/த) விஞ்ஞானகூடக் கட்டடம் | ரூபா 500 | ரூபா 10,000 |

01. மேற்படி வேலைக்கு இக்ராட் (ICTAD) நிறுவனத்தில் தரம் எம் 07ம் அதற்கு மேற்பட்ட தரத்திற்கு பதிவு செய்து கொண்டவர்களும் விண்ணப்பிக்கலாம்.
02. கேள்விப்பத்திரங்களில் பெறுமதி சேர்க்கப்பட் வரி (VAT) சேர்க்கப்பட்ட கேள்வித்தொகை, பெறுமதி சேர்க்கப்பட்ட வ்ரி (VAT) சேர்க்கப்படாத கேள்வித்தொகை என்பன தனித்தனியாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.
03. வேலைக்கு அமைவாக மேற்சொல்லப்பட்ட கேள்விப் பணத்தை தங்களுக்கு வசதியான வங்கியிலிட்டு, வலயக் கல்விப் பணிப்பாளர், வடமராட்சி என்ற பெயரில் வங்கிக் கட்டளையைப் (Pay Order) பெற்று வடமராட்சி வலய பாடசாலை வேலைகள் கிளையில் சமர்ப்பித்து 2003-03-17ஆம் திகத 'தொடக்கம் 2003-03-21ஆம் திகதி வரை கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
04. இவ்வேலைக்கான கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகள் பூர்த்தி செய்யப்பட்டு மூலப்பிரதியும், இணைப் பிரதியும் தனித்தனி கடித உறைகளில் இடப்பட்டு உறைகளின் இடப்பக்க மேற்பக்கத்தில் வேலையின் விவரம் எழுதப்படல் வேண்டும். தனித்தனியாக உறைகளில் இடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் இரண்டையும் பிறிதொரு உறையில் இட்டு ஒட்டப்பட்டு, ஒப்பந்தகாரரின் முத்திரை இட்டு *வலயக் கல்விப்பணிப்பாளர், வலயக் கல்வி அலுவலகம், வடமராட்சி, புலோலி* என முகவரியிட்டு வலயக் கல்வி அலுவலகத்தில் வலயக் கல்விப்பணிப்பாளரின் அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் 2003-04-03ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு முன்னர் இடப்படல் வேண்டும். மேற்குறிப்பிட்ட கால நேரத்திற்குப் பிந்திய கேள்விப்பத்திரங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
05. கேள்விச் சபையால் தெரிவு செய்யப்படும் ஒப்பந்தகாரர் தெரிவு செய்யப்பட்ட திகதியிலிருந்து பத்து நாள்களுக்குள் கேள்விச் சபைத் தலைவருடன் வேலைக்கான ஒப்பந்தம் ஒன்றைச் செய்து, நான்கு மாதங்களுக்குள் வேலையைப் பூர்த்திசெய்து கையளித்தல் வேண்டும். எவ்வித கால தாமதமும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. சரியாக நிரப்பப்படாத கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.
06. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பார்வையிடுவதுடன் இவ்வேலை தொடர்பான மேலதிக விவரங் களை வடமராட்சி வலய கல்வி அலுவலக பாடசாலை வேலைகள் கிளையில் பெற்றுக்கொள்ளலாம் என அறியத்தருகிறேன்.

**வே.தி.செல்வரத்தினம்**
கேள்விச் சபைத் தலைவர். வலயக் கல்விப் பணிப்பாளர். வடமராட்சி

*பாடசாலை வேலைகள் கிளை,*
*வலயக் கல்வி அலுவலகம், வடமராட்சி.*




**Canadian College of Business & Computers**
130 Bloor St,West , Suite 901 Toronto, Ontario, Canada, M5S 1N5 Phone 1-416413-1234 Fax: 1-416-413-0314 e-mail: roselyn@ccbc.ca

A n opportunity to be a part the world's next trillion-dollar industry!

Fiber Optics Engineering at CCBC is suppored by Ontario Photonics Education and Association (OPETA), a think tank comprising of the best academic minds of Canda's Universities and internationally reowned industry leaders like JDS Uniphase.

All in Toronto! A Trendy, upscale and a very cool place to learn. Supported by intensive English language programs, guidance counsellors speciallized in on-the-job training with 10-start dates throughout the year.

**Scholarship Application Requirements**

1. Passport Copy
2. Birth Certificate
3. Educational Certificates / Transcripts
4. Employment Letter, if any
5. Fee of US $10 by Demand Draft in favour of "Canadian College of Business & Computers"
6. Proof of sufficient funds for tuition payment and living expenses; (estimated tuition fees: US $1,500 to US $8,000 depending on scholarship awarded; living expenses for two years - US $10,000)



Aptitute Test and Interviwe:
March 22 and 23
Location: BMICH, Colombo 07

**Scholarship Application Submission Deadline:**

March 21, 2003
Ms. Anushya
Ceylinco Consultancy & Allied Services
315, R.A. De Mel Mawatha, Colombo 03
Tel: 074-710240

WWW.CCBC.CA

# நூல் வரிசை



யாழ்ப்பாணத்தில் 'மானசதீபம்' என்னும் பெயருடைய சஞ்சிகை ஒன்று வெளிவந்துள்ளது. இளைஞர்களின் கூட்டு முயற்சியால் உருவான இந்த சஞ்சிகை இங்கு வெளிவருகின்ற சஞ்சிகைகளைவிட சற்று வித்தியாசமானதாக அதாவது அவர்களே குறிப்பிடுவதுபோல 'மனிதனை மனிதனாக்க முயலும்' பணியில் தன்னை முழுமையாக அர்ப்பணிப்பதற்காகப் பிரசவித்துள்ளது.

நம்பக்கையோடு... மானசதீபம் தன்னை இவ்வாறு உணர்த்துகறது.

'இது ஒற்றைத் தீபமல்ல. இலக்கியம், உளவியல், ஆத்மிகம்...
எனப் பலமுகம் கொண்டு
ஒளி செய்யும் அடுக்குத் தீபம். மனங்களின் உள் ஒளி
ஏற்றப்பட்டால் மாசற்ற மாநிலம் உருவாகும். அதனால்,
மனதினைச் செப்பம் செய்யும் விடயங்களை
மானச தீபம் அள்ளி வீசும்; மனிதனை மனிதனாக்க முயலும்.'

★ ★ ★ ★



திருமறைக் கலாமன்றத்தினால் ஆரம்பிக்கப்பட்ட ஓவியக் கலைவட்டத்தினரால் 'ஓவியா' என்ற மாதாந்த சஞ்சிகை ஒன்று வெளியிடப்பட்டு வருகின்றது.

"ஓவியக்கலையை அழியவிடாது பாதுகாப்பதற்காக அக்கலை சம்பந்தமான விடயங்களை உள்ளடக்கி அத்துறை சார்ந்த கலைஞர்களின் கலைத்திறமையை எடுத்தியம்பும் வகையில் வெளிவரும் இந்தச் சஞ்சிகையானது, யாழ்ப்பாணக் குடாநாட்டின் ஓவியத்துறை வளர்ச்சியில் குறிப்பிட்டுக் கூறக்கூடிய பங்கினை வகிக்கும் என்பதில் எவருக்குமே சந்தேகம் இல்லை.

'ஓவியா'வின் மார்ச் மாத இதழில் அதன ஆசிரியர் குறிப்பிடும்போது"

தென்னகத்து ஓவியர்களிடையேயும் மாணவர்களிடையேயும் இருந்துவரும் ஒருமைப்பாடும் அர்ப்பணிப்புத் தன்மையும் எமது மாணவர்களிடையே இல்லை. அத்துடன் எமது மாணவர்கள் தொழில் வாய்ப்பைக் கருத்திற்கொண்டே உயர்கல்வியைக் கற்கின்றனர். இவைகளே ஓவியக்கலை வளர்ச்சிக்கு பெரிதும் தடையாக இருக்கின்றன - என்கின்றார்.

இதன்மூலம், ஓவியக்கலை எமது பிரதேசத்தில் பெரிதாக வளர்ச்சியடையவில்லையே என்ற ஆதங்கத்தையும், இக்கலையை வளர்க்கவேண்டும் என்ற முனைப்பையும் 'ஓவியா' கொண்டிருப்பதை நோக்கலாம்.

- அற்புதா

★ ★ ★



யாழ்பாணக் குடாநாட்டின் இளம் இலக்கியப் படைப்பாளிகளுக்கு களம் அமைத்துக் கொடுப்பதற்குப் போதியளவு இலக்கிய சஞ்சிகைகள் வெளிவரவில்லை என்ற இலக்கிய விமர்சகர்களின் நீண்ட நாள் ஆதங்கத்தை ஓரளவுக்காவது போக்கக்கூடிய வகையில் இப்போது சில வாராந்த, மாதாந்த காலாண்டு சஞ்சிகைகள் வெளிவரத்தொடங்கியிருக்கின்றன.


அந்த வரிசையில் மாதாந்த சஞ்சிகையாக தற்போது வெளிவந்து கொண்டிருக்கும் 'அம்பலம்' சஞ்சிகை குறிப்பிடக்கூடியது.

இளம் எழுத்தாளர்களாக தம்மை வளர்த்துக்கொண்டிருக்கின்ற த. பிரபாகரன், கு. லக்ஷ்மணன் ஆகிய இருவரும் இணைந்து முன்னெடுத்துள்ள இந்த நன்முயற்சி பாராட்டத்தக்கது.

கவிதை, சிறுகதை, கட்டுரைகள், புதிர்ப்போட்டி என்பவற்றோடு மேலும் பல அம்சங்களை உள்ளடக்கி வெளிவரும் 'அம்பலம்' இலக்கியகர்த்தாகளுக்கும் இளம் எழுத்தாளர்களுக்கும் நல்ல களமாய் அமையும் என்பதில் ஐயமில்லை.

'இலக்கியக்கனதி' என்ற இலக்குப் பற்றி அதிக அக்கறை கொள்வதால் கனதியான படைப்புக்களை பழைய, புதிய ஆக்க கர்த்தாக்களிடம் 'அம்பலம்' வேண்டுகிறது. மாணவர்கள் பெரு மெடுப்பில் அம்பலத்தில் எழுதப்பட்டிருப்பது ஆனந்தமாயிருக்கிறது என்று 'அம்பலம்' செப்ரெம்பர் மாத இதழில் அதன் ஆசிரியர் குறிப்பிட்டிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

★ ★ ★ ★




திரைக்கலைச் சங்கமான சலனசித்திரம் - யாழ்ப்பாணம் அமைப்பினால் 'யாழ்' என்ற பெயரிலான கலைப் பத்திரிகை ஒன்று வெளியிடப்பட்டு வருகிறது. அப்பத்திரிகையின் பெரும்பகுதி திரைப்படம் சார்ந்த செய்திகளையும் கட்டுரைகளையும், விமர்சனங்களையும் தாங்கி வெளிவருகின்றமை குடாநாட்டிலுள்ள திரைப்பட ஆர்வலர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும். அர்த்தம், அழகு, உயிர் மூன்றும் இணையின் அதுவே தரமான திரைப்படம் என்ற தலைப்பில் யாழின் இதழில் எழுதப்பட்டுள்ள கட்டுரை சிந்தனையைத் தூண்டுவதாகும். அது பின்வருமாறு ஆரம்பிக்கிறது. "தரமான திரைப்படம் ஒன்றை ஒரு விமர்சகர் ஒரு பார்வையாளர் தன்னிலை சார்ந்தே நோக்குகிறார். சிலருக்குப் பிடித்தவை இன்னும் சிலருக்குப் பிடிக்காமற் போகலாம். அப்படத்திற்கு அவரவர் இடும் புள்ளி (Marks) ஆளுக்காள் மாறுபடலாம். இது இயல்பானதே. இருப்பினும் பலமொழி பேசும் உலகில் மிகப் பெரும் எண்ணிக்கையானோர் விரும்பி ஏற்கும் விதமாக ஒரு திரைப்படத்தை உருவாக்க முடியும் என்று அது தொடர்கிறது. மேலும் யாழின் இதழ்களில் உலகத் திரைப் படக் காவியங்களின் வரிசை இலங்கைத் தமிழ்த் திரைப்படங்களின் விவரங்கள், கவிதைகள், கன்னத்தில் முத்தமிட்டால் பட இயக்குநர் மணிரத்தினத்திற்கு இராகவன் எழுதிய கடிதமாக பிரசுரமாகியுள்ள விமர்சனம் உள்ளிட்ட பல விடயங்கள் யாழ். இதழில் அடங்கியுள்ளன.

- எம். எஸ். எஸ். கீர்த்தி.

★ ★ ★ ★




களனிப் பல்கலைக்கழக மொழியியல்துறையைச் சார்ந்த மொழியியல் பேராசிரியரான டபிள்யூ. எஸ். கருணாதிலக மொழியியல் துறையில் ஆழ்ந்த அறிவும் ஈடுபாடும் கொண்டவர். பல மொழிகளைக் கற்ற அறிஞர்கள் வரிசையில் நம் சம காலத்தில் வாழ்பவர்களில் குறிப்பிடத்தக்க ஒருவராக இவர் உள்ளார். ஆங்கிலம், தமிழ், சமஸ்கிருதம், பாளி, சீனம் போன்ற மொழிகளைக் கற்றுத் தேறிய மொழி விற்பன்னரான இவரது நீண்ட நாள் முயற்சியின் விளைவாக தமிழ் - சிங்கள அகராதி ஒன்று வெளிவந்துள்ளது. இவ்விருமொழி அகராதி தமிழ் - சிங்கள மொழிகளின் வளர்ச்சிக்கு மிகவும் சிறந்த ஓர் அரிய தொண்டாக அமைகிறது என்பதே எமது மதிப்பீடு.

இந்த அகராதியின் உள்ளடக்கத்திற்கான பிரதான அம்சங்கள் வருமாறு:-

இந்த அகராதியில் சுமார் 80,000 தமிழ்ச் சொற்களும், அவற்றின் ஒத்த சிங்களச் சொற்களும் 1057 பக்கங்களில் ஆசிரியர் தந்துள்ளார். அவற்றுள் 2460 வினைச் சொற்களும் அவற்றின் முக்கிய வடிவங்களும் அடங்கும். இந்த அகராதியின் இறுதியில் தரப்பட்டுள்ள பின்னிணைப்புக்களாக தாவரங்கள், விலங்குகள் முதலியவற்றின் பெயர்கள், எண்ணுப் பெயர்கள், தேசப் பெயர்கள், இலங்கையின் ஊர்ப் பெயர்கள் என்பன சேர்க்கப்பெற்றுள்ளன. தமிழ்ச் சொற்களின் உச்சரிப்பு சிங்களத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. தமிழ் எழுத்து பற்றி ஓர் அறிமுகமும் கொடுக்கப்பட்டுள்ளது.

திருமதி இ. கயிலைநாதன்,
யாழ். பல்கலைக்கழகம்.

# உணர்வின் ஊடறுப்பினால் அசாதாரண சலனத்தை ஏற்படுத்துகின்ற கவிதைகள்




நூல் : உயிர் வாழ்தலும் எளிய விடயங்களும்
*Survival and Simple Things*
(ஆங்கில வசன கவிதைத் தொகுப்பு)

ஆசிரியர் : ஐயாத்துரை சாந்தன்

நூல் நயப்புரை : வைரமுத்து சுந்தரேசன்
*ஆங்கிலத்துறை,*
*யாழ். பல்கலைக்கழகம்.*

ஈழத்து இலக்கிய உலகிற்கு ஏற்கனவே நன்கு அறிமுகமானவரும், குறிப்பாக ஆங்கில இலக்கியத் துறையில் அபரிமிதமான ஈடுபாடு கொண்டவரும், ஆங்கிலச் சிறுகதை எழுத்து உலகில் தனக்கென விசேட தடம் பதித்தவருமான ஐயாத்துரை சாந்தன், இந்த நூல் மூலம் தமது கவித்துவப் புலமையையும் வெளிக் கொணர்ந்துள்ளார். இந்நூலின் உள்ளடக்கமாக பல்வேறுபட்ட தலைப்புகளிலான 50 கவிதைகள் அமைகின்றன. ரொறன்ரோ பல்கலைக்கழக ஆங்கிலப் பேராசிரியர் செல்வா கனகநாயகம் தமது அறிமுக உரையில் இவரது கவிதைகள மனித அவலத்தின் யதார்த்தப் பண்பினை நிலைப்படுத்துவதையும் சாதாரண நிகழ்வுகளின் பௌதிகமயக் கூறுகளிலிருந்து அகவயமான நோக்கிற்கு நகர்த்தும் பாங்கில் அமைந்திருப்பதையும் சுட்டிக்காட்டுகின்றார்.

கவிஞனின் அனுபவப் பதிவுகளின் செறிவான, தீர்க்கமான, வலுவான தாக்கத்தின் பின்னணியில் உணர்வுகள் மொழிவடிவம் பெறும் போதும் அம்மொழிவடிவம் நிகழ்வுரைப்பில் உரைநடையினின்றும் கணிசமானளவு வேறுபாடு கண்டு வாசகன் சிந்தனைத் தளத்தில் உடனடி அதிர்வை, அன்றேல் உணர்வின் ஊடறுப்பு காரணமாக அசாதாரண சலனத்தை ஏற்படுத்துமாயின் கவிதை பிரசவித்துள்ளது என்பது உட்கிடை. இவ்வரைநிலையின் அப்பழுக்கற்ற அச்சு வார்ப்பாக கவிஞர் சாந்தனின் கவிதைகள் துலங்குவதை நோக்கமுடியும்.

கவிதைகளின் மூலகங்களை புற வயத்தன, அகவயத்தன என்ற இரு தளங்களில் ஆராயும்போது பல சிறப்பம்சங்களை இவரது கவிதைகளில் இனங்கண்டுகொள்ள முடியும்.

முதலில் புறவயத்தன நிலையில் நோக்கின், நூலின் முகப்பு அட்டையில் கருமையான பின்னணியில் நூலின் தலைப்பு துல்லியமாய் வெண் எழுத்துக்களிற் பொறிக்கப்பட்டிருத்தலும், அட்டையின் இடப்புற மேல்மூலையோரமாகப் பதிந்துள்ள புகைப்படம் தகர்ந்து தூர்ந்த சூழலின் பாற்பட்ட ஒருவித வெறுமையையும் அதேசமயம் ஆங்காங்கே வளர்ந்து நிற்கும் சிறுசெடிகள் மூலமாக வெறுமையின் மத்தியில் துளிர்த்து நிற்கும் பசுமையையும் புலப்படுத்துவதன் மூலம் குறியீட்டுப் பெறுமானத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தலும் கட்புலத் தாக்கம் வலுப்பெறுவதற்குச் சாதகமாகின்றன.

அடுத்து, கவிதைகளின் எளிமைத தன்மை பற்றிக் குறிப்பிடமுடியும். இந்த எளிமைத்தன்மையின் முழுமையை நிர்மாணிக்கும் தனிக் கூறுகளாக, கவிதைகள் குறுங்கவிதைகளாக அமைதல் (Recurrence) சலிப்பற்ற வாசிப்பைத் தூண்டவல்லதாயும் கண்ணோட்டத்திற்கு இடையூறு இல்லாதவாறும் போதியளவு "வெளிச செப்பனாக்கத்திற்கு" (Space Setting) நூலின் ஒவ்வொரு பக்கத்திலும் கவனம் செலுத்தப்பட்டிருத்தல் என்பவற்றைக் குறிப்பிடமுடியும்.

கவிதைகளின் அகவயப் பண்புகளை அலசும்போது, கவிஞரின் விசாலமான சமூக நோக்கு தெளிவாகிறது. பெரும்பாலான கவிதைகள் சமூக இன்னல்களை மையப்படுத்தி நிற்க, ஏனைய சில மனிதன் தவிர்ந்த இயற்கைப் படைப்புகள் மீதான மானசீகமான அக்கறையையும் இறுக்க உணர்வையும் பிரதிபலிக்கின்றன. தத்துவார்த்தமான கவிதைகளும் உட்படுத்தப்பட்டுள்ளன.

நயப்பையும் தாக்குதிறனையும் உறுதி செய்யும் நோக்குடன் குறித்த சில உத்திகள் கவிதைகளில் எடுத்தாளப்பட்டிருத்தல் விசேட அம்சமாகும். குறியீடுகள் மூலமாக செய்திப் பரிமாற்றத்திற்கு வலுச்சேர்க்கப்பட்டிருத்தல் உதாரணமாக The Palmyrahs (பனைகள்), A Single Slipper (ஒற்றைப் பாதரட்சை) ஆகிய தலைப்புக்களிலான கவிதைகளைக் குறிப்பிட முடியும். "பனைகள்" கவிதையில் போரின் அனர்த்தங்கள் பற்றிய விபரிப்பும், இறுதியில்

(IV ஆம் பக்கம் பார்க்க)

# துடுப்பாட்டமும் வாழ்வாட்டமும்

வாழ்வின் ஆட்டம் தடுப்பாட்டம்
வகைவகை மான வலுவாட்டம்;
வீழ்வும் வெற்றியும் விளையாட்(டு)
விதிலே விதி ஊட்டும்
தடுப்பு என்பது மனஉறுதி,
தணிவு என்பது அதன்பொறுதி,
எடுப்பாய் இரண்டும் இணைந்திரவதி
எய்தி நின்றால் உயர்வறுதி
பந்தா வீச்சே பயில்வாகும்,
பதற்றம் வந்தால் பலன்போகும்
முந்தி ஏற்றால் முதிர்வாகும்
முழுமை பெற்றுப் பதிவாகும்
வேகப் பந்தாய் ஒன்று வரும்
வீழுந்தா மற்றது சுருண்டுவரும்
போக வேறாய் மருட்டிவரும்
புரட்டப் பின்னும் சென்றுவரும்
ஆடும் திட்டில் (Pitch) அதன் தாரம்
அறிந்த ஆடல் அதிதீரம்
கூடும்; ஆட்டம் அனைசாரும்
குறித்த இலக்கும் (wicket) நிலைசேரும்
களத்தில் உள்ளோர் கவிழவொ(க்)
காத்து முந்தி பிந்தியோன
வளத்தில் இலக்கை வாங்கவென,
வாய்ப்பைப் பார்ப்பார் வதைக்கவென
பிடிப்பில் வீடுப்பில் பெயர்த்தெழுவார்;
பேற்றில் மாற்றில் பேதலிப்பார்,
தடுப்பில், எடுப்பில் தாய்த்திடுவார்
தவறில் மயலில் துவண்டிடுவார்
வீச்சு வேகம் ஆக்கிவிட்டால்
விடுவார் எல்லை போகவிட்டால்;
போக்கு என்பார்; பறிந்துவிட்டால்
பொருகும் பொசிப்பு போட்டுவிட்டால்
நடுவர் தீர்ப்பு நடுநிலையாம்
நாடகம் இதனின் உயிர்நிலையாம்
இருவர் எல்லாம் இசைப்பதுவாய்
ஏற்று நடப்பார் பொது விதியாய்
ஆடுவர் என்போர் ஆடார்கள்
ஆடார் என்போர் ஆடிடுவர்
போடும் பந்துகள் புரிபார்கள்
போக்கும் வரவும் தெரியார்கள்
இதுவே வாழ்வதன் இயல்புமென்போம்
எவர்க்கும் எல்லாம் வாய்ப்பென்போம்
பொதுவாய் அவரவர் பொசிப்பென்போம்
பொறுப்புடன் வாழ்வதை நிலையென்போம்
ஆட்டம் முடிந்தால் களம்வெளிக்கும்
ஆர்வமோர் உத்திகள் பதிலளிக்கும்
தேட்டம் என்பது தேர்ந்திருக்கும்
செயல்களின் தெரிவில் திறன்கொழிக்கும்.

- நயினைக் கவிஞர் நாக. சண்முகநாதபிள்ளை.

| | | | |
|---|---|---|---|
| கு. புதன். | | சனி. ராகு | |
| | இராசிச் | | சந். வியா. |
| வெ. | சக்கரம் | | |
| செ. | கேது | | |

# இந்த வார இராசி பலன்

## 16-03-2003 - 22-03-2003

### மாற்றம்

**16.03.2003 ஆயிலியம் 4 - சந்திரன் கடக இராசியில் நிற்கும்.**

சமாதானப் பேச்சு தொடரும். நியாயப்படுத்தப்படுவதற்கு நஷ்டஈடு வழக்க வேண்டும் என்ற நிலை நியாயப்படுத்தப்படும். உலகநாடுகள் சமாதான பாதைக்கு வெளிச்சம் காட்டும். இந்தியாவில் வன்செயல்கள் வலுப் பெறும். மத்தியகிழக்கில் யுத்தபயம் தொடரும். திடீரென சூழ்நிலை மாற இடம்உண்டு. இந்து சமுத்திரப் பிராந்திய நாடுகளை இயற்கையின் சீற்றம் தாக்கலாம் என கிரக நிலைகள் காட்டுகின்றன.

### மேடம்

மனிதர்களுக்கு எல்லா நேரத்திலும் நல்லமனம் நல்ல செயலைத் தான் செய்வார்கள் என எண்ணமுடியாது. அதேபோன்றுதான் கெட்டதைச் செய்பவர்களும் நல்லதையும் செய்துவிடுகின்றார்கள். தொழில் ஸ்தானத்தில் இரு தன்மையானவர்கள் உங்களுக்கு உதவி செய்வார்கள். நண்பர்கள் உதவிகள் செய்வார்கள். பொருள் இழப்பு ஏற்படும். இடமாற்றம் சிறுசிறு பிரயாணங்கள், குடும்பத்தினருக்கு சுகவீனம், அலைச்சல் கொடுக்கும். உஷ்ணபீடைகள், மாணவர்களுக்கு இடமாற்றங்கள், வியாபாரிகளுக்கு நன்மைகள் என்பன ஏற்படும்.

*அதிர்ஷ்ட நாள்கள்:- திங்கள், புதன், வெள்ளி, சனி.*

### இடபம்

இறைவனை முழுமனத்துடன் நம்பி எவருமே செயற்படாமையினாலே அவர்களது செயற்பாடுகளில் தடை ஏற்படுகின்றது. அதுபோல் நீங்களும் அரைகுறை நம்பிக்கையினத்தால் அவதிப்படுவீர்கள். தொழில் பீடங்களில் வாக்குக் கலகம் ஏற்படும். சிலருக்கு இடமாற்றங்கள் கொடுக்கும். உறவினருக்கு நல்லதல்ல. பொருள் வரவு அதிகரிக்கும். நெஞ்சு நோ ஏற்படும். சகோதரங்களுக்கும் மாணவர்களுக்கும் இடமாற்றங்கள் ஏற்படும். வைத்தியத்துறையினர்கள் சங்கீதத்துறையினர்கள் போன்றவர்கள் அதிக நன்மை அடைவர்கள்.

*அதிர்ஷ்ட நாள்கள்:- திங்கள், புதன், வெள்ளி, சனி*

### மிதுனம்

வாழ்க்கையே ஒரு போராட்டச் சக்கரந்தான் அதில் தைரியத்துடன் இன்ப, துன்பங்களைச் சமப்படுத்தி வாழத் தெரிபவர்கள் பல உண்மைகளை அறிந்து கொள்வார்கள். தொழில்ஸ்தானத்தில் மேலதிகாரிகள் வாழ்த்தினாலும் சக ஊழியர்கள் கோள் சொல்லுவார்கள். எதிரிகளால் தொல்லைகள் ஏற்படும். கால்விறைப்பு ஏற்படும். மாணவர்கள் நன்மை அடைவார்கள். போக்குவரத்து, செய்தித்தொடர்புடையவர்கள் இலாபம் அடைவார்கள் தூரதேசப் பிரயாணங்களைத் தவிர்க்காவிடின் இழப்புக்கள் வரும்.

*அதிர்ஷ்ட நாள்கள்:- திங்கள், புதன், வெள்ளி, சனி*

### கடகம்

ஒருவரின் இராசிக்குப் பொருத்தமான தலைவாசல்கள் அமைந்த வீடுகளில் வசிப்பவர்கள் பல நன்மைகளை, சிறப்புக்களை அடைவார்கள். அதுபோன்று உங்கள் தொழில்ஸ்தான பணப் புழக்க இடங்களும் பொருத்தமானதாக அமையச் செய்வீர்கள் அல்லது இழப்புக்கள் வரச்செய்யும். புதிய தொழில் தொடங்க யோசனைவரும். குருசந்திர யோகம், பலநன்மைகள், பணவரவுக்கள் ஏற்படும். வீட்டினருக்கு சிறப்புக்கள் கிடைக்கும். மாணவர்கள் புதிய சித்திகள் பெறுவர். சளி, சலவருத்தங்கள் வரும். அரசியல்வாதிகள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்:- திங்கள், புதன், வெள்ளி, சனி*

### சிங்கம்

மனிதனின் சக்தியை முன்னேற்றத்தை பொருளின் சக்தி கட்டுப்படுத்துகின்றது. பொருள் நிலையில் தடுமாற்றம், தொழில் ஸ்தானத்தில் கருத்து வேற்றுமை, தூரத்து உறவினர்களுக்கு நன்மைகள், இடமாற்றங்கள், உடல்நிலை பலவீனம் என்பன ஏற்படும். சளி, வாத உழைவு, சலப்பிழைகொடுக்கலாம். மாணவர்கள் பரீட்சையில் சிறப்பு அடைவார்கள் மருத்துவத்துறை, வியாபாரத்துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்:- புதன், வெள்ளி, சனி.*

### கன்னி

வீடு கட்டுபவர்கள் சரியான அளவுப்பிரமாணம் - தாய்மனை, சுவாமி அறை, சமயல் அறை, படுக்கை அறை, மலசலகூடம், கிணறு, வீட்டின் வெளிப்பாதை, தோஷமற்ற நில பீடம் என்பனவற்றை அறிந்து வீட்டை அமைக்க வேண்டும். தொழில்ஸ்தானமும் அளவுப்படி நிர்மாணிக்கவேண்டும். இதில் நீங்கள் அவதானமாக இருந்து உருவாக்கங்களைச் செய்வீர்கள். பொருள் வரவு உண்டு. உறவினர்கள் உதவி செய்வார்கள். மாணவர்களுக்கு கருத்து வேற்றுமை, நண்பர்களுடன் வரஇடமுண்டு. செய்தித்துறை, பிரயாணதுறையினர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: புதன், வெள்ளி, சனி.*

### துலாம்

விதிப்படி அளந்து செயற்படவேண்டும். அதற்கு நாம் வரம்பு கட்டமுடியாது. திருமண பந்தத்தில் ஏற்றத்தாழ்வுகள், பிரச்சினைகள் வருவதை நாம் நிதானித்து நடக்கவேண்டும். செவ்வாய் தோஷம் உள்ளவர்களுக்கு ஏன் செவ்வாய் தோஷம் உள்ள பெண்ணை திருமணப் பொருத்தம் பார்க்கின்றோம். சம பலம் கொண்ட வாழ்க்கை தளம்பாமல் இருப்பதற்கும் நீங்களும் வீட்டிலும் - தொழிலிடத்திலும் சமாளித்து நடப்பீர்கள். பிறருக்கு உதவிகள் செய்வீர்கள். புகழ் பரவும். மாணவர்கள் நன்மை அடைவர். சட்டத்துறை, குருத்துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: புதன், வெள்ளி, சனி.*

### விருச்சிகம்

பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ மனித வாழ்வு சிறக்கும். கணவன் மனைவிக்கிடையில் பதினாறு பாவங்களுக்கு மேல் - பாவசங்கிகைகள் வரக்கூடாது. வந்தால் குடும்ப வாழ்வில் தளம்பல் ஏற்படும். நீங்கள் நிதானமாக இருப்பீர்கள். இடமாற்றம் ஏற்படும். உடல் நிலையில் பாதிப்பு, நாரி நோ, தொண்டை, கழுத்து நோ, சளித்தொல்லை வர இடமுண்டு. மாணவர்களுக்கு பெரியவர்கள், நண்பர்களின் உதவிகள் கிடைக்கும். இரும்பு, மருந்து சட்டத்துறைகளைச் சார்ந்தவர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்ட நாள்கள்: புதன், வெள்ளி.*

### தனுசு

ஆண்டவன் சொத்தை அபகரிக்க எத்தனை நாடகம் ஆடுகின்றார்கள் ஒரு சிலர். அதேபோன்று ஒரு சிலரின் நடவடிக்கைகளை கண்டு மனம் புழுங்குவீர்கள். உறவினருக்கு உதவி செய்து வீண்பழிகேட்பீர்கள். தந்தை வழியினர்கள் வீண் பழி சுமத்துவர். பிரயாணங்கள் தடையாகும். எதிர்பாலாரின் எதிர்ப்புக்கள் வரும். மாணவர்களுக்கு மாற்றங்கள் ஏற்பட இடமுண்டு. கால் வருத்தம், சளி, காய்ச்சல் வரலாம். குருத் தொழில் வியாபாரம் செய்பவர்கள் இலாபங்கள் அடைவார்கள். தூரதேசச் செய்திகள் மன ஆறுதலைத்தரும்.

*அதிர்ஷ்ட நாள்கள்: திங்கள், புதன், வெள்ளி*

### மகரம்

பகட்டு வேதாந்தை, வரட்டுக் கௌவரத்தை சிலர் பெரிதாக நினைக்கிறார்கள். அமைதியாக இருப்பார்கள் முதலில் இழப்பு அடைந்தாலும் காலப்போக்கில் நன்மைகள் அடைவார்கள். தொழில் ஸ்தானத்தில் பல நன்மைகள் நடக்க இடமுண்டு. பொருள் வரவு தாமதமாகும். இசைத்துறை, ரீ.வி. வீடியோ விற்பனை, வாடகையாளர்கள், பணவரவுகள் அடைவார்கள். போக்குவரத்து துறையினருக்கு மாற்றங்கள் வரும். மாணவர்கள் நன்மைகள் அடைவார்கள். மாணவர்களுக்கு சித்திகள் கிடைக்கும். கால் வருத்தம், சளி, நரம்பு, வருத்தங்களுக்கு வைத்தியம் செய்வீர்கள். எதிர்பாலாரால் நன்மைகள் வர இடமுண்டு.

*அதிர்ஷ்டநாள்கள்:- திங்கள், சனி.*

## மகாதேவா ஜோதிடம்

### கும்பம்

உலகப் பொருள் எப்பொழுதும் எம்மை ஆட்கொள்ளுகின்றது. இறைவனின் அன்பைப் பெற்று உலக துன்பத்திலிருந்து எம்மை காப்பாற்றுகின்ற ஒரு சக்தி எம்முடன் எப்பொழுதும் நிழல்போல் தொடரும். அந்த உணர்வை அறிந்தவர்களின் ஆலோசனைகள் கிடைக்கும். தூரதேசச் செய்திகள் பத்திரத்தைத் தரும். சகோதரங்கள் நன்மை அடைவார்கள். பொருள் வரவு, புதிய துறைகளில் நாட்டம் என்பன இருக்கும். மாணவர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும். சளித்தொல்லை, கால் நரம்புச் சோர்வு கொடுக்கும். அரசியல் துறை குருத்துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்கள்: திங்கள், சனி.*

### மீனம்

எவரும் தொழில் ஸ்தானத்தில் உறவினர்களின் தொடர்பு இருந்தால் பலவீனப்படுவார்கள். அதேபோன்று பொருள் ஸ்தானத்தில் உறவினர்களால் இழப்பு, பொருளாதாரப் பிரச்சினைகளை அடைவீர்கள். பொருள் பிரச்சினை, தொழில்ஸ்தானத்தில் அடிக்கடி உரத்த குரலில் உங்கள் சத்தம் கேட்டபடி இருக்கும். வைத்தியத்துறை, சந்தை வியாபாரத்துறையினர்கள் நன்மை அடைவார்கள். சலவருத்தமும், சளி வருத்தமும் வருத்தும். மாணவர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும். தூர இடங்களுக்குப் பிரயாணங்களைத் தவிர்ப்பது நன்று.

*அதிர்ஷ்டநாள்கள்:- திங்கள், சனி..*

# புலிகளின் நீதித்துறை குறித்து நடவடிக்கை எடுக்காத நீதி அமைச்சர் பதவி விலகுவாரா?

## எதிர்க்கட்சி கொறடா மங்கள சமரவீர சவால்!

கொழும்பு,மார்ச்16

கிளிநொச்சியில் புலிகளின் நீதிமன்றத்தை - அரசாங்க நீதி அமைச்சர் போல் - புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் திறந்து வைத்துள்ளார். கடந்த வரவு - செலவுத்திட்ட உரையின் போது நீதி அமைச்சர் டபிள்யூ.ஜே.எம்.லொக்குபண்டார, புலிகளின் நீதிமன்றங்களைத் தாம் எதிர்ப்பதாகத் தெரிவித்திருந்தார். ஆனால், தற்போது அமைச்சர் மௌனமாக இருக்கின்றார். அவர் சரியானவராக இருந்தால் அமைச்சர் பதவியை இராஜினாமாச் செய்யவேண்டும். இவ்வாறு சவால் விடுத்திருக்கிறார் எதிர்க்கட்சியின் பிரதம கொறடா மங்கள சமரவீர.

எதிர்க்கட்சி அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பொன்றின் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார். இச் சந்திப்பில் பொ.ஐ.மு. ஊடகப் பேச்சாளர் சரத் அமுனுகம நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் சிறிபால டி சில்வா ஆகியோர் கலந்துகொண்டனர்.

இங்கு மங்கள சமரவீர மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த வரவு - செலவுத் திட்ட உரையின் போது புலிகளின் நீதிமன்றங்களுக்கு தாம் எதிர்ப்புத் தெரிவிப்பதாக நீதி அமைச்சர் தெரிவித்திருந்தார். அதனால் நாம் அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டிற்குகூட எதிர்ப்புக்காட்டவில்லை. ஆனால், இன்று அமைச்சர் மௌனமாக இருக்கின்றார். அரச, தனியார் ஊடகங்கள் இன்று கிளிநொச்சியில் புலிகளின், நீதிமன்றத் திறப்பை படங்களுடன் பிரதான செய்தியாக வெளியிடுகின்ற, அளவிற்கு புலிகளின் நீதிமன்றத் திறப்பு சர்வசாதாரணமாகிவிட்டது.

நாட்டில் இரண்டு, நீதித்துறைகள் ஏற்பட்டுவிட்டன. இதன் மூலம் நாடு இரண்டுபடுவது உறுதி. அரசாங்கம் இவற்றிலெல்லாம் கவனம் செலுத்தாமல் அடுத்து எந்தப் பொருளின் விலையை அதிகரிக்கலாம், எந்த அரிசியை வாங்கலாம் எதனை நீக்கலாம் எனச் சிந்தித்துக் கொண்டு இருக்கின்றது.

தொலைபேசிக் கட்டணங்கள் அதிகரிக்கப்படவுள்ளதாக அண்மையில் அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்குக் காரணம் கடந்த அரசு செய்துகொண்ட ஒப்பந்தத்தாலேயென அரசு கூறுகின்றது. கடந்த அரசின் காலத்தில் இதற்குப் பொறுப்பான அமைச்சராக நான் பதவி வகித்ததால் இந்த ஒப்பந்தம் தொடர்பாகக் கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

1997ஆம் ஆண்டு ஓகஸ்ட் 6ஆம் திகதி - அரசுக்கு சார்பாக - ஸ்ரீலங்கா ரெலிகொம், ஜப்பான் என்.டி.ரி. நிறுவனத்துடன் 5வருட ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொண்டது. தொலைபேசிக் கட்டண உயர்வு போன்ற விடயங்களை அரசாங்கத்தின் பிடியில் வைத்துக் கொண்டே இந்த ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. அந்த ஒப்பந்தம் 2002ஆம் ஆண்டு ஓகஸ்ட் 5ஆம் திகதியுடன் காலாவதியாகிவிட்டது. தொலைபேசிக் கட்டண உயர்வுக்கு அரசு கூறும் காரணம் பொய்யானது.

இன்று ஸ்ரீ லங்கா ரெலிகொம நிறுவனத்தில் ஊழல் மலிந்துவிட்டது. அந்த நிறுவனம் பாரிய பிரச்சினையை எதிர்கொண்டுள்ளது. இதனால்தான் கட்டண உயர்வு மேற்கொள்ளவுள்ளது.

இந்த ஊழலில் ரெலிகொம் நிறுவனத்தின் தலைவர் உட்பட பல அமைச்சர்களுக்கு பங்குண்டு.

- இவ்வாறு மங்கள சமரவீர மேலும் தெரிவித்தார்.

(எ)

## புதிய நிர்வாகிகள் தெரிவு

தென்மராட்சி,மார்ச்16

பச்சிலைப்பள்ளி அபிவிருத்தி புனர்வாழ்வுக் கழகத்திற்கு புதிய நிர்வாகத்தினர் அண்மையில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்

கழகத்தின் தலைவராக நா.கார்த்திகேசுவும், செயலாளராக செ.செல்வசந்திரனும், பொருளாளராக வேகந்தசாமியும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

(எ-117)

# வங்கிகள் தனியார் மயப்படுத்தப்படாவிடின் உலக வங்கியின் உதவிகள் கிடைக்காது

## இலங்கைக்கான பணிப்பாளர் கூறுகிறார்

கொழும்பு,மார்ச்16

அரச வங்கிகள் மற்றும் அரச துறையைச் சேர்ந்த முதலீட்டு நிறுவனங்களைத் தனியார் மயப்படுத்தாவிடின் எதிர்காலத்தில் உலகவங்கியின் உதவிகள் இலங்கை அரசுக்குக் கிடைக்காது என உலக வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் பீற்றர் ஹரோல்ட் தெரிவித்துள்ளார்

அண்மையில் கொழும்பில் இடம்பெற்ற முக்கிய தொழிற்சங்கங்களின் தலைவர்களுடனான சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இருப்பினும், அரசுக்குத் தேவை எனில் உலக வங்கியின் உதவிகள் இன்றி அரச நிதி நிறுவனங்களை நடத்துவதற்கு உலக வங்கி தடையாக இருக்காது - என்றார்.

இந்தச் சந்திப்பில் தொழிற் சங்கங்களின் தலைவர்களான மஹ்ரூமான் காவல பியரத்ன தேரர், பாலதம்பு, எம்.ஆர்.ஷா, சுரத் பெர்னாண்டோ, பேராசிரியர் கே.சிறியானந்த ஆகியோர் கலந்துகொண்டனர்.

(எ)

# சகோதரத்துவம் வளரட்டும்

"மற்றைய மனிதர் செய்யும் குற்றங்களை நீங்கள் மன்னிப்பீர்களானால் உங்கள் விண்ணகத் தந்தையும் உங்களை மன்னிப்பார். மற்றமனிதரை நீங்கள் மன்னிக்காவிடில் உங்கள் தந்தையும் உங்கள் குற்றங்களை மன்னிக்கமாட்டார்". இன்றைய சிந்தனைக்கு தாய்த்திருச்சபை எம்மை சிந்திக்கத் தூண்டுகின்றது.

### தவக்காலச் சிந்தனை

பன்னிரண்டாம் நாள்

இச்செய்தி சமுதாயத்துக்கு ஒரு தெளிவைக் கொடுக்கின்றது. நாம் பல்வேறு இடங்களில் வசிப்பவர்களாய் இருந்தாலும், நாம் ஒரே கடவுளின் பிள்ளைகள் என்ற உணர்வு நம்மை ஒன்று சேர்க்கின்றது. சகோதரர் சகோதரிகளாக இருக்கின்றோம் சகோதரத்துவ உணர்வு எம்மில் நிலைத்து ஒருவரை ஒருவர் ஏற்றுக்கொண்டு வாழும் போதுதான் சமாதானம் மலரும்.

மனித குலத்தில் மன்னிப்பு, விட்டுக்கொடுப்பு, புரிந்துணர்வு நிலைத்து பேச்சு மூலம் சமாதானமும் கட்டியெழும் மலர்ந்து இறையரசைக் கட்டியெழுப்பும் பண்புகளை வளர்க்கலாம். மனித உள்ளங்களிலும் செயல்களிலும் அவரவர் பணித்தளங்களிலிருந்து ஆரம்பமாக வேண்டும். நமக்குள்ளே நாம் பகிர்ந்து வாழும்போது அனைவருக்கும் தேவையான உணவு கிடைக்கின்றது. அழிவுகள் நிறுத்தப்படும்போது சகோதர உறவு மலர்கின்றது. சமாதான யாத்திரைகள் வடக்கு தெற்கு நோக்கி நகர்கின்றது. உறவுப்பாலம் மலர்கின்றது. உண்மையான சமாதானக் காற்றை சுவாசிக்க முடிகின்றது.

யோ.கீர்த்திபொன்கலம்

# தேசிய சேமிப்பு வங்கி

இலங்கையின் வங்கிச் சரித்திரத்தில் முதன் முதலாக கௌரவமிக்க

## SL AAA

வங்கித் தரப்படுத்தல்களில் உலகில் முன்னணி வகிக்கும்

பிச் ரேற்றிங்ஸ் இன்கோபரேஷன், அமெரிக்காவுடன் இணைக்கப்பட்ட பிச் ரேற்றிங்ஸ் லங்கா லிமிட் இன்,

அதி உயர்தர மதிப்பீட்டு விருதினை பெற்றுள்ள வங்கி

வாடிக்கையாளர்களுக்கு எமது ஸ்திரத்தன்மையையும் கடப்பாட்டையும் தொடர்ந்து உறுதிப்படுத்துகின்றோம்.

NSB

உங்கள் குடும்ப சேமிப்பு வங்கி

### பயனாளிகளின் காசோலைகளை மாற்ற

# சாவகச்சேரி ப.நோ.கூட்டுறவுச்சங்கம் 'பிடித்தம்' எதையும் அறவிடவில்லை

## 'உதயன்' செய்திக்கு தலைவர் விளக்கம்

யாழ்ப்பாணம்,மார்ச்16

"ரூபா 25 ஆயிரம் கொடுப்பனவுக்கான காசோலையை மாற்றும்போது கிராமிய வங்கியில் பிடித்தம் ஏன்? தென்மராட்சி பயனாளிகள் கேள்வி" என்ற தலைப்பில் கடந்த 11.03.2003 உதயனில் 05 ஆம் பக்கத்தில் பிரசுரமாகிய செய்தி தொடர்பாக - சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் விளக்கக் குறிப்பு ஒன்றை அனுப்பிவைத்திருக்கிறார்.

ரூபா 15 ஆயிரம் கொடுப்பனவு பெறும் தென்மராட்சிப் பிரதேசப் பயனாளிகளிடம் தமது சங்கம் பிடித்தம எதனையும் அறவிடவில்லை என்று அவர் தெரிவித்திருக்கிறார்.

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு உட்பட்ட கிராமிய வங்கி எதுவும் இத்தகைய பிடித்தம் அறவிடும் முறைகேடுகளில் ஈடுபடவில்லை என்றும் அவர் திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறார். (ஐ)

# வீதிகளை திருத்த நடவடிக்கை

வலி.மேற்கு,மார்ச்16

யாழ். மாவட்ட வீதி அபிவிருத்தி திணைக்களத்தினால் பொன்னாலை - மூளாய் வீதி, கிளுவானைக் கிளாலி - அராலி வீதி ஆகிய இரண்டு வீதிகளும் திருத்தியமைக்கப்படவுள்ளன.

இதற்காக 35 லட்சம் ரூபா நிதி கிடைத்துள்ளதாகவும் மிக விரைவில் வீதிகளைத் திருத்தியமைப்பதற்கான வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் யாழ். மாவட்ட வீதி அபிவிருத்தி திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

1.6 கி.மீ. நீளமான பொன்னாலை - மூளாய் வீதியினை திருத்தியமைக்க 15 லட்சம் ரூபாவும் 1.9 கி.மீ. நீளமான கிளுவானைக் கிளாலி - அராலி வீதியினைத் திருத்தியமைப்பதற்கு 10 லட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த இரண்டு வீதிகளையும் திருத்தியமைக்குமாறு இப்பகுதியிலுள்ள பொது அமைப்புக்கள் பல தடவைகள் சம்பந்தப்பட்டவர்களிடம் வேண்டுகோள் விடுத்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ம-175)

# விடத்தல்தீவு மருத்துவமனை நிக்கொட்டினால் புனரமைப்பு

நிக்கொட் உதவித் திட்டத்தின் கீழ மன்னார் விடத்தல்தீவில் உள்ள கிராமிய மருத்துவமனை 6கோடி ரூபா செலவில் புனரமைக்கப்பட்டுவருகின்றது.

நோயாளர் விடுதிகளும், மகப்பேற்று விடுதியும் மருத்துவ வளாகத்தில் புதிதாக அமைக்கப்பட்டுவருகின்றன.

பெரியமடு, மன்னார், புளிக்காடு, விடத்தல்தீவு, கள்ளியடி, கோவில்குளம், இலுப்பைக்கடவை ஆகிய பகுதிகளில் இருந்து வந்து மக்கள் இக்கிராமிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர். எனினும், அங்கு போதிய குடிதண்ணீர் வசதிகள் இல்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (ம-8-164)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



நாவற்குழி கிழக்கு.

கிராம உத்தியோகத்தர் தரம் I இற்கு உயர்வுபெற்று இன்று பாராட்டுவிழாக்காணும் நாவற்குழி கிழக்கு - மேற்கு கிராம உத்தியோகத்தர்

**திரு.ஆறுமுகம் நடராசா**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

விவசாயிகள் சம்மேளனம்,
நாவற்குழி வாழ் மக்கள்.

(15647)

## திரைப்படக் கண்காட்சி

**Death on a fullmoon day**

**பூரணையில் ஒரு மரணம்**

(சிங்களத் திரைப்படம்)

"பௌத்தர்களின் புனித தினமான பூரணையில் நிகழ்ந்த அந்த மரணம் ஒட்டு மொத்தமாக சிங்கள சமூக அமைப்பையும் போர் தொடர்பான ஒரு நிலைப்பாட்டையும் கேள்விக்கு உள்ளாக்குகிறது."

அகன்ற திரையில் படக்காட்சியும் தொடர்ந்து திரைப்பட இயக்குநர் பிரசன்ன வித்தனகேயுடனான கலந்துரையாடலும் இடம்பெறும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இடம் :- "அகவொளி" சென் பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம்.
காலம் :- நாளை (17.03.2003) திங்கட்கிழமை மாலை 3.30

(15648) -துலன மீடியா யூனிட்.

## மரண அறிவித்தல்

### திருமதி செல்லர் சின்னம்மா

ஊரெழு மேற்கு, சுன்னாகத்தைச் சேர்ந்த திருமதி செல்லர் சின்னம்மா 13.03.2003 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சி.செல்லர் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற நாகலிங்கம் மற்றும் கருணாதேவன், சௌந்தரதேவன், மகேந்திரநாதன் (சுவிஸ்), இராசலிங்கம், சிறீதேவன், குலசிங்கம் (சுவிஸ்), யோகச்சந்திரன் (சுவிஸ்), ரவிச்சந்திரன், சாந்தினிதேவி ஆகியோரின் அருமைத் தாயாரும் இந்திராதேவி, சிவபாக்கியம், தவமலர், கல்யாணி, யோகேஸ்வரி, கௌசலா, புஸ்பவதி, இராஜேஸ்வரி, மரியா, சாந்தினி, சிறீதரன் (ஆசிரியர், யா/சங்கானை சி.மகா வித்.) ஆகியோரது மாமியாரும் தர்மசீலன், சுகந்தன், சுகந்தினி, சுஜீபன், சுஜிந்தா, றஜீபன், றஜீந்தா, அஜீந்தா, பிரதீபன், பிறேமிளா, பிருந்தா, கஜனா, விறஜா, கஜீபன், மதீசன், மஞ்சுதன், விதுசன், சஞ்ஜீவன், பவதாரணி, சர்மிளன், சிந்துஜன், மனோஜா, ரிசாத், வினுஜன், சூரியகாந்தன், அனோஜா, பானுஜா, பிரசாத், மிதுர்சன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் நிரோஜன், தர்சன், அனுசியா, திவோஜயா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (16.03.2003) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் பொக்கனை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாகதம்பிரான் வீதி,
ஊரெழு மேற்கு, சுன்னாகம். (15649)

தகவல்:
குடும்பத்தினர்.

# பாம்பு கடித்து பெண் மரணம்

தென்மராட்சி,மார்ச்16

பாம்புக்கடிக்கு இலக்காகி குடும்பப் பெண் பலியான சம்பவம் நேற்றுமுன்தினம் மட்டுவில் தெற்கில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த வைத்திபூரணம் (வயது 53) என்பவரே பலியானவராவார்.

இரவு கிணற்றடிக்குச் சென்ற வேளையில் பாம்பினால் கடியுண்டதாகவும், வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்ல வாகன வசதி உடன் கிடைக்காததால் தாமதமாகியதாகவும் - பின்னர் யாழ்ப்பாணம் கொண்டு செல்லும் வழியில் அவர் மரணமானதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-117)

# துர்க்காபுரம் மகளிர் இல்லத்துக்கு ஆபரணங்கள் அன்பளிப்பு

வலி.வடக்கு,மார்ச்16

லண்டனில் வசிக்கும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வ.இ.இராமநாதன் அங்கு தாம் நடத்திவரும் சைவ முன்னேற்றச் சங்கத்தின் சார்பில் தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்லத்தில் இருந்து கல்வி கற்கும் உயர்வகுப்பு மாணவிகளுக்கு தங்க ஆபரணங்களை அன்பளிப்புச் செய்துள்ளார்.

10 சோடி தங்கக் காப்புகளும் 10 கழுத்துச் சங்கிலிகளும் இவற்றில் அடங்குகின்றன. சுமார் நான்கு லட்சம ரூபாவுக்கு மேற்பட்ட பெறுமதியுடையவையென குறிப்பிடப்பட்டுள்ளது.

துர்க்காபுரம் மகளிர் இல்ல 21 ஆவது ஆண்டு நிறைவு விழா அறிக்கையில் மேற்குறிப்பிட்ட தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

தற்போது ஐம்பதுக்கு மேற்பட்ட மாணவிகளும், சிவத்தமிழ்ச் செல்வி அன்னையர் இல்லத்தில் 55 வயதுக்கு மேற்பட்ட 12 பெண்களும் தங்கி வாழ்கின்றார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(ம-86)


## தேவை

எமது உணவகத்திற்கு பணியாளர் உடன் தேவை.
(அனுபவம் உள்ளவர்களிற்கு முன்னுரிமை அளிக்கப்படும்)
தொடர்புகளுக்கு:
**சாளினி உணவகம்**
பலாலி வீதி,
(15651) திருநெல்வேலி.

## தேவை

அலுவலக உதவியாளர்
காலை 9 மணியிலிருந்து பி.ப. 2 மணிவரை அலுவலகத்தில் உதவியாளராகப் பணியாற்றுவதற்கு ஆங்கில, தமிழ் தட்டச்சுச் செய்வதில் நல்ல அனுபவமுள்ள, அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்ற ஒருவர் தேவைப்படுகிறார். கிழமை நாள்களில் மாலை வேளைகளில் வருகை தந்து விவரங்களை அறியலாம்.
**இல.20, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.** (15646)

## நிறைஞ்சனாஸ்

சங்கானை
பிரபு, வைஜெந்தி நடிக்க
**விண்ணைத்தமிழ் பாட்டு**
காட்சி நேரம் : 11.00, 2.45, 6.00 (பி.நே.)
இன்று இரவு 8.45 (பி.நே)
ஜக்கிஜான் நடித்த
**RUSH HOUR - 2** (C-26838)

## ராஜா யாழ்ப்பாணம்

"காசி" புகழ் விக்ரம், லைலா, விவேக், வையாபுரி, நாசர் நடித்த
**தில்**
(ரீலைஸ்)
காட்சி நேரம் :10.30, 2.30, 6.30, 9.30

## லக்ஷ்மி இணுவில்

இளைய தளபதி விஜய், ரீமாசென் நடித்த
**பகவதி**
தினசரி மூன்று காட்சிகள்
11.00, 3.00, 7.00 (பி.நேரம்)

## நாகம்ஸ் சுன்னாகம்

விஜயகாந்த், சௌந்தர்யா, கவுண்டமணி, செந்தில் நடித்த
**சொக்கத்தங்கம்**
(ரீலைஸ்)
காட்சிகள் தினசரி : 11.00, 3.00, 7.00 (பி.நேரம்)
(15652)










மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான கரடியனாற்றிலுள்ள புலிகளின் பயிற்சிக் கல்லூரியில் அதிகாரிகள் பயிற்சியை முடித்துக் கொண்ட 89 புலிப்போராளிகள் கடந்த வியாழக்கிழமை அங்கிருந்து வெளியேறினர். அப்போது எடுக்கப்பட்ட படங்கள் மேலே காணப்படுகின்றன.

பழைய மாணவர் சங்கம்

## யா/விக்னேஸ்வரக் கல்லூரி, கரவெட்டி

## வருடாந்தப் பொதுக்கூட்டம்

இடம் : கல்லூரி மண்டபம்
காலம் : 30.03.2003 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணி (புதிய நேரம்)

1. பிரேரணைகள் இருப்பின் 22.03.2003 ஆம் திகதிக்கு முன்னர் செயலாளரிடம் சமர்ப்பிக்கவும்.
2. புதிய அங்கத்தவர்களாகச் சேர்பவர்கள், புதுப்பிப்பவர்கள் 30.03.2003 ஆம் திகதிக்கு முன் பொருளாளரிடம் சந்தாவைச் செலுத்தவும்.
3. தங்களுக்கு எழுத்தறிவித்த, தங்களை உருவாக்கிய கல்லூரியின் மேம்பாட்டுக்கு உதவும் வண்ணம் அனைவரின் வருகை தவறாது வேண்டப்படுகின்றது.

க.தணிகாசலம்
தலைவர்.

(சி-26985)

கி.ரவிகுமார்
செயலாளர்.

# வடக்கின் பெரும் போர் வெற்றி தோல்வியின்றி முடிவு

யாழ்ப்பாணம், மார்ச் 16

யாழ்.மத்திய கல்லூரி - சென்.ஜோன்ஸ் அணிகளுக்கிடையிலான வடக்கின் மாபெரும் போர் வெற்றி தோல்வி இன்றி முடிந்தது.

நேற்று முன்தினம் தனது முதலாவது இன்னிங்ஸை ஆட ஆரம்பித்திருந்த சென்ஜோன்ஸ் அணி நேற்றுக் காலை தனது ஆட்டத்தைத் தொடர்ந்தது. 90 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்கள் என்ற நிலையில் தனது ஆட்டத்தை ஆரம்பித்த சென்ஜோன்ஸ் அணி வீரர் ஏ.தனஞ்சயன் 62 ஓட்டங்களைப் பெற்று அணி வலுவான ஓர் இலக்கை அடைய உதவிபுரிந்தார். அணித் தலைவர் எஸ்.அகிலன் 42 ஓட்டங்களைப் பெற்றார்.

இறுதியில் 7 விக்கெட் இழப்பிற்கு 227 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் சென்.ஜோன்ஸ் கல்லூரி தனது முதல இன்னிங்ஸை நிறுத்திக்கொண்டது.

பந்து வீச்சில் யாழ். மத்திய கல்லூரி அணித்தலைவர் விரஜீவ்குமார் 37 ஓவர்கள் பந்துவீசி 26 ஓட்டங்களை மட்டும் கொடுத்து 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

சென்ஜோன்ஸ் கல்லூரி அணியை விட 83 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் இருந்த மத்திய கல்லூரி அணி தனது இரண்டாவது இன்னிங்ஸை நண்பகலில் ஆட ஆரம்பித்தது.

கே.றொகான் அபாரமாகத் துடுப்பெடுத்தாடி 91 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்து அணியை நல்ல நிலைக்கு கொண்டுவந்தார். வி.ரஜிவகுமார், கே.கலிங்ஸ்ரன் ஆகியோர் ஆட்டமிழக்காமல் முறையே 21, 11 ஓட்டங்களைப் பெற்றனர்.

நேற்று மாலை ஆட்டம் முடிவுக்கு வந்தபோது யாழ். மத்திய கல்லூரி அணி 8 விக்கெட் இழப்பிற்கு 181 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

சென்.ஜோன்ஸ் பந்து வீச்சாளர் எஸ்.பிரதாதீஸன் 22 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

**ஸ்கோர் விவரம்**

முதல் இன்னிங்ஸ்:-

**யாழ்.மத்திய கல்லூரி** - 144/10

**சென்ஜோன்ஸ் கல்லூரி** - 227/7

இரண்டாவது இன்னிங்ஸ்:-

**யாழ்.மத்திய கல்லூரி** - 181/8

ஆட்ட நாயகனாக சென்.ஜோன்ஸ் கல்லூரி வீரர் ஏ.தனஞ்சயன் தெரிவு செய்யப்பட்டார். அவருக்கு அபான்ஸ் நிறுவனம் வழங்கிய வர்ணத்தொலைக் காட்சிப் பெட்டி பரிசாக வழங்கப்பட்டது. சகலதுறை ஆட்டக்காரராக தெரிவு செய்யப்பட்ட சென் ஜோன்ஸ் கல்லூரி அணித்தலைவர் எஸ்அகிலனுக்கு அபான்ஸின் சலவை இயந்திரம் பரிசாக வழங்கப்பட்டது.

சிறந்த துடுப்பாட்ட வீரராக மத்திய கல்லூரி வீரர் கே.றொகானும், சிறந்த பந்து வீச்சாளராக மத்திய கல்லூரி வி.ரஜீவ்குமாரும், சிறந்த களத்தடுப்பாளராக எம்.டினேஸும் தெரிவு செய்யப்பட்டனர்.

(ம-5)

## ஒரு வழியாக...

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

வழிகோலியவை. 127 பந்துகளில் அவர் பெற்றது 102 ஓட்டங்கள். விளாசியது 7 'பௌண்டரி'கள் மட்டுமே.

மற்றொரு பெறுமதியான மாற்றத்தையும் இலங்கை செய்தது. இனித்தான் அணிக்கு விடிவு. இதுவரை அணிக்குப் பாரமாக இருந்த ஜயவர்தனா நீக்கப்பட்டார். அவருக்குப் பதிலாக உள்வாங்கப்பட்டவர் அவிஸ்க குணவர்த்தன. அவரது முதலாவது உலகக் கிண்ண ஆட்டம் இது. பொறுப்புடன் ஆடினார் அந்த இளைஞர். அவர் அத்தப்பத்துவுடன் இணைந்து நின்று பெற்ற 41 ஓட்டங்கள் அணிக்கு கூடுதல் பலம்.

பிரட் லீயின் தாக்குதலில் காயமடைந்த ஜயசூரிய அதிலிருந்து இன்னும் மீண்டு வரவில்லை என்றே தோன்றுகின்றது. அடித்தாடுவதா நின்றாடுவதா என்ற குழப்பத்திலேயே அவர் நேற்றைய ஆட்டத்தைக் கோட்டை விட்டார். வழமைக்கு மாறாக 44 பந்துகளில் அவர் பெற்றது 22 ஓட்டங்கள் மட்டுமே. அவற்றில் இரண்டே இரண்டு 'பௌண்டரி'கள் தான். சங்ககார வரும் வரை 'பௌண்டரி'களுக்காகத் தவம் கிடக்க வேண்டியிருந்தது. அவர் வந்துதான் கண்ணுக்குக் குளிர்ச்சியாக அடுத்தடுத்து சில 'பௌண்டரி'கள் விளாசினார்.

ஆரம்பத்தில் மிக மெதுவாக இலங்கை ஆட ஆரம்பித்தபோது 256 என்ற ஒரு நல்ல இலக்கை அது எட்டும் என்ற நம்பிக்கை இல்லை. மிக மெதுவாக ஆரம்பித்து, இடையில் வேகம் எடுத்து இறுதியில் விரைவானது ஓட்ட எண்ணிக்கை. இது இலங்கையின் பாணியே அல்ல. முதல் 15 ஓவர்களில் முடிந்தளவு ஓட்டங்களை அடித்துக் குவிப்பதிலேயே இலங்கை அதிகம் கவனம் செலுத்துவது வழமை. ஜயசூரியவின் அதிரடி அதற்கு வழிசமைக்கும். நேற்று எல்லாமே தலைகீழ். 15 ஓவர்களில் இலங்கை பெற்றது வெறும் 56 ஓட்டங்கள் மட்டுமே.

பதிலுக்கு சிம்பாப்வே இறங்கியது முதல் மிரட்டியது. அதன் ஆரம்பத் துடுப்பாளர்கள் விளாசினார்கள். அதிலும் வழமைக்கு மாறாக வாஸின் பந்துகள் எல்லைகள் நோக்கிப் பறந்தன. ஓட்டங்கள் குவிந்தன. 15 ஓவர்களில் அவர்கள் பெற்றது 88 ஓட்டங்கள். அதிரடியாக ஆடமுற்பட்டதால் விக்கெட்டுக்களும் மளமளவெனச் சரிய ஆரம்பித்தன. சீரான இடைவெளிகளில் முக்கிய விக்கெட்டுக்கள் வீழ்ந்தன. பிளவர் சகோதரர்கள் அணிக்கு கைகொடுத்தனர். அன்டி பிளவரின் சர்ச்சைக்குரிய எல்.பி.டபிள்யூ இலங்கைக்கு கிடைத்த அதிர்ஷ்டம்.

182 ஓட்டங்களுக்குள் சுருண்டது சிம்பாப்வே. 74 ஓட்டங்களால் இலங்கைக்கு வெற்றி. ஒரு வழியாக தனது 'சுப்பர் சிக்ஸ்' கட்டத்தின் கடைசி ஆட்டத்தை வென்று அரையிறுதிக்குள் நுழைந்து விட்டது இலங்கை. இனி ஆஸ்திரேலியாவுடன் அடுத்த கண்டம். இந்தத் தொடரில் கிடைத்த படுதோல்விக்கு தொடர் முடிவதற்குள் பழி தீர்ப்பார்களா இலங்கை அணியினர்?

நேற்றைய ஆட்டத்துடன் அன்டி பிளவர் சர்வதேசப் போட்டிகளில் இருந்து ஓய்வுபெற்றார். மிகப் பெறுமதியான ஒரு இழப்பு சிம்பாப்வேக்கு. விளையாட்டில் அரசியல் புகுந்ததால் விரைவிலேயே அவரை இழக்கவேண்டி ஏற்பட்டுவிட்டது சிம்பாப்வே அணிக்கு. உலகின் மிகத் திறமையான துடுப்பாளர்கள் வரிசையில் முக்கியமான இடம் இருக்கின்றது பிளவருக்கு.

## ஒலங்காவும்....

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டில் தற்போது அதிகாரத்தில் உள்ள அதிபர் முகாபே அரசாங்கத்தின் நிறவெறிக் கொள்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, உலகக்கிண்ண ஆட்டங்களில் கையில் கறுப்புப்பட்டி அணிந்தபடி விளையாடினர்.

அன்டி பிளவரும் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து நேற்றுடன் ஓய்வு பெற்றுள்ளார். அவரைத் தொடர்ந்து ஒலங்காவின் அறிவிப்பு வந்துள்ளது. எனினும், சிம்பாப்வே அணியில் தொடர்ந்தும் தன் ஈடுபாடு இருக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

"இந்த உலகக் கிண்ணத்துக்கு முன்னர் அணியில் எனக்கு இடம் கிடைப்பது என்பது மிகவும் சந்தேகத்துக்கு உரியதாகவே இருந்தது. என்னுடைய தனிப்பட்ட வாழ்வும் துன்பமாகியுள்ளது. பல ஈ-மெயில் மிரட்டல்கள் வருகின்றன" - என்றும் ஒலங்கா தெரிவித்துள்ளார். (ம)


## கண்ணீர் அஞ்சலி

14.03.2003 அன்று அமரத்துவம் அடைந்த எமது கல்வி நிலைய பொறுப்பாசிரியர் சு.கிருஷ்ணன் அவர்களின் அன்புச் சகோதரியும் எமது கல்வி நிலைய சக ஆசிரியர் வை.அகிலனின் பாசமிகு தாயாருமான

### திருமதி வைத்தி பூரணம்

அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாக்குவதுடன், அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் உறவுகளுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

மட்டுவில் தெற்கு,
மட்டுவில்.

(15654)

வளர்மதி கல்வி நிலையம்
ஆசிரியர்கள்.


## சமய சந்நிதிகளில்

வலி.தெற்கு, மார்ச்.16

சுன்னாகம், தாளையடி அருள் மிகு ஐயனார் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் கடந்த சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

நாளை திங்கட்கிழமை பகல் தேர் உற்சவமும், மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

உற்சவ காலங்களில் பகல் அன்னதானமும் மாலை 6.00 மணிதொடக்கம் 7.00 மணிவரை சிவத்திரு வ.குமாரசாமி ஐயாவின் சமயச் சொற்பொழிவும் இடம்பெற்று வருகின்றன. (எ-152)

★ ★ ★

யாழ்ப்பாணம், மார்ச்.16

மூளாய் ஸ்ரீமுத்துக்குமார சுவாமி ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது.

நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு வசந்த மண்டப் பூசை இடம்பெற்று தொடர்ந்து எம்பெருமான் தேரில் திருவீதியுலா வருதல் இடம் பெறும். நாளை மறுதினம் காலை தீர்த்தத்திருவிழா இடம்பெற்று மாலை கொடியிறக்க உற்சவத்துடன் மஹோற்சவம் நிறைவடையும். (எ)

★ ★ ★

காரைநகர், மார்ச்16

காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு பஞ்சரத பவனி இடம்பெறவுள்ளது.

ஈழத்துச் சிதம்பரத்தின் வருடாந்த பங்குனி மஹோற்சவத்தின் 9ஆம் நாளான நாளை காலை 8 மணிக்கு வசந்தமண்டபப் பூஜையைத் தொடர்ந்து சோமாஸ்கந்தர் பரிவார மூர்த்திகளுடன் தேரிற்கு எழுந்தருளி பஞ்சரத பவனி நடைபெறும்.

தேர் திருவிழாவிற்கு இந்தியாவிலிருந்து வருகைதரும் தமிழக தவில, நாதஸ்வர கலைஞர்களின் தவில், நாதஸ்வர கச்சேரியும் இடம்பெறவுள்ளது. (ஐ-73)

★ ★ ★

யாழ்ப்பாணம், மார்ச்16

நல்லூர் ஸ்ரீ சட்டநாதர் சிவன் தேவஸ்தானத்தில் நடைபெற்றுவரும் சிவன் மஹோற்சவத்தின் தேர்த்திருவிழா நாளை திங்கட்கிழமை காலை நடைபெறவுள்ளது.

மஹோற்சவத்தையொட்டி தினமும இரவு 7 மணிக்கு சமயச் சொற்பொழிவு இடம்பெற்றுவருகிறது. (ஐ)

★ ★ ★

காரைநகர், மார்ச்16

காரைநகர், களபூமி கிளுவானை மாதாங்கோவில் மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 19ஆம் திகதி புதன்கிழமை காலை 6.30 மணியளவில் நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேக ஆரம்பக் கிரியைகள் நாளை திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு விநாயக வழிபாட்டுடன் ஆரம்பமாகின்றன. செவ்வாய்க்கிழமை காலை 9 மணி தொடக்கம் பக்தர்கள் எண்ணெய்க் காப்பு சாத்துதல் இடம்பெற்று, புதன்கிழமை காலை 6.19 மணி தொடக்கம் 7.42 மணிவரையுள்ள சுப வேளையில் மகா கும்பாபிஷேகம் இடம்பெறும். (ஐ-73)

## பிரட் லீ...

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு நாள் கிரிக்கெட்டில் எடுக்கப்பட்ட 17ஆவது 'ஹற்றிக்' இதுவாகும். லீக்கு முன்னர் புரூஸ் ரீட் (1986இல் நியூஸிலாந்துக்கு எதிராக), அன்ரனி ஸ்ருவர்ட் (1997இல் பாகிஸ்தானுக்கு எதிராக) ஆகிய இரு ஆஸ்திரேலிய வீரர்களும் ஒரு நாள் கிரிக்கெட்டில் 'ஹற்றிக்' பெற்றுள்ளார்கள். (ம)

## அறிக்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்படுகிறது.

இதேவேளை -

கப்பல் மீதான தாக்குதல் சம்பவம் குறித்து கண்காணிப்புக் குழுத் தலைவர் நேற்று முன்தினம் இலங்கைக் கடற்படைத் தளபதி ரியல் அட்மிரல் தயா சந்தகிரியைச் சந்தித்துப் பேச்சு நடத்தி உள்ளார்.

இச் சந்திப்பின்போது; தாக்குதலில் ஈடுபட்ட கடற்படையினரும் கூட இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

கப்பல் தாக்குதல் சம்பவத்தின் போது ஒலிப்பதிவு செய்யப்பட்ட ஒலி நாடாவும் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினிடம் வழங்கப்பட்டுள்ளது. (ம-12)

# பொன் அணிகள் போர்: 8 விக்கெட்டுக்களால் சென்.பற்றிக்ஸ் வெற்றி

யாழ்ப்பாணம், மார்ச்16

கடந்த இரு தினங்களாக நடந்த பொன்னணிகள் போரில் வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணக்கல்லூரியை 8 விக்கெட்டுக்களால் தோற்கடித்து சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி வெற்றியீட்டியது.

நேற்றுமுன்தினம் ஆட்டநேர முடிவில் தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆட ஆரம்பித்திருந்த யாழ்ப்பாணக் கல்லூரி அணி நேற்றுக் காலை தனது ஆட்டத்தை தொடர்ந்தது.

விக்கெட் இழப்பின்றி 11 ஓட்டங்களுடன் ஆட்டத்தை ஆரம்பித்த அந்த அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 153 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

அந்த அணி சார்பாக கே.சுகாஷ், எஸ்.ராஜ்குமார் மற்றும் வி.நிருபன் ஆகியோர் முறையே 25, 23, 22 ஓட்டங்களைப் பெற்றனர். இவர்கள் பெற்ற ஓட்டங்களைவிட உதிரிகளாக 27 ஓட்டங்கள் அணிக்கு கிடைத்திருந்தது.

சென்பற்றிக்ஸ் கல்லூரியின் பந்து வீச்சாளர்கள் எம்.கிரிஷாந்தன் 46 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களையும், ஆர்.விநோதன் 11 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், செல்வின் லொயிட் 22 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணக் கல்லூரி தனது இரு இன்னிங்ஸிலும் பெற்ற ஓட்ட எண்ணிக்கை சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் முதல் இன்னிங்ஸ் ஓட்ட எண்ணிக்கையிலும் பார்க்க 46 ஓட்டங்கள் அதிகமாக இருந்தது.

47 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி 2 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

இரண்டாவது இன்னிங்ஸில் சென்.பற்றிக்ஸ் வீரர்கள் எம்.கிரிஷாந்தன் 27 ஓட்டங்களையும், எஸ்.சுஜீவன் ஆட்டமிழக்காது 19 ஓட்டங்களையும் பெற்றனர்.

யாழ்ப்பாணக் கல்லூரி பந்துவீச்சாளர்கள் எஸ்.தனரன், எம்.திலீபன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

**ஸ்கோர் விவரம்:-**

*முதல் இன்னிங்ஸ்:-*

யாழ்ப்பாணக் கல்லூரி - 59/10

சென்.பற்றிக்ஸ் கல்லூரி - 166/10

*இரண்டாவது இன்னிங்ஸ்:-*

யாழ்ப்பாணக் கல்லூரி - 153/10

சென்.பற்றிக்ஸ் கல்லூரி - 47/02

இந்த ஆட்டத்தின் சிறப்பாட்டக்காரராக சென்.பற்றிக்ஸ் வீரர் ஜி.செல்வின் லொயிட் தெரிவுசெய்யப்பட்டார். சகலதுறை ஆட்டக்காரராக வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணக் கல்லூரி வீரர் எம்.திலீபனும், சிறந்த துடுப்பாளராக சென்.பற்றிக்ஸ் கல்லூரி வீரர் எம்.றொஷாந்தனும், சிறந்த பந்து வீச்சாளராக சென்.பற்றிக்ஸ் வீரர் ஆர்.விநோதனும், சிறந்த களத்தடுப்பாளராக சென்.பற்றிக்ஸ் கல்லூரி வீரர் ஜி.செல்வின் லொயிட்டும் தெரிவு செய்யப்பட்டனர். (ம-5)

## தலைமைப்...

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவருக்குப் பதிலான தலைவரின் விவரம் இன் னும் சில நாள்களில் வெளியாகும் என்றும் கூறப்பட்டது.

"பொலக் எமது தேசிய அணியின் பெறுமதிமிக்க ஒரு வீரர். அத்துடன், உலகளவில் மிகச் சிறந்த சகலதுறை ஆட்டக்காரர்களில் ஒருவர். அவர் தொடர்ந்தும் அணியில் ஒரு முக்கிய பாத்திரத்தை வகிப்பார்" - என்று தென்னாபிரிக்க கிரிக்கெட் சபையின் நிறைவேற்று அதிகாரி ஜெரால்ட் மஜோலோஆ தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்க அணியின் முன்னாள் தலைவர் ஹன்சி குரோஞ்சே கிரிக்கெட் சூதாட்டத்துடன் தொடர்பு வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் அவருக்கு வாழ்நாள் தடை விதிக்கப்பட்டதைத் தொடர்ந்து 2000ஆம் ஆண்டு அணியின் தலைமைப் பதவியை ஏற்றவர் பொலக்.

இந்த உலகக் கிண்ணத் தொடரின் போது அவரது தலைமை பற்றி கடும் விமர்சனங்கள் எழுந்தமை குறிப்பிடத்தக்கது. அதுவும் அணிக்குள் இருந்தே அத்தகைய விமர்சனங்கள் எழுந்தன என்பதே கவலைக்கிடமானது. (ம)

## ஆஸ்திரேலியா...

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

யும் மோடி 39 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் பிரட் லீ 3 'மெய்டின்'கள் உட்பட 8 ஓவர்கள் பந்துவீசி 14 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் பிச்சல் 9ஓவர்களில் 42 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் ஸீமன் 6 ஓவர்களில் 22 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய ஆஸ்திரேலிய அணியின் ஆரம்பத் துடுப்பாளர்கள் அதிரடியாக ஆடினர். 43 பந்துகளில் கில்கிறிஸ் 67 ஓட்டங்களை விளாசினார். கென்யாவின் பந்து வீச்சாளர் கரீம் மிகமிக அற்புதமாகப் பந்து வீசி ஆஸ்திரேலியாவின் 3 விக்கெட்டுக்களை சடுதியாக வீழ்த்தினார். அவர் வீசிய 8.2 ஓவர்களில் 6 ஓவர்கள் 'மெய்டின்'கள். கொடுத்த ஓட்டங்கள் 7 மட்டுமே. எஞ்சிய இரு விக்கெட்டுக்களையும் ஒங்கொண்டா வீழ்த்தினார்.

இறுதியில் 31.2 ஓவர்களில் 5 விக்கெட் இழப்புக்கு 178 ஓட்டங்களைப் பெற்று வென்றது ஆஸ்திரேலியா.

ஆட்டநாயகன் கென்ய அணியின் கரீம். (ம)

## பிளவரின்...

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆடவில்லை. 'டெஸ்ட்' அந்தஸ்துப் பெறாத நமீபியா மற்றும் நெதர்லாந்து ஆகிய இரு அணிகளை மட்டுமே சிம்பாப்வே அணி வென்றுள்ளது. ஆனால், தாம் திறமையாக விளையாடவில்லை என்ற கருத்தை ஸ்ரீக் மறுத்தார்.

"இல்லை, நாங்கள் முழுப் பலத்துடன் விளையாடவில்லை என்று நான் கருதவில்லை" - என்றார் அவர். (ம)


## மரண அறிவித்தல்

### மாணிக்கம் சிவசுப்ரமணியம்

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் சிவசுப்ரமணியம் 14.03.2003 வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் திருநெல்வேலி நடராசா அன் பிறதர்ஸ் முன்னாள் பங்காளரும், காலஞ்சென்ற மாணிக்கம் தங்கம்மாவின் மூத்தமகனும் காலஞ்சென்ற இந்திராணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற பரமேஸ்வரி, நடராசா, சர்வானந்ததேவி, செல்வரத்தினம், பாக்கியநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் புஸ்பராணி (Canada), லோகநாயகி (U.S.A.), சர்வேஸ்வரி (கொழும்பு), புவனேஸ்வரி (U.K.) ஆகியோரின் அன்புத் தந்தையும் மனோகரன் (Canada), பத்மநாதன் (U.S.A.), சதானந்தன் (கொழும்பு), சிறிதரன் (U.K.) ஆகியோரின் மாமனாரும் டினுஷ்ஷா, வினுஜா, நிரோஸ், அமந்தா, சர்மிகா, ஜெசிகா, பிரணவன் ஆகியோரது பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பொரளை ஜெயரத்ன மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, ஈமக்கிரியைக்காக நாளை (17.03.2003) திங்கட்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் கனத்தை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நடராசா அன் கோ
(திருநெல்வேலிச் சந்தி).

(15653)

தகவல்:
மா.நடராசா (சகோதரன்)

# ஜப்பான் பேச்சுக்களில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்ப்பை - தெரிவிப்பதுதான் புத்தி சாலித்தனமான முடிவு என்று தலைவர் பிரபாகரன் கருதி முடிவு எடுத்திருக்கிறார். ஆகவே, திருமலைக்கு அப்பால் ஆழ்கடலில் நடந்த சம்பவம் குறித்து எமது தரப்பின் நியாயப்பாட்டை சிங்களத் தரப்புக்கு எடுத்து விளக்கி சிங்களத் தரப்பில்தான் தவறு என்பதை அவர்களுக்கு எடுத்துக்கூறி இதற்கான கடுமையான ஆட்சேபத்தினை தெரிவிக்குமாறு தலைவர் எனக்குப் பணித்துள்ளார்.

இந்தப் பேச்சை நாம் பகிஷ்கரிப்பதாக இருந்தால் அது எதிர்மறையான தாக்கத்தையே எமது இயக்கத்துக்கு ஏற்படுத்தும். எமக்கு அபகீர்த்தி ஏற்படத்தக்க வகையில் ஸ்ரீலங்கா அரசு அதைப் பெரும் பிரசாரம் ஆக்கலாம்.

ஆத்திரமூட்டும் நடவடிக்கைகள் இடம்பெறுகின்ற போதும் போர்நிறுத்தத்தை இறுக்கமாகக் கடைப்பிடித்து அமைதியைப் பேணி பேச்சைத் தொடர்வதுதான் எமது உறுதியான தீர்மானம். இதைத்தான் எமது மக்களும் விரும்புகிறார்கள். ஆகவே, இச்சம்பவம் எமது தலைமைப் பீடத்தையும் போராளிகளையும் உலுப்பிவிட்ட போதும் நாங்கள் மனம் தளராது, உறுதி தளராது அமைதியைப் பேணி பேச்சுக்களைத் தொடர்ந்து நடத்தி, எம்மால் முடிந்த அளவுக்கு சமாதான பேச்சை முன்னெடுப்பதுதான் நல்லதென்று எமது தலைமைப்பீடம் முடிவு செய்துள்ளது. ஆகவே, நாளை (ஞாயிறு) 11.00மணிக்கு நானும் தமிழ்ச்செல்வனும், கருணாவும் கிளிநொச்சியில் இருந்து புறப்படுகின்றோம். கொழும்பு சென்று அங்கிருந்து நாளை (ஞாயிறு) இரவு 9.00மணிக்கு விமானம் மூலம் நேரடியாக டோக்கியோ செல்கிறோம்.

அங்கு நான்கு நாள்கள் பேச்சுக்கள் நடைபெறும். இந்தப் பேச்சுக்களில் பிரதான விடயமாக கடற்படையினரின் யுத்தநிறுத்த மீறல்களும் இதனால் எழுந்துள்ள சிக்கலான நிலைமை பற்றியும் விவாதிக்கப்படும். பேச்சின் நிகழ்ச்சிநிரலில் இந்த விடயம் முக்கிய இடம்பெறும். பொதுவாக பாதுகாப்பு வலயம் மற்றும் மக்களின் இயல்பு வாழ்க்கை பற்றி முக்கியமாக பேசுவோம்.

உயர்பாதுகாப்பு வலயத்துக்குள்ளும் வெளியிலும் மக்கள் மீளக் குடியமர்வது தொடர்பாக இன்னமும் தீர்க்கமான முடிவுகள் எட்டப்படவில்லை.

பேச்சுக்களுக்கு முன்னர் இந்திய நிபுணர் நம்பியாரின் அறிக்கை வெளிவரும் என எதிர்பார்க்கிறோம். நம்பியாரின் அறிக்கை தாமதப்படுத்தப்படுவதை நாம் விரும்பவில்லை.

மீள்குடியமர்வு பிரச்சினையை இறுக்கமாக வலியுறுத்திப் பேசப் போகின்றோம். இந்தப் பிரச்சினை இழுபட்டுச்செல்ல அனுமதிக்கமுடியாது. மக்கள் தமது கிராமங்கள் மற்றும் குடியிருப்புக்களுக்கு மீளச் செல்லாமல் இயல்புநிலை தோன்றப் போவதில்லை. இயல்புநிலை தோன்றாமல் அமைதிநிலை நீண்டு செல்லாது. அமைதியும் இயல்பு நிலையும் ஏற்படாமல் பேச்சில் முன்னேற்றம் காணமுடியாது.

அமைதியும் இயல்புநிலையும் இயல்பான வாழ்க்கையும் இல்லாமல் சித்தாந்தங்கள் பற்றிப் பேசிப் பயனில்லை. கோட்பாடுகள் பற்றி ஆராய்வதில் பிரயோசனம் இல்லை. இந்தப் பேச்சில் இந்த விடயத்தை இறுக்கமாக வலியுறுத்துவோம்.

அதேவேளை -

தமிழ் மக்களுக்கான ஒரு சுயாட்சி அரசு - தமிழீழ சமஷ்டி அரசு - உருவாக்கம் பற்றியும் இந்த பேச்சில் ஆராயப்படும். இந்த சமஷ்டி அரசில் அடங்கும் நிதிப் பங்கீடு, வருமானம் பற்றி சில சமயம் பேசலாம் என நம்புகின்றேன். ஆனால், அந்த விடயத்தை விட மக்களின் அன்றாடப் பிரச்சினை முதன்மை இடம்பெறும் - என்றார் பாலசிங்கம்.

## கப்பல் தாக்கப்பட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடற்படை தாக்கியழித்த தான்தோன்றித்தனமான செயற்பாட்டினை நியாயப்படுத்துவதற்கும் சட்டபூர்வமானதாக்குவதற்கும் தாங்கள் முன்வைக்கும் வாதங்கள் எவ்விதத்திலும் எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாதவை. எமக்கு மிகப்பெரும் அதிருப்தியையும் அது ஏற்படுத்தியுள்ளது.

"புலிகளின் கப்பல் ஆயுதங்களைக் கொண்டு சென்றது" என்று கடற்படை அதிகாரிகள் தங்களுக்குத் தரப்பட்ட பொய்யான தகவலை வைத்து அந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அவ்வாறு அந்தக் கப்பல் தாக்கப்பட்டு அழிக்கப்பட்டமையால் கப்பலும் அதில் பயணித்த எமது உறுப்பினர்களும் கடலின் அடியில் புதைக்கப்பட்டு விட்டனர். இதனால் கடற்படையினர் தமக்கு வேண்டியபடி குற்றச்சாட்டுகளைப் புனைவதற்குச் சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. எமது கப்பலில் இருந்தவர்கள் கடற்படையினருக்கு கோபமூட்டக்கூடிய செயல்கள் எதிலும் ஈடுபடவில்லை என்வும் -

கடற்படையினர் மிகவும் முறைகேடாகத் தம்மீது தாக்குதல் நடத்துவதாகவும் - தாக்குதல் நடந்தபோது எமது கப்பலின் கப்டன் எமக்கு அறிவித்திருந்தார் என்பதைத் தங்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

நாம் கேட்டுக்கொண்டதற்கமைய இச்சம்பவம் நடந்த சரியான இடத்தைத் தெரிவிப்பதற்கு தாங்கள் அக்கறை காட்டவில்லை. இது எமக்கு மிக வேதனையைத் தருகிறது. இத்துன்பகரமான சம்பவம் திருகோணமலையிலிருந்து 220 கடல்மைல் தொலைவில் இடம்பெற்றுள்ளதால் இது மிகவும் சர்ச்சைக்குரிய முக்கிய விடயமாகியுள்ளது. கடற்படையினர் இச்சம்பவம் இடம்பெற்ற சரியான இடம்பற்றி மிகவும் முரண்பாடான, வேறுபட்ட தகவல்களை வெளியிடுகின்றனர்.

பொருளாதார வலயத்தில் - 185 கடல்மைல் தொலைவில் வைத்தே - கப்பலைத் தாங்கள் தாக்கியதாக அவர்கள் இறுதியாகக் கூறியுள்ளனர்.

தற்போது யுத்தநிறுத்த உடன்படிக்கை ஒன்று நடைமுறையில் இருக்கின்றது என்பதையும் புரிந்துணர்வு உடன்படிக்கையின் 13 ஆவது ஷரத்து, கடற்படையினர் புலிகள் மீது தாக்குதல் நடத்துவதை முற்றாகத் தடுக்கிறது என்பதையும், தங்கள் அரசாங்கம் உணர்ந்துகொள்வதற்குத் தவறிவிட்டது. இது எமக்கு மிகவும் ஆச்சரியமளிக்கிறது.

இந்த விடயத்தில் கடற்படையினர் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் உதவியை நாடுவதற்கும் தவறிவிட்டனர்.

மொத்தத்தில் கடற்படையினரின் இச்செயற்பாடு மிகப்பெரியதொரு யுத்த நிறுத்த மீறல் என்பதனால் நாங்கள் கண்காணிப்புக் குழுவின் முடிவான தீர்மானத்தை எதிர்பார்க்கின்றோம். - என்றுள்ளது.

கடிதத்தின் பிரதிகள் கண்காணிப்புக் குழுத்தலைவருக்கும் நோர்வேத் தூதருக்கும் அனுப்பப்பட்டுள்ளன. (ம)

# தற்காப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆழத்தில் சமுத்திரத்தின் அடியில் இப்போது கிடக்கின்றது. அந்த ஆழத்துக்குச் சென்று ஆயுதங்கள் இருப்பதாக நிரூபிக்க முடியாது. இவர்கள் உலகத்தை ஏமாற்றுவதற்காக, புலிகள் ஆயுதம் கடத்தியதாகக் கூறுவதற்காக இத்தகைய தகவல்களை வெளியிடுகின்றனர்.

எமது கப்பல் எண்ணெய் தாங்கிக் கப்பல். அது பற்றிஎரிந்த போது எமது போராளிகள் அதிலிருந்து பதில் தாக்குதல் நடத்தியிருக்கலாம்.

கடற்கொள்ளைக்காரர்களிடம் இருந்து தப்புவதற்காக சிறிய ஆயுதங்களைக் கப்பலில் கொண்டுசெல்வது வழக்கம். எமது பல கப்பல்கள் தென்கிழக்காசியக் கடலில் நடமாடிவருவது உலகமறிந்த உண்மை. இந்தப் பிரதேசங்களில் நிறையக் கடற்கொள்ளையர்கள் நடமாடுகிறார்கள்.

அவர்களிடம் இருந்து எமது கப்பல்களைப் பாதுகாக்க சிறு ஆயுதங்களை அவற்றில் கொண்டுசெல்வது வழக்கம்.

இந்த ஆயுதங்களைக் கொண்டுதான் அவர்கள் திருப்பித் தாக்கியிருக்கின்றனர். நாங்கள் தாக்கிய ஆயுதங்கள் சிறியரகத்தைச் சேர்ந்தவை. இந்தியா வழங்கிய பெரிய யுத்தக் கப்பலைக் கொண்டே கடற்படை தாக்கியது. அதில் பொருத்தப்பட்டுள்ள பெரிய பீரங்கிகள் மூலம் அவர்கள் தாக்கியிருக்கிறார்கள். இதனால் எமது எண்ணெய் கப்பல் சில நிமிடங்களில் கடலில் மூழ்கிப் போய்விட்டது.

கப்பல் தாக்கப்பட்ட சம்பவத்தை அடுத்து இராணுவ கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இருந்து போராளிகளை தலைமைப்பீடம் அழைத்தது. அப்போது இராணுவத் தலைமைப் பீடமும், ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா அரசும் கூடிக் கதைத்தனர். புலிகள் தாக்குதல் நடத்தப் போகிறார்கள் என்ற நினைப்பில் அவர்கள் நடவடிக்கைகளை எடுத்தனர். ஆனால், பாதுகாப்பு நடவடிக்கை என்று சொல்கிறார்கள். நாங்கள் யுத்தத்தை பிரகடனம் செய்யவில்லை என்று அவர்களுக்கு இப்போது தெரிகின்றது.

தற்சமயம் எமது போராளிகள் தமது இடங்களுக்கு திரும்புகின்றனர். அவர்கள் தமது பணியை மீண்டும் ஆரம்பிப்பர். கடந்த காலங்களில் போர்நிறுத்தத்தை நிலைகொள்ளச் செய்வதற்கு கண்காணிப்புக் குழு உதவியாக இருந்து வந்துள்ளது. ஆனாலும், ஆயுதப்படைகள் குறிப்பாக இராணுவமும் கடற்படையினரும் தான்தோன்றித்தனமாக மிகவும் மோசமான முறையில் நடந்திருக்கிறார்கள்; பகைமையுடன் செயற்பட்டிருக்கிறார்கள்; விடுதலைப் புலிகளை மோதலுக்கு இழுக்கும் நோக்குடன் செயற்பட்டிருக்கிறார்கள்; எமது போராளிகளின் சாவுக்குக் காரணமாக இருந்திருக்கிறார்கள்; மிகவும் ஆத்திர மூட்டும் செயல்களால் எம்மைப் பொறுமையின் எல்லைக்குத் தள்ளியுள்ளனர். இது இராணுவம் மற்றும் கடற்படையின் பகைமைச் செயல்கள் என்றே நாம் கூறுவோம்.

கண்காணிப்புக் குழுவினர் இவர்கள் மீது தமது அதிகாரத்தை செலுத்தமுடியாதுள்ளது. சந்திரிகா அம்மையாரின் ஆளுமையின் கீழ்த்தான் இந்த காரம் இருக்கும் வரை இந்தப் பிரச்சினை தொடரும் என நம்புகின்றேன். கண்காணிப்புக் குழுவும் சரி ரணில் அரசும் சரி ஆயுதப்படையை கட்டுப்படுத்த முடியாதநிலையே காணப்படுகின்றது. இந்நிலை தொடர்ந்தால் நாம் தொடர்ந்தும் பொறுத்துக்கொண்டிருக்கமாட்டோம்; பொறுமைகாக்க மாட்டோம்.

சமாதானப் பேச்சுக்களில் ஜனாதிபதியின் பிரதிநிதியாக லக்ஷ்மன் கதிர்காமர் பங்குபற்ற இருப்பதாக ஜனாதிபதி செயலகம் தெரிவிப்பது பற்றி அவரிடம் கேட்டபோது,

லக்ஷ்மன் கதிர்காமர் வந்தால் நாம் திரும்பிவிடுவோம். அரசு அவரை வைத்து பேச்சு நடத்தட்டும் என்று பதிலளித்தார் பாலா. (ம-3)

## களுத்துறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளைக் கைதிகளுக்கு வழங்கியதன் பேரிலேயே கைதிகள் தமது போராட்டத்தை இடைநிறுத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது.

கைதிகளின் விசாரணைகளை வடக்கு - கிழக்கு நீதிமன்றங்களுக்கு மாற்றி விடுதலைக்கான நடவடிக்கைகளை 15 நாள்களுக்குள் மேற்கொள்வதாக சட்டமா அதிபர் திணைக்களம் கைதிகளுக்கு உறுதி அளித்துள்ளதாகவும் கூறப்பட்டது. (ம-12)

## World Cup Score card - 2003



ரூ. 16910 முதல் தொலைக்காட்சிப் பெட்டிகள்
சிங்கர்
புதிய பார்வை
இல. 1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P:021-222 5408


நாணயச் சுழற்சி : இலங்கை

ஆட்டநாயகன் : மார்வன் அத்தபத்து

முடிவு : 74 ஓட்டங்களால் இலங்கை வெற்றி

**இலங்கை**

| பெயர் | ஆட்டமிழப்பு | | ஓட்டம் | பந்து | 4 | 6 |
|---|---|---|---|---|---|---|
| எம்.அத்தபத்து | not out | | 103 | 127 | 7 | 0 |
| எஸ்.ஜயசூரிய | c/தைபு | b/ஸ்ரீக் | 22 | 44 | 2 | 0 |
| எ.குணவர்த்தன | c & b/மரிலியர் | | 41 | 62 | 2 | 0 |
| டி.சில்வா | c/தைபு | b/எர்வின் | 25 | 31 | 2 | 0 |
| கே.சங்கக்கார | c/பிளவர் | b/ஸ்ரீக் | 35 | 25 | 4 | 0 |
| ஆர்.அர்னல்ட் | c/பிளவர் | b/ஹொண்டோ | 01 | 03 | 0 | 0 |
| எஸ்.வாஸ் | not out | | 11 | 08 | 1 | 0 |
| உதிரிகள் | | | 18 | | | |
| மொத்தம் | (50 ஓவர்கள்) | | 256/05 | | | |

களமிறங்காதவர்கள் : பி.பெர்னாண்டோ, ஏச்.திலஹரட்ண, எம்.முரளி, பி.குணரட்ண.

ஸ்ரீக்:10-00-40-02, பிளிங்னட்:08-00-40-00, பிரண்ட்:02-00-13-00, ஹொண்டோ:05-00-36-1, ஜி.பிளவர்:10-00-44-00, மரிலியர்:10-00-43-01, மர்ஸிகென்ஜெரி:02-00-13-00, எர்வின்:03-00-24-01.

**ஸிம்பாப்வே**

| பெயர் | ஆட்டமிழப்பு | | ஓட்டம் | பந்து | 4 | 6 |
|---|---|---|---|---|---|---|
| சி.விஸார்ட் | | b/ஜயசூரிய | 43 | 71 | 4 | 0 |
| டி.மரிலியர் | [illegible] | [illegible] | 10 | 14 | 2 | 0 |
| ரி.பிரண்ட் | | b/குணரட்ண | 21 | 20 | 4 | 0 |
| ஏ.பிளவர் | lbw | b/டிசில்வா | 38 | 51 | 1 | 0 |
| ஜி.பிளவர் | c & b/ஜயசூரிய | | 31 | 52 | 4 | 0 |
| ரி.தைபு | | b/முரளி | 02 | 10 | 0 | 0 |
| ஏ.பிளிங்னட் | c/டிசில்வா | b/பெர்னாண்டோ | 01 | 05 | 0 | 0 |
| எஸ்.எர்வின் | | b/வாஸ் | 12 | 19 | 1 | 0 |
| எச்.ஸ்ரீக் | c/அத்தபத்து | b/ஜயசூரிய | 02 | 07 | 0 | 0 |
| மர்ஸிகென்ஜெரி | not out | | 01 | 03 | 0 | 0 |
| டி.ஹொண்டோ | c/ & b/வாஸ் | | 00 | 02 | 0 | 0 |
| உதிரிகள் | | | 12 | | | |
| மொத்தம் | (41.5 ஓவர்கள்) | | 152/10 | | | |

வாஸ்:9.5-00-46-02, குணரட்ண:07-00-33-02, டிசில்வா:09-01-36-01, முரளி:07-00-22-01, ஜயசூரிய:06-00-30-03, பெர்னாண்டோ:03-00-10-01


NANDI BRAND RUPIKA TILES
குறைந்த விலையில், நிறைந்த தரத்தில் ஓடுகள், முகட்டோடுகள், கற்கள் பெற்றுக்கொள்ள...
ARALIYA STORES
No.11, Negombo Road, Dankotuwa.
T.P. : 031-58174
RUPIKA TILES FACTORY
UDANGAWA, KOCHCHIKADE.
T.P. : 031-77346
No.6, HINDU LADIES LANE,
KANTHARMADAM, JAFFNA.
T.P. : 021-222 3268
(15534)
BEST QUALITY ROOFING TILES



90ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் 1978 - 07 - 12



விண்ணில் 2002 - 12 - 17

அமரர் சிவமதி பவனீதரன்

திதி : 16.03.2003

அன்பு மகளே!
ஆறான செல்வமே!
ஆனி உத்திர அம்பிகையே!
நீர் சிவனடிசேர்ந்து 90நாள் ஆகிவிட்டதம்மா
நீர் சிவனார் பெருங்கணக்கர்
சித்திரை புத்திரனார் திருக்கதையை
உன் கையால் புதுப்பித்து
எழுதி வைத்தாயம்மா!
சித்திரா பௌர்ணமியில்
உடுவில் சித்திவிநாயகர் வாசலில்
வந்து இருந்து படித்திட்டாயோ
உம் நினைவுகள் எம் நெஞ்சங்களில்.

உம் நினைவில்:
அப்பா, அம்மா, கணவர்,
சகோதரர்மார், சகோதரிமார்,
மச்சான், மைத்துனி, மருமகள்.

பாலாவோடை,
உடுவில் தெற்கு,
மானிப்பாய். (15655)



UNIVAC
College Of Computer Information Technology
புதிய கணனி கற்கை நெறிகள்
ஆரம்பம் : 19.03.2003 4.00 p.m.
Note:-குறிப்பிட்ட எண்ணிக்கையான மாணவர்களுக்கே அனுமதிகள் வழங்கப்படும்.
17.03.2003 இற்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளவும்.
Mavadi Road, Sithankerny.
Director, UNIVAC
(15557)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.03.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## புலிகளின் கப்பல் தாக்கப்பட்டதற்கு கண்டனம்

# ஒப்பந்தத்தைக் குழப்புவதில் கடற்படையினர் மும்முரம்

## கட்டுப்படுத்துமாறு கண்காணிப்புக் குழுவுக்கு மகஜர்

யாழ்ப்பாணம்,மார்ச்16

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கையைக் குழப்பும் நடவடிக்கைகளில் கடற்படையினர் மிகவும் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். எனவே, கண்காணிப்புக் குழுவினர் அவற்றைக் கட்டுப்படுத்தி மக்களிடம் நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும் என்று யாழ். மாவட்ட மனிதநேய அமைப்புகளின் ஒன்றியம் கேட்டுள்ளது.

இது தொடர்பாக நேற்றுக் காலை யாழ்.மாவட்ட கண்காணிப்புக்குழுத் தலைவர் ஊடாக கண்காணிப்புக் குழுத்தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்ட மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு குந்தகம் விளைவிக்கக்கூடிய பல நடவடிக்கைகளை கடற்படையினர் மேற்கொண்டுள்ளனர்.

அவ்வாறானதொரு நடவடிக்கைதான அண்மையில் சர்வதேசக் கடற்பரப்பில் வைத்து விடுதலைப் புலிகளின் கப்பல் தாக்கப்பட்ட சம்பவம். இதனை நாம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இந்தச் சம்பவம் தொடர்பாக கண்காணிப்புக் குழுவினர் பக்கச்சார்பற்ற விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும். அத்துடன், இதுபோன்ற சம்பவங்கள் இனிமேலும் இடம்பெறாமல் பார்த்துக்கொள்ள வேண்டியதும் அவசியமாகும். அதன் மூலமே கண்காணிப்புக் குழுவினர் பொதுமக்கள் மத்தியில் நல்ல அபிப்பிராயத்தைப் பெறமுடியும்.

பேச்சுக்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் இந்தச் சம்பவம் நடைபெற்றிருப்பது இருதரப்பினரும் ஒப்பந்தத்தை முறித்துக் கொண்டுவிடுவார்களோ என்ற எண்ணத்தைப் பொதுமக்களிடம் ஏற்படுத்தியிருக்கிறது.

நாட்டில் பொருளாதாரத்தைக் கட்டியெழும்பும் நடவடிக்கையில் அரசு பெரும் பிரயத்தனத்தை மேற்கொண்டுள்ளது. ஆனால், இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்துவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

எனவே, இந்த விடயங்களில் நோர்வே அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு மக்களிடையே மீண்டும் நல்லெண்ணத்தைக் கட்டியெழுப்பவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மகஜரின் பிரதிகள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் மற்றும் நோர்வே தூதுவர் ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (ஜ-4)

# உயர் கல்வித் தெரிவுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,மார்ச்16

2002 டிசெம்பர் மாதத்தில் நடைபெற்ற ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் தோற்றிய மாணவர்களின் நன்மைகருதி உயர்கல்விக் கற்கைநெறித் தெரிவுக்கான வழிகாட்டற் கருத்தரங்கு ஒன்றினை யாழ்மாவட்ட கல்வி மேம்பாட்டுப் பேரவையினர் ஏற்பாடு செய்துள்ளனர்.

இக்கருத்தரங்கு நாளை திங்கள் காலை 10.00 மணிக்கு யாழ்ப்பாணம இந்துக் கல்லூரி, யாழ்மத்திய கல்லூரி ஆகிய இரு இடங்களிலும் நடைபெறும்.

யாழ்ப்பாணக் கோட்டப் பாடசாலைகளைச் சேர்ந்த மாணவ, மாணவியர்கள் இக்கருத்தரங்கில் கலந்துகொள்வதற்கு அழைக்கப்பட்டுள்ளனர். மாணவ, மாணவியர்கள் பாடசாலைச் சீருடையில் வருகை தருதல் வேண்டும் எனவும், ஆர்வமுடைய பெற்றோரும் கலந்துகொள்ளலாம் எனவும் பேரவைத் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் கேட்டுள்ளார். (ஐ)

## கொழும்பு உயர் நீதிமன்றம் அருகே

# ஒல்லாந்தர் கால ஆலமரத்தை தறிப்பதற்கு கடும் எதிர்ப்பு

கொழும்பு,மார்ச்16

கொழும்பு உயர் நீதிமன்ற வளாகத்தின் மத்தியில் நிற்கும் 462 ஆண்டுகள் பழைமைவாய்ந்த ஆலமரத்தினை தறிப்பதற்கு கடும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது.

புதிய கட்டடம் அமைப்பதற்காக இந்த ஆலமரத்தையும் அப்பகுதியில் காணப்படும் பழைமைவாய்ந்த வேறு மரங்களையும் தறிப்பதற்கு உயர் நீதிமன்றப் பதிவாளர் கேள்வி கோரியதையடுத்தே இந்த எதிர்ப்புக் கிளம்பியுள்ளது.

ஒல்லாந்தர் காலம் முதல் வளர்ந்து கிளை பரப்பி நிற்கும் ஆலமரத்தைத் தறிக்கக்கூடாது என்று தெரிவித்து உயர் நீதிமன்றச் சட்டத்தரணிகள் மரத்தின் கீழே ஒன்றுகூடி எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். (ஐ)

# புலம் பெயர்ந்த தமிழர்களின் 'லண்டன் இன்விரேசன்' அணி

யாழ்ப்பாணம்,மார்ச்16

புலம்பெயர்ந்த தமிழர்கள் இடம்பெற்றுள்ள "லண்டன் இன்விரேசன்" கிரிக்கெட் அணி யாழ்ப்பாணம் வந்துள்ளது.

இந்த அணியில் இடம்பெற்றுள்ளவர்கள் யாழ்.குடாநாட்டிலுள்ள முன்னணிப் பாடசாலைகளின் கிரிக்கெட் அணிகளில் முன்னர் இடம்பெற்றிருந்தவர்களாவர். அத்துடன் தற்போது தாம வசிக்கும் நாடுகளில் உள்ளூர் கிரிக்கெட் அணிகளில் இடம்பெற்று சிறப்பாக விளையாடி வருபவர்களாவர்.

யாழ்மத்திய கல்லூரியின் பழைய மாணவரான தனபாலா - குணரத்தினசிங்கம் தலைமையில் வந்துள்ள இக கிரிக்கெட் அணியில் இடம்பெற்றுள்ளவர்களின் விபரங்கள் வருமாறு:-

யாழ்.மத்திய கல்லூரி பழைய மாணவர்கள் - பாலசிங்கம் முரளிதரன் (பிரிட்டன்), மோகன் கணேசலிங்கம் (நோர்வே), காந்தமூர்த்தி கலாவண்ணன் (பிரிட்டன்), போல் பிரகலாதன் (பிரிட்டன்), தோசி தோமஸ் (கனடா), மனோஜ்குமார் கனகரத்தினம் (நோர்வே), மனோ தர்மராஜ் (பிரிட்டன்) -

சென்.ஜோன்ஸ் கல்லூரி பழைய மாணவர்கள் - நவீனன் நவரத்தினம் (பிரிட்டன்), சிவசுப்பிரமணியம் சுரேஸ் குமார் (பிரிட்டன்) -

யாழ்.இந்துக் கல்லூரி பழைய மாணவர் - துரைராசா பிரபாகரன் (பிரிட்டன்) -

கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் - எஸ்.செல்வன் (பிரிட்டன்) -

சென்.பற்றிக்ஸ் கல்லூரி பழைய மாணவர் கிறேசின் றிச்சட் (நோர்வே). (ஒ-சி)



## மரவேலைப் பயிற்சிக்கு விண்ணப்பம்

வலிகாமம்,மார்ச்16

வடக்கு - கிழக்கு மாகாண தொழில் துறைத் திணைக்களத்தின் கீழ் வலிகாமம் தெற்கு பிரதேச செயலக சுன்னாகம் பகுதியில் இயங்கிவரும் மரவேலைப் பயிற்சிப் பாடசாலைக்கு புதிய பயிற்சியாளர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

மரவேலையை சுயதொழில் முயற்சியாக மேற்கொள்ள ஆர்வமுடைய 18வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்ட ஆண்கள் இப்பயிற்சிக்கு விண்ணப்பிக்க முடியும். ஒரு வருடகாலம் வழங்கப்படும் இப்பயிற்சிநெறிக் காலத்தில் பயிற்சியாளர்களுக்கு பயிற்சிப்படி வழங்கப்படும்.

ஆர்வமுடைய பயிற்சியாளர்கள் தமது விண்ணப்பங்களை இம்மாதம் 21ஆம் திகதிக்கு முன் வலிகாமம் தெற்கு பிரதேச செயலகத்துக்கு அனுப்பிவைக்குமாறு உதவிப் பிரதேச செயலர் எஸ்.ஆர்.ஜெயப்பிரகாசம் அறிவித்துள்ளார். (எ-152)

## உள்ளூராட்சி உதவியாளர்களின் கூட்டம்

யாழ்ப்பாணம்,மார்ச்16

யாழ்மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்றங்களில் கடமையாற்றும் சகல உள்ளூராட்சி உதவியாளர்களுக்கான விசேட கூட்டம் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 10.00மணிக்கு யாழ்மாநகர சபை மண்டபத்தில் இடம்பெறும்.

சேவை அறிக்கை, பதவி உறுதிப்படுத்தல், கடமை, வெளிக்கள கொடுப்பனவு மற்றும் பிறவிடயங்கள் கூட்டத்தில் ஆராயப்படவுள்ளன.

சேவை அறிக்கை வழங்கப்படாதது குறித்து வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் மற்றும் பொதுநிர்வாக உள்ளூராட்சி கூட்டுறவு, வீதி அபிவிருத்தி அமைச்சு செயலாளர் ஆகியோருக்கும் மகஜர் வழங்கப்படவுள்ளன.

இது தொடர்பான சகல உள்ளூராட்சி உதவியாளர்களும் ஆலோசனை வழங்குமாறு உள்ளூராட்சி உதவியாளர் சங்கம் கேட்டுள்ளது. (ஐ)

## நல்லை ஆதீனத்தில் சைவ சமய தீட்சை

அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கம் ஏற்பாடு செய்துள்ள சமய தீட்சை வழங்கும் வைபவம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறவுள்ளது.

சமய தீட்சை பெற விரும்புவோர் அன்றையதினம் சமுகமளித்து தீட்சை பெற்றுக்கொள்ளலாம் என்றும் - குறிப்பாக இளஞ் சைவப் புலவர், சைவப் புலவர் பட்டப் பரீட்சைக்குத் தோற்றுவோர் தவறாது அன்றைய தினம் சமய தீட்சை பெற்றுக்கொள்ள வேண்டும் என்று சங்கத்தின் பரீட்சை செயலாளர் சைவப்புலவர் வ.கந்தசாமி அறிவித்துள்ளார். (எ)







கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்ட ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் இயன் மார்டின் தமிழீழ காவல்துறையின் கிளிநொச்சி காவல் நிலையத்துக்கு விஜயம் செய்து அங்கு உரையாடுவதை முதலாவது படத்திலும் -

கிளிநொச்சிப் பகுதியில் மீட்கப்பட்ட மனித எச்சங்களை அவர் பார்வையிடுவதை 2ஆவது படத்திலும் -

தமிழீழ காவல்துறையின் சிறைச்சாலையை பார்வையிடுவதை 3ஆவது படத்திலும் காணலாம். (ஜ-3)

# இருபாலையில் இரவிரவாக மணல் கடத்தப்படுகிறதா?

யாழ்ப்பாணம்,மார்ச்16

இருபாலைப் பகுதியில் நள்ளிரவு வேளையில் உழவு இயந்திரங்கள் அடிக்கடி வீதிகளில் விரைந்து செல்வதாகக் கூறப்படுகிறது. இந்த உழவு இயந்திரங்கள் சட்டவிரோதமாக மரம், மணல் கடத்துதல் போன்ற செயல்களில் ஈடுபடுவதாக சிலர் சந்தேகம் தெரிவித்துள்ளனர். தினமும் நள்ளிரவு வேளைகளில் இவ்வாறு உழவு இயந்திரங்கள் அடிக்கடி இரைச்சலுடன் போய்வருகின்றன. இவற்றின் மூலம் மணல் இடத்துக்கிடம் எடுத்துச் செல்லப்படுகிறது என்று சிலர் முறையிட்டுள்ளனர். (ஜ-10)

# புதிய ஜனநாயகக் கட்சி ஈராக் போருக்கு எதிர்ப்பு

கொழும்பு,மார்ச்16

போலிக் காரணங்களைக் காட்டி ஈராக் மீது வெறித்தனமாக போர் தொடுக்க நிற்கும் அமெரிக்காவின் நிலையை உலக மக்களோடு இணைந்து வன்மையாகக் கண்டிக்கிறோம்.

- இவ்வாறு புதிய ஜனநாயகக் கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஈராக் நாட்டின் எண்ணெய் வளத்தைக் கைப்பற்றித் தமதாக்கி கொள்ளவும், அமெரிக்க - இஸ்ரேலிய விரோதத்தைக் கொண்டுள்ள ஈராக் அதிபர் சதாம் ஹுசைனைப் பதவி கவிழ்க்கவும், தான் முன்பு இரகசியமாக வழங்கிய ஆயுதங்களை மீளப் பெற்றுக்கொள்ளவும், அங்கு ஒரு பொம்மை ஆட்சியை உருவாக்கவும் ஈராக் மீதான போருக்கு ஐக்கிய அமெரிக்காவின் புஷ் நிர்வாகம் காலக்கெடு விதித்து நிற்கிறது.

அண்மையில் இருபது நாடுகளைச் சேர்ந்த நூற்றி இருபத்தெட்டு பிரதிநிதிகள் லண்டனில் கூடி சர்வதேசப் போர் எதிர்ப்பு இயக்கம் சார்பாக மார்ச் 15ஆம் திகதி போர் எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு விடுத்துள்ள அறைகூவலை எமது புதிய ஜனநாயகக் கட்சி சர்வதேச ஒருமைப்பாட்டுடன் ஏற்றுக்கொள்கின்றது. அதனை இவ் அறிக்கை மூலம் சகல ஏகாதிபத்திய எதிர்ப்பு இடதுசாரி ஜனநாயக சக்திகளுக்கும் தெரியப்படுத்தி மார்ச் 15,17ஆம் திகதிகளில் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுமாறும் வேண்டிக்கொள்கின்றது.

உலகின் பிரதான நாடுகளான பிரான்ஸ், ரஷ்யா, சீனா, இந்தியா, ஜேர்மனி உட்பட மூன்றாம் உலக நாடுகளும் மக்களும் ஈராக் போரை நிறுத்துமாறு வற்புறுத்தி வருகின்றன. பெரும்பாலான பிரித்தானிய, அமெரிக்க, ஆஸ்திரேலிய, ஜப்பானிய மக்களும் ஈராக் போரை எதிர்த்து வருகின்றனர்.

இப்போர் தனியே ஈராக் மக்களையும் முஸ்லிம்களை மட்டுமன்றி உலகின் சகல நாடுகள், மக்கள் மீதும் குறிவைத்துத் தொடுக்கப்படும் ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புப் போராகவே காணுதல்வேண்டும். எனவே ஐக்கிய அமெரிக்கப் போர் வெறியர்களான புஷ் நிர்வாகமும் பிரித்தானிய பிரதமர் ரொனி பிளயரும் இணைந்து திட்டமிட்டு நிற்கும் ஈராக் மீதான அநீதிப் போரை உலக மக்களோடு இணைந்து நாமும் எதிர்த்து நிற்கின்றோம் - என்றுள்ளது. (ஜ-8)

# பொன்விழா வாழ்த்துக்கள்

16.03.1953 – 16.03.2003



பருத்தித்துறையைச் சேர்ந்த

**திரு.திருமதி வேலாயுதம் - இராஜேஸ்வரி**

(Rtd. M.L.T) தம்பதிகள்

திருமண வாழ்வின் 50ஆவது ஆண்டு நிறைவில் பொன்விழாக் காணும் இந்நாளில் அவர்களை ஆலம்விழுதுபோல் பரந்து படர்ந்து வம்ச விருத்தியுடன் குதூகலித்து மகிழ்ந்து பல்லாண்டுகாலம் வாழ உளமார வாழ்த்துகின்றோம்.

பிள்ளைகள் : கிருஷ்ணகுமாரி (சுவிஸ்), இந்துமதி, ரதி, ஜெயந்தி, வசந்தி, சாந்தகுமாரி (நோர்வே), லலிதகுமாரி.

மருமக்கள் : சண்முகநாதன் (சுவிஸ்), சந்தியாப்பிள்ளை, லோகநாதன், ஆனந்தராஜா, மகேந்திரன், ஜெயமேனன் (நோர்வே), முருகேஸ்குமார்.

பேரப்பிள்ளைகள்: சுபோதினி, தங்கவேலாயுதம் (சுவிஸ்), குகதாசன் அஜந்தா (சுவிஸ்), சுதர்சினி ஆனந் (சுவிஸ்), புஸ்பகாந்தி, சிறீகாந், தேனுகாந்தி, நீலவண்ணன், ரகுராமன், அபிராமன், தாமரைச்செல்வி, சாருன், அகிலன், லோஜினி.

பூட்டப்பிள்ளைகள்: மணிமாறன், மணிபரன், சுதானந், அர்வின் மற்றும் அன்புடையவர்கள் அனைவரும்.

பருத்தித்துறை. (15594) தகவல்: ச.சிறீகாந் (பேரன்).



# மனோதத்துவ வைத்தியம்

**(GENERAL PSYCHOTHERAPY)**

யாழ்ப்பாணத்தில் 18.03.2003ஆம் திகதி வரை

இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

இளைஞர்களே!

சக்தி குறைவு - ஞாபக மறதி - பயம்- நடுக்கம் - நித்திரைக் குறைவு இவற்றால் தாழ்வு மனப்பான்மையா?

கவலை வேண்டாம்.

உடனே என்னுடன் தொடர்புகொள்ளுங்கள்!

ஆண்மைச் சக்தி குறைவுதான் உங்கள் கவலையா?

மனோதத்துவ வைத்தியத்தாலும் மூலிகை மருந்துகளாலும் வெற்றிபெறலாம்.

தொடர்புகொள்ளவும்.

பிரபல மனோதத்துவ நிபுணர்

**Dr.P.ஆறுமுகம் S.M.P.**

A.S.N. சுற்றுலா விடுதி,
392/A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

GOVT.Regd. No. 9492

HOT LINE - 0777 - 569205

T.P.: 3181, 5399

(முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்)

(சீ-15622)



## யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை

### பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

# வருடாந்த பொதுக்கூட்டம்

அன்புடையீர்,

மேற்படி சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 30.03.2003 ஞாயிறு காலை 10.00மணிக்கு பாடசாலையின் மேபல் தம்பையா மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பெற்றோர்கள் (அங்கத்தவர்கள்) அனைவரும் தவறாது வருகைதந்து பூரண ஒத்துழைப்பை நல்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

**நிகழ்ச்சி நிரல்**

1. கடவுள் வணக்கம்
2. தலைவர் உரை
3. சென்ற பொதுக்கூட்ட அறிக்கை
4. வருடாந்த செயற்பாட்டு அறிக்கை
5. பொருளாளர் அறிக்கை
6. புதிய அலுவலர் தெரிவு
7. பிரேரணைகள்
8. சபையோர் குறிப்புரை
9. பாடசாலைக் கீதம்

★ பிரேரணைகள் 28ஆம் திகதிக்கு முன்னர் எமக்கு கிடைக்கவேண்டும்.

திருமதி க.பொன்னம்பலம் — தலைவர்/அதிபர்.
வை.யோகேஸ்வரன் — கௌரவ செயலாளர்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை.

(C26970)


## முன்பள்ளி ஆசிரியர் கலந்துரையடல்

தென்மராட்சி,மார்ச்16

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் தென்மராட்சி பிரதேச முன்பள்ளிகளுக்கு நிதி வழங்குவது தொடர்பான கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10மணிக்கு கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்திலும், பிற்பகல் 2 மணிக்கு நுணாவில் மேற்கு அ.த.க. பாடசாலையிலும் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இக்கலந்துரையாடலில் கல்விக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் கலந்து கொள்வதால் அனைத்து முன்பள்ளி ஆசிரியைகளையும் அருகில் உள்ள நிலையத்திற்கு வருகை தருமாறு தென்மராட்சி கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் க.பாக்கியராஜா அறிவித்துள்ளார். (எ-117)


**French மொழி வகுப்பு**

யாழ்.மக்களின்
வசதி கருதி
யாழில் ஆரம்பமாகிறது.
எழுத, பேச, வாசிக்க
3 மாத பேச்சுப் பயிற்சி

ஆசிரியர்
ஸ்ரீ இந்திரகுமார் CAP

ஆரம்பம் 19.03.2003 காலை 10மணி.

★ நேரகுசி வசதிக்கேற்ற முறையில் மாற்றப்படும்.
★ வரையறுக்கப்பட்ட அனுமதி.

*NEW COLLEGE OF HIGHER STUDIES*
ARIYAKULAM JUNCTION, JAFFNA.
(15523) T.P.: 505642





உ
சிவமயம்

## கரைச்சி புளியம்பொக்கனை

# நாகதம்பிரான் ஆலய

# பொங்கல் விழா

மேற்படி ஆலய பொங்கல்விழா எதிர்வரும் 18-03-2003 செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது. 11.03.2003இல் விளக்கு வைக்கும் வைபவம் ஆரம்பமாகியுள்ளது. மீசாலை, புத்தூர்ச் சந்தி, பண்டமரவடியில் இருந்து 17.03.2003 திங்கட் கிழமை காலை 9.00 மணிக்கு பண்டம் புறப்பட்டு, பொங்கல் தினத்தன்று கோயிலைச் சென்றடையும்.

அடியார்கள் ஆலயத்திற்கு வருகை தருவதற்கு போக்கு வரத்து வசதிகள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.

(15583) - ஆலய பரிபாலனசபை.



உ
சிவமயம்

## நாரந்தனை கிழக்கு நொச்சிபுலம் ஞானவைரவர் ஆலய

## பாலஸ்தாபன கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

நிகழும் மங்களகரமான சித்திரபானு வருடம் பங்குனி மாதம் 5ஆம் நாள் 19.03.2003 புதன்கிழமை நண்பகல் 11மணி 30நிமிடம் தொடக்கம் 12மணி 5நிமிடம் வரையுள்ள சுபவேளையில் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் கைகூடியுள்ளது.

அடியார்கள் வருகைதந்து தரிசித்து வைரவப் பெருமானின் இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யுமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

பாலஸ்தாபன குரு: *சிவாச்சாரியமணி* சிவஸ்ரீ நா.யோகீஸ்வரக் குருக்கள்

ஆலய நித்திய பூசகர்: சிவஸ்ரீ ந.கணேசராஜக் குருக்கள்.

(15587) பரிபாலகர்கள்.





உ

## வன்னிப் பகுதி பிரசித்திபெற்ற வற்றாப்பளை

## அருள்மிகு ஸ்ரீ கண்ணகை அம்மன் தேவஸ்தான

## புனராவர்த்தன

# மஹாகும்பாபிஷேகப் பெருவிழா

அம்பிகை அடியார்களே!

எதிர்வரும் 21.03.2003 வெள்ளிக்கிழமை காலை 6.30மணிமுதல் 7.45மணிவரையில் வரும் சுப முகூர்த்த நல்வேளையில் மஹாகும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

- ✪ ஆரம்பக் கிரியைகள் நாளை (17.03.2003) திங்கட்கிழமை ஆரம்பமாகும்.
- ✪ அடியார்கள் எண்ணெய்க்காப்புச் சாத்தும் நிகழ்ச்சி எதிர்வரும் 20.03.2003 வியாழக்கிழமை காலை 8.00மணிமுதல் மாலை 5.00மணிவரை நடைபெறும்.

பிரதிஷ்டா பிரதமகுரு: முத்தமிழ் குருமணி, கிரியாகிரம ஜோதி
சிவஸ்ரீ நா.சர்வேஸ்வரக் குருக்கள்

கிரியா காலங்களில் அடியார்கள் அனைவரும் வருகைதந்து அம்பாளைத் தரிசித்து கண்ணகா தேவியின் பேரருளுக்குப் பாத்திரமாகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயம்,
வற்றாப்பளை, முள்ளியவளை. (15508) - ஆலய பரிபாலன சபையினர்.



## காரைநகர் மணற்காடு அருள்மிகுதேவி கும்பநாயகி

# முத்துமாரி அம்பாள் கோயில்

# மஹோற்சவ விஞ்ஞாபனம்

| | |
|---|---|
| கொடியேற்றம்:- | (18.03.2003) பங்குனி 4 செவ்வாய் பகல் 10.00 மணி |
| வேட்டைத் திருவிழா:- | (29.03.2003) பங்குனி 15 சனி பிற்பகல் 4.00 மணி |
| தேர் உற்சவம்:- | (31.03.2003) பங்குனி 17 திங்கள் பகல் 10.00 மணி |
| தீர்த்த உற்சவம்:- | (01.04.2003) பங்குனி 18 செவ்வாய் பகல் 10.00 மணி |
| பொங்கல்:- | (04.04.2003) பங்குனி 21 வெள்ளி முற்பகல். |

✪ *உயிர்க்காணிக்கைகளை ஆலயத்தில் கொடுத்துப் பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளவும்.*

மணற்காடு என்னும் புராதன திருத்தலத்தில் அருளாட்சி செய்கின்ற கும்பநாயகி முத்துமாரி அம்பாளுக்குப் புதிய சித்திரத்தேர் அராலியூர் விஸ்வப் பிரம்மஸ்ரீ சி.அமரசிங்கம் ஆசாரியார் குழுவினரின் கைவண்ணத்தில் தென்னிந்தியாவில் மயிலாப்பூர் என்னும் திருத்தலத்தில் அமைந்த திருத்தேரினை ஒத்த பூஜாந்திர வடிவத்தைக் கொண்டவாறு திருப்பணி வேலைகள் கடந்த இரு வருடங்களாக நிகழ்கின்றன. இந்தச் சித்திரத்தேரின் உயரம் 36அடி 6 அங்குலமாகவும், விட்டம் 16அடி 6 அங்குலமாகவும் அம்பாள் எழுந்தருளும் சிம்மாசனபீடம் 13 அடி 3 அங்குல உயரமாகவும் அமைய உள்ளது.

இந்தச் சித்திரத்தேர்த் திருப்பணி வேலைகள் பூர்த்தியடைய நாற்பது லட்சம் ரூபா செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. வருகின்ற ஆண்டு (2004) பங்குனி மாத மஹோற்சவத்தின் தேர் உற்சவ தினத்தன்று அம்பாள் இந்தப் புதிய சித்திரத் தேரில் எழுந்தருளி வீதி உலா வரத் திருவருள் பரிபாலித்திருப்பதால் அடியார்கள், உபயகாரர்கள், கோயில் நலன்விரும்பிகள் சித்திரத்தேர்த் திருப்பணிக்குத் தாராளமாக நிதி உதவி வழங்கித் தேர்த்திருப்பணிச் சபை பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளுமாறு பணிவன்புடன் வேண்டுகின்றோம்.

சித்திரத்தேர் திருப்பணிக்கு வங்கிமூலம் நிதி வைப்பிட விரும்பும் அடியார்கள் இலங்கை வங்கி, காரைநகர் நடைமுறைக்கணக்கு இல.103இல் நிதி வைப்பிடவும்.

மணற்காடு,
காரைநகர். (15538)

திருப்பணிச்சபையும் ஆலய நிர்வாகமும்
(தொலைபேசி இல. 222 3659).

# நீங்கள் இன்னும் வாசிக்கவில்லையா?

## திருமதி அடேல் பாலசிங்கம் எழுதிய

# சுதந்திர வேட்கை

தமிழீழ விடுதலைப் போராட்டம் தொடர்பான ரசமான பல சம்பவங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

உதாரணத்திற்கு இதோ:-

அன்று மாலை நடந்ததை நினைத்தால் ஆத்திரம் தான் வரும். சூதுவாதற்ற மக்கள் மீது இத்தகைய குரூரக் கொடுமையைப் புரிந்துவிட்டு அதற்கு நியாயம் கற்பிக்க முயலும் மனித சிந்தனை மனச்சாட்சியற்றதாகவே இருக்க முடியும். பாதிக்கப்பட்டவர்கள் இவர் இவரென்று தெரிந்தெடுக்கப்படாது சகட்டுமேனிக்கு தாக்கப்பட்டவர்கள். எவரும் பாதிக்கப்பட்டிருக்கலாம் என்பதை உணர்ந்தபோது நான் உயிர் தப்பியதற்கு பாக்கியம் செய்திருக்க வேண்டும் என்ற உணர்வைத் தந்தது.
அன்று பாதிக்கப்பட்டவர்களை விட நான் எதிலும் வேறுபட்டவளல்ல என்பதும்,
இப்படியான சந்தர்ப்பங்களில் நான் பிரித்தெடுத்துக் காப்பாற்றப்பட இடமே இல்லை என்பதையும் உணர்ந்தேன். நான் மட்டும் எப்படிக் காப்பற்றப்படலாம்?
பிழையான நேரத்தில் பிழையான இடத்தில் நான் இருக்கவில்லை என்பதால் தப்பிப்பிழைத்தது எனது அதிர்ஷ்டம்!


*இதே போல் இன்னும் பல சம்பவங்கள்*
*இனியும் தாமதிக்காதீர்கள்*

**உதயன் பத்திரிகை முகவர்களிடமும், பிரபல புத்தக நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.**

**பக்கங்கள்: 479** **விலை 500/-**



# அழகிய கூந்தலின் ரகசியம்




பக்கவிளைவு அற்றது.

# பயோட்டினெக்ஸ் - E

## எது உங்கள் பிரச்சினை ?

பயோட்டினுடன் விட்டமின் - Eயும் சேர்ந்துள்ளதால் சிறந்த பயன் கிடைக்கும்

- தலைமயிர் உதிர்கிறதா
- தலைமயிர் வளர்ச்சியின்மையா
- தலைமயிர் நுனி வெடிப்பா
- வலுவிழந்த தலைமயிரா
- வறண்ட சருமமா
- தோலில் சுருக்கம் விழுந்து வயதான தோற்றமா
- சரும நோய்களா
- உடைந்த ஒழுங்கற்ற நகங்களா



இவ்வனைத்து பிரச்சினைகளுக்கும் உடன் நிவாரணி விஞ்ஞான ரீதியில் உறுதிப்படுத்தப்பட்ட

**பாவனை முறை:** தினம் 2 கப்சியூல்ஸ் 3 மாத காலத்திற்கு பாவிக்கவும்

**BIOTINEX - E**

இயற்கையான பயோட்டினெக்ஸ்-E அத்தியாவசிய மக்களுக்கென பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்டது சிறப்பம்சமாகும்.

**யாழ் முகவர்**

ஜெகன் பார்மசி, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். ☎ 021 2223191

**வன்னி முகவர்**

அகிலன்ஸ் பார்மசி, (பிள்ளையார் மருந்தகம்) கிளிநொச்சி.

மற்றும் நாடளாவிய ரீதியில் அனைத்து முன்னணி பார்மசிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Marketed By: **Arkem Colombo**
Tel : 470290, 075-344436 Email : arkem@sltnet.lk

பயோட்டின் H உடன் இயற்கையான விட்டமின் E சேர்க்கப்பட்டு தற்போது பயோட்டினெக்ஸ் E என்ற பெயரில் அறிமுகமாகிறது.



# மலிவு விற்பனை

**20% முதல் 50% வரை கழிவு**

புதுக்கணக்குப் போட இருப்பதால்
பாடசாலை மாணவர்களுக்கான புத்தகங்கள், மருத்துவம், கணனி, பொறியியல்,
இந்திய பிரபல எழுத்தாளர்களின் நாவல்கள் போன்றன
மலிவு விலையில் விற்பனையாகின்றன.
ஒருமுறை விஜயம் செய்யுங்கள்!

**ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்**
212, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

(C/26949)



மீண்டும்......
திருமதி சாந்தினி சிவநேசனின் நெறியாள்கையில்
நாடக அரங்கக் கல்லூரி வழங்கும்
ஆர்கொலோ சதுரர்
- நடன நாடகம்
இன்னும் சில நாட்களில்.....



## வெளிநாட்டு நிறுவனத்திற்கு வீடு வாடகைக்கு உண்டு

வெளிநாட்டு நிறுவனத்திற்கு ஏற்றவகையில் 2000 சதுர அடி கொண்டதும் 7 அறைகளைக் கொண்டதுமான வீடு யாழ். நகர மத்தியில், நாவலர் வீதியில் வாடகைக்கு உண்டு.
*தொடர்பு நேரம்:-* பிற்பகல் 2.00 மணியிலிருந்து மாலை 7.00 மணிவரை.
N.மகேந்திரராஜா
249A, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (15627)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

அன்னையின் மடியில் 16 - 01 - 1948



ஆண்டவனின் அடியில் 14 - 02 - 2003

## திருமதி கந்தசாமி சந்தணம்

எமை அணைத்த தெய்வமிங்கு
எமை மறந்து போனதேனோ?
பாரினிலே பண்பாய் எமை வளர்த்து
பாசத்தை ஊட்டிப் பிரிந்ததேனோ?
நோகுதே எங்கள் நெஞ்சம்
வேகுதே உள்ளம் புண்ணாய்
என்றுமே உமைப்பிரிந்து வாழ்ந்ததுமில்லை!
இனி எப்படி வாழ்வோம் என்பது ஐயம்!
அன்னையே! நீ பெற்ற பிள்ளைகள் - இங்கு
கதறி அழுவதைக் கண்டிட வாரீர்!

இன்று (16-03-2003) ஞாயிற்றுக்கிழமை நடைபெறுகின்ற அன்னாரது அந்தியேட்டிக் கிரியைகளிலும் எமது இல்லத்தில் நிகழும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*நிரந்தர முகவரி:* மாவை கலட்டி, தெல்லிப்பழை.
*தற்காலிக முகவரி:* யுவசக்தி வீதி, சுதுமலை தெற்கு.
பிரிவால் துயருறும்: கணவர், பிள்ளைகள்.

(15629)

# மரண அறிவித்தல்

## அலோசியஸ் இம்மனுவேல் றிச்சேட்

பண்டத்தரிப்பைச் சேர்ந்த அலோசியஸ் றிச்சேட் 14.03.2003 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையா அலோசியஸ் மற்றும் திருமதி செல்வறட்ணம் அலோசியஸ் ஆகியோரின் அன்பு மகனும் றெஜினா (குஞ்சு)வின் அன்புக் கணவரும் றிச்சேட்(தம்பா) அவர்களின் அன்புத் தந்தையும் றெஜினோல்ட்(ஜேர்மனி), காலஞ்சென்ற திருமதி றிலியட் விஜயறட்ணம் மற்றும் திருமதி ஹரியட் பயஸ்(ஜேர்மனி), ஜெயக்குமார் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரருமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (16.03.2003) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று பி.ப 2.30 மணிக்கு புனித அந்தோனியார் ஆலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்னர் பூதவுடல் பண்டத்தரிப்பு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சென். அன்ரனீஸ் லேன், பண்டத்தரிப்பு.*
(15628)

தகவல்
A.B.A.றிச்சேட் (தம்பா)
(மகன்)

# கட்டாக்காலி நாய்களை ஒழிக்க நடவடிக்கை தேவை

## ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் கோரிக்கை

வலி.மேற்கு,மார்ச்16

வலி.மேற்கு பிரதேசத்தில் காணப்படும் கட்டாக்காலி நாய்களை ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும என இவ்வாறு வலிகாமம் மேற்குப் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டது.

வலிகாமம் மேற்குப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் அண்மையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் உதவிப்பிரதேச செயலர் கே.தர்மராசா தலைமையில் நடைபெற்றது. பிரதேச மட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், கிராம அலுவலர்கள், அரச திணைக்களங்களின் அதிகாரிகள் உட்பட இன்னும் பலர் இதில் கலந்துகொண் டனர்.

பிரதேசத்தின் அபிவிருத்தி பற்றி கூட்டத்தில் ஆராயப்பட்டது. சுகாதாரம், உணவு போன்ற அடிப்படைத் தேவைகள் பற்றியும் அண்மையில் மீளக்குடியமர்ந்த மக்களின் தேவைகள் பற்றியும் கவனம் செலுத்தப்பட்டது. கூட்டத்தில் பின்வரும் கோரிக்கைகள் உறுப்பினர்களினால் சமர்ப்பிக்கப்பட்டது.

வலிகாமம் மேற்குப் பிரதேசத்திலுள்ள வெதுப்பகங்களில் உற்பத்தி செய்யப்படும் பாணின் தரம், நிறை என்பன குறைந்து காணப்படுகின்றது. இதனை பரிசீலனை செய்வதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

வட்டுக்கோட்டை அரசினர் கிராமிய வைத்தியசாலையை முழுநாளும் முழு நேரமும் இயங்க வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

வழுக்கையாறு அணைக்கட்டை உயர்த்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

(ம-175)

# தொலைபேசிக் கட்டணம் பெருமளவில் உயராதாம்!

கொழும்பு,மார்ச்16

தொலைபேசிக் கட்டணங்கள் திருத்தியமைக்கப்படவிருக்கின்றன. ஆயினும் கட்டணங்கள் பெருமளவு அதிகரிக்கப்படமாட்டா என்று ரெலிகொம் நிறுவனம் தெரிவிக்கின்றது.

தற்போதைய கட்டணங்களின்படி தொலைபேசிச் சேவையைக் குறைந்தளவில் பயன்படுத்தும் பாவனையாளர்கள் கூடுதலான நிவாரணத்தைப் பெறுகின்றனர் எனவும் கூடுதலான அளவில் பயன்படுத்துவோருக்கு அந்த நிவாரணம் இல்லை எனவும் ரெலிகொம் நிறுவனம் கூறுகின்றது.

தொலைபேசிச் சேவையைக் கூடுதலாகப் பயன்படுத்துவோர் கூடியளவு நிவாரணம் பெறவேண்டும் என்று நிறுவனம் கருதுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(ம)

சுஜெ சித்த மருத்துவ நிலையம்
sujay siddha medical centre
சித்தமருத்துவ பட்டதாரிகளினால்
☆ மருத்துவ ஆலோசனைகள்
☆ சித்த மருத்துவ சிகிச்சைகள்
★★ சனி, ஞாயிறு தினங்களில்
தொக்கண சிகிச்சை (Oil Application and Massaging)
☆ தினமும் 4.30 - 7.00 மணிவரையும்
சனி, ஞாயிறு } காலை 9.00 - 12.00 மணிவரையும் / மாலை 4.00 - 7.00 மணிவரையும்
வழங்கப்படுகின்றன.
83, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
(15610)
நிர்வாகி
சு.சி.நி.

## நீங்காத நினைவில் 2ஆம் ஆண்டு

### அமரர் பொன்னையா கனகராசா (கீரிமலை)

(முன்னாள் புகையிரதப் பகுதி ஊழியரும், தெல்லிப்பழை கிராமசபை உறுப்பினரும், கீரிமலை தீர்த்தக்கரைப் பிள்ளையார் ஆலய தர்மகர்த்தாவும்)

*கண் இமைபோல எமைக் காத்து கருத்தோடு எமை வளர்த்து*
*வையத்தில் எமை வாழ்வாங்கு வாழ வைத்து*
*எத் துன்பம் பெருகிடினும் எமதின்பம் காணநின்ற*
*எம் பாசத் தெய்வமே! எம் கண்ணீர்க் காணிக்கைகள்.*

மனைவி, மக்கள், பேரர் சார்பில்
திருகோணமலை. கனகமகேந்திரா (மகன் - அதிபர்).

(15638)

## கண்ணீர்த் துளிகள்

யாழ்.பெரியகடை மரக்கறி வியாபாரி
திரு.சி.இராசரெத்தினம் (தவம்) அவர்களின் பாசமிகு தந்தையார்

### வேலன் சின்னையா

அவர்களின் மறைவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

துயரங்கொள்ளும்:
உடுவில். (15642) யாழ்.மரக்கறி சந்தை வியாபாரிகள்.

## மரண அறிவித்தல்

### வேலன் சின்னையா

உடுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலன் சின்னையா நேற்று (15.03.2003) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற வேலன் - முத்துப்பிள்ளையின் அன்பு மகனும் காலஞ்சென்ற சின்னம்மாவின் பாசமிகு கணவரும் அருள்மலர் (நோர்வே), செல்வரத்தினம், பவளமலர், கமலாம்பிகை, வாலாம்பிகை, இராசரெத்தினம் (யாழ்.மரக்கறி வியாபாரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், வீரசிங்கம், பாக்கியம், பஞ்சலிங்கம், தம்பிராசா, பீதாம்பரம், பவளராணி ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.03.2003) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நாகம்மாள் கோயில் வீதி,*
*உடுவில் கிழக்கு,*
*சுன்னாகம்.*
(15640)
தகவல்:
குடும்பத்தினர்.

## கலந்துரையாடல்

யாழ்.மாவட்ட தொண்டர் ஆசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று ஆரியகுளம் புதிய உயர்கல்லூரியில் நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது. அன்றையதினம் அனைத்து தொண்டர் ஆசிரியர்களையும் தவறாது சமுகம் தருமபடி கேட்டுக்கொள்வதோடு நடப்பு வருடத்திற்கான சந்தாப் பணத்தினையும் செலுத்தி உதவுமாறும் யாழ்.மாவட்ட தொண்டர் ஆசிரியர் சங்கம் கேட்டுள்ளது.

## உணர்வின்...

(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

போர் நிகழ்ந்த பிரதேசத்தில் பனைகள் பலமாயும் உறுதியாயும் உயர்ந்தும் வளர்ந்திருப்பது பற்றிக் குறிப்பிடப்படுகிறது. இங்கு பனைகள் யாழ்ப்பாண மண்ணின் கலாசாரத்திற்கோ அன்றேல் மக்களின் மன உறுதிக்கோ குறியீடாகச் சித்தரிக்கப்பட்டுள்ளன. அதேபோல 'ஒற்றைப் பாதரட்சை'யில் நிகழ்வை விவரிப்பவரின் தனிமை போல ஒற்றைப் பாதரட்சையும் கவனிப்பாரற்றுத் தனிமையாக வீதியிற் கிடக்கிறது. இங்கும் ஒற்றைப் பாதரட்சை மனிதனின் அநாதரவான நிலைக்குக் குறியீட்டுப் பிரதிநிதித்துவம் தருவதை உட்கிடையாக உணரமுடியும்.

சாந்தனின் கவிதைகளை முழுமையாக நோக்கின் உணர்வுகளை நெருடி உள்ளத்தைத் தொடும் பாங்கில் அவை சிறந்த இலக்கியம் படையல் என்பதிற் சந்தேகம் இல்லை.

சாந்தனின் இலக்கியப் பங்களிப்பில் அவரது 'The Sparks' சிறுகதைத் தொகுதி 1990இல் பிரசுரிக்கப்பட்டது. அவரது 2000ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட சிறுகதைத் தொகுப்பு 'In Their Own Worlds' இலங்கை இலக்கியப் பேரவையின் விருதினைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரி, உயர்தொழில்நுட்பக் கல்லூரி என்பவற்றில் வருகை விரிவுரையாளராகக் கடமை புரியும் சாந்தன், தம் இலக்கியப் பயணத்தில் தொடர்ந்தும் முன்செல்வார் என்பது உறுதி. ★

கனடாவில்
அழகுக் கலை வாய்ப்புகள்
அழகுக் கலை மற்றும் சிகை அலங்காரம் ஆகியவற்றில் ஆறுமாதப் பயிற்சிநெறியைப் பின்பற்றி கனடா செல்லும் வாய்ப்பைப் பெறுங்கள்.
வருக:
டுவிங்கில் சிகை மற்றும் தேகநல சலூன்
முதலாவது மாடி ரந்துல கட்டடம்,
ஹை லெவல் வீதி,
மஹரகம
(கொமர்ஷல் வங்கிக்கு அருகில்).
(சி-26959)

வடமாகாண தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் (ம.ப.)

### பொதுமுகாமையாளர் பதவி (நிரந்தரம்) 101/07

## வெற்றிடம்

மேற்படி பதவிக்குத் தகுதியானவர்களிடமிருந்து (இருபாலாரும்) உள்வாரியாகவும், வெளிவாரியாகவும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவம் ரூபா 10/- செலுத்தி சமாசத்தில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்கள் 'தலைவர், வடமாகாண தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், 52, சோமசுந்தரம் லேன், சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்' என விலாசமிட்டு, கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'பதவியின் பெயர் குறிப்பிடப்பட்டு, பதிவுத் தபால் மூலமாகவோ, நேரடியாகவோ அனுப்பப்படவேண்டும். சமாசத்தால் விநியோகிக்கப்படும் விண்ணப்பப் படிவத்திலேயே விண்ணப்பிக்கவேண்டும்.

01. சம்பள அளவுத் திட்டம் :
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சுற்றறிக்கை. இல.31/99 அமைய
5500 - 8200
130 தர 10 - 140 தர 10

02. தகைமைகள் : கூ.ஊ. ஆணைக்குழு சுற்று நிருபம் 108/01 அமைய)
அ. கூட்டுறவுப் பணியாளர் 6ஆவது சம்பளத்திட்டத்திலான பதவியில் 3 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 7ஆவது சம்பளத்திட்டத்தில் மேற்பார்வை மட்டத்திலான பதவியில் 6 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

ஆ. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டத்துடன் அல்லது அதற்கு இணையான தகைமையுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனமொன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் 6 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

இ. கூட்டுறவுப் பணியாளர் உயர்தராதரப் பத்திரம் / க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியும், அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக கைத்தொழில் நிறுவனமொன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் 8 வருடத்திற்குக் குறையாத அனுபவமும்.

03. வயதெல்லை : 18 - 45

04. தற்போது கூட்டுறவுச் சேவையிலுள்ளவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது என்பதுடன் அவர்கள் பதவிகளுக்காக விண்ணப்பிக்கும்போது தமது விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட சங்கங்கள் / கொத்தணிகளுக்கூடாக அனுப்புதல் வேண்டும். இத்தகைய ஊழியர்கள் நேரடியாக விண்ணப்பங்களை அனுப்புதல் விண்ணப்பங்களை நிராகரிப்பதற்கும், தெரிவுசெய்யப்பட்ட பின்னர் அது வெளிப்படுமிடத்து நியமனத்தை இல்லாதொழிப்பதற்கும் வழிவகுக்கும்.

விண்ணப்ப முடிவுதிகதி:- 31.03.2003

ஒப்பம்: கி.தவராசா,
தலைவர்.
*15.03.2003* (சி-26981)

## அரியாலை இளைஞர் கழகம் நடத்திய

பொது அறிவுப்போட்டி - 01 - முடிவுகள்
(உள்ளூர்)

| | கீழ்ப்பிரிவு | மேற்பிரிவு |
|---|---|---|
| முதலாம் இடம் | பி.பத்மமுரளி | ரீ.கணதீபன் |
| இரண்டாம் இடம் | ஜி.விஸ்வரூபன் | எம்.அபிராமி |
| மூன்றாம் இடம் | எஸ்.செந்தூர்ராஜ் | வை.கிஷானந் |

*"உயர்வோம் உயர்த்துவோம்"*

(15636) - நிர்வாகம்.

# அந்தியேட்டி சபிண்டிகரணக் கிரியை



அமரர்
வீரசிங்கம் சூரியகுமாரன்
(தோற்றம்:23.12.1956)



அமரர்
இரத்தினம் பரராசசிங்கம்
(தோற்றம்:21.07.1941)



அமரர்
பரராசசிங்கம் சந்திராதேவி
(தோற்றம்:17.11.1952)

அன்புடையீர்,

2002 மார்கழி பதினேழு, செவ்வாய்க்கிழமை இரவு 8.45 மணியளவில் சிவபதம் எய்திய எமது குலவிளக்குகளின் அந்தியேட்டியை முன்னிட்டு *18.03.2003 செவ்வாய்க்கிழமை, கொழும்பு - 13, இல.26, விவேகானந்த மேடு, கமலாமோடி மண்டபத்தில்* நடைபெறவிருக்கும் ஆத்மசாந்திப் பூஜையிலும் அதைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொண்டு, எமது செல்வங்களின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

திரு.திருமதி சந்திரகுமாரன் (T.P.432035), திருமதி சூரியகுமாரன் (T.P. 333042), திரு.திருமதி சுந்தரலிங்கம் (T.P:522501), திரு.திருமதி ரஞ்சிற்குமார் (T.P.388346),
E.mail: vckumar@sltnet.lk saraswathy@sltnet.lk



அமரர்
பரராசசிங்கம் தயாளினி
(தோற்றம்:20.10.1972)



அமரர்
பரராசசிங்கம் சுஜாதா
(தோற்றம்:09.05.1976)



அமரர்
பரராசசிங்கம் சுஜன்
(தோற்றம்:15.07.1982)

(சி-26971)

# பாடசாலைகளில் பண்ணிசையை வளர்க்க தனியான பிரிவுகள் அமைக்கப்படவேண்டும்

*கேள்வி:-* நீங்கள் தேவாரப் பண்ணிசையை யாரிடம் கற்றுக்கொண்டீர்கள்?

*பதில்:-* நான் எனது தந்தையார், பண்ணிசைவல்லர், பண்ணிசை வள்ளல், தேவார ஆசிரியர், தாவடியூர் எஸ். இராசையாவிடம் பண்ணிசை கற்க ஆரம்பித்து அதன் பின்னர், சைவப்புலவர்மணி கொக்குவில் த. குமாரசுவாமிப்பிள்ளை, இசைவல்லார் குப்பிளான் செல்லத்துரை ஆகியோரிடம் பயின்று - 1964ஆம் ஆண்டு தொடக்கம் பண்ணிசைக் கச்சேரிகள் நடத்திவருவதுடன், 1975ஆம் ஆண்டு முதல் பண்ணிசை வகுப்புக்களை நடத்தி வருகின்றேன்.

தேவார இசை மணி
தாவடியூர் கே.எஸ்.ஆர்.திருஞானசம்பந்தன்
பண்ணிசையில் தேர்ச்சி பெற்று விளங்குபவர். 1964ஆம் ஆண்டில் பண்ணிசைக் கச்சேரி செய்யத் தொடங்கியவர். 1975ஆம் ஆண்டு முதல் பண்ணிசை வகுப்புக்களை நடத்தி வருபவர். ஈழத்திலும், தமிழ் நாட்டிலும் புகழ்பெற்று விளங்குபவர்.

எனது தந்தையாரும், குருவுமாகிய பண்ணிசை வள்ளல் இராசையாவுடன் பண்ணிசைக் கச்சேரிகள் பலவற்றில் சேர்ந்து பாடிவந்துள்ளேன். இருபதாம் நூற்றாண்டின் இசை முன்னோடிகளுள், பண்ணிசை வளர்த்தவர்களுள் எனது தந்தையாரும் ஒருவர் எனப் பல நூல்களில் வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.




*கேள்வி:-* "பண்ணிசை" பற்றிய தங்கள் கருத்து என்ன?

*பதில்:-* "பண்ணிசை" என்று சொல்லும் பொழுது இறைவனையே இசையவைக்கின்ற தெய்வீகத் தன்மையையும், அசையாதனவற்றையும் அசையவைக்கவும், பாடுபவரையும், கேட்போரையும் பக்தியில் ஆழ்த்தப் பரவசப்படுத்தவும் வல்லவை எனலாம்.

இவை சைவசமய குரவர்களால் அருளப்பெற்றன. பண்ணொன்ற இசை பாடும் அடியார்களுக்கு, வேண்டுவன யாவை என்பதையறிந்து அவ்வப் போது அருளுவான், பண்ணின் இசையாகிப் பேரின்பம் அருளும் இறைவன், கல்நெஞ்சையும் கரைய வைக்க வல்லது பண்ணிசை.

*கேள்வி:-* ஆலயங்களில் பண்ணிசை பற்றி என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

*பதில்:-* ஆலயங்களின் விழாக்களின் போது பண்ணிசை எவ்வகையில் பயன்கொடுக்கின்றது, பயன்படுத்தப்பட்டு வருகின்றது, என்பது முக்கியமாகச் சிந்திக்கத்தக்கதொன்றாகும்.

ஆலய மஹோற்சவத்தின் போது நவசந்திகளிலும், "நவசந்திப் பண்கள்" ஓதப்பட்டு வருகின்றமை யாவருமறிவர்.

ஒவ்வொரு சந்திக்கும் குறிக்கப்பட்டுள்ள பண்கள் ஓதப்படுதல் மிக மிக முக்கியமானதாகும். குறிப்பிடப்படும் பண்ணுக்கு உரிய திருமுறையை (தேவாரத்தை) அதற்குரியதான இராகத்தில் பாடுதல்வேண்டும்.

முறையாகத் திருமுறைப் பாடல்களைப் பக்திவயப்பட்டு ஓதினால்தான் பயன்கிடைக்கும். அதாவது, நோய்தீர வேண்டுமானால், நோயைத் தீர்க்கக்கூடிய மருந்தை உரிய பக்குவத்துடன் நோயாளிக்குக் கொடுக்க வேண்டும். அப்போதுதான் நோயானது குணமாகும். அதேபோன்று திருமுறைப் பண்களை ஓதுகின்ற பொழுது எழுத்து, சொல், உச்சரிப்பு, பண், இராகம் என்பன பிறழாத வண்ணம் பயபக்தியுடன் ஓதுதல் வேண்டும்.

அப்படிப் பக்குவமாக ஓதினால் நிச்சயமாக இறைவனின் பெருங் கருணைப் பேற்றைப் பெறமுடியும். சுவாமி திருச்சந்நிதியில் ஓர் அடியை ஒரு தடவையே பாடுதல்வேண்டும். திரும்பத் திரும்ப பாடுதல்கூடாது. இது மரபு.

மஹா கும்பாபிஷேக விழாக்களின் போது காலை, மாலை வேளைகளில் யாகசாலையில் திருமுறைப் பாராயணம் நிச்சயமாக இடம்பெறவேண்டும்.

மகாபூர்ணாகுதியின் பின்னர் வேதம் ஓதியதைத் தொடர்ந்து தமிழ் வேதமாகிய பன்னிரு திருமுறை ஓதப்படுதல்வேண்டும். இதனை நடைமுறைப்படுத்தவேண்டியது சைவ நன்மக்களின் தலையாய கடனாகும்.

*கேள்வி:-* இன்றைய காலகட்டத்தில் மக்கள் மத்தியில் பண்ணிசை எவ்வாறு இலங்குகின்றது?

*பதில்:-* இன்றைய காலகட்டத்தில் பண்ணிசை படும்பாடு மிகவும் வேதனைக்குரியதாகும். தேவாரப் பாடல்களைப் பாடுகின்றபோது எழுத்துப் பிழைகள், சொற்பிழைகள், உச்சரிப்புப் பிழைகள், பொருட்பிழைகள், உரிய பண்ணில்பாடாது ஒரே பண்ணில் எல்லாவற்றையும் பாடுதல், தமது இஷ்டப்படி பாடுதல் போன்ற பல குறைபாடுகள் காணப்படுவது மிகவும் வேதனைக் குரியதாகும்.

குறிப்பிடத்தக்க சில ஆலயங்களைத் தவிர ஏனைய ஆலயங்களில் பண்ணிசைக்கு உரிய இடம்கொடுக்கப்படுவதில்லை. இது கவலைக்குரிய விடயம்.

ஒவ்வோர் ஆலயங்களிலும் தேவாரத் திருமுறையினைச் சிறப்பான முறையில் ஓதவும், ஓதச் செய்யவும் முன்வருதல் அவசியமாகின்றது.

ஆலயங்களில் திருமுறைக்கு உரிய இடம்கொடுப்பதற்கு ஆலய நிர்வாகிகளும், பரிபாலன சபையினரும் தம்மாலியன்ற நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுதல் வேண்டும். இதன் மூலம் பண்ணிசையைப் பெரிதும் இலங்கச் செய்யலாம். இது பண்ணிசைக்கும், சைவசமயத்திற்கும் செய்கின்ற பெரும் பணியாக அமையும்.

*கேள்வி:-* "பண்ணிசைக் கச்சேரியை ஜனரஞ்சகமாகச் செய்யமுடியும்" இது பற்றிய தங்களின் கருத்து என்ன?

*பதில்:-* "பண்ணிசைக் கச்சேரியை" ஜனரஞ்சகமாகச் செய்யலாம். "புவியதனிற்பரவுவான புகலியில் வித்தகர் போல"த் தாமும் பாடுவதற்கு அருள்தர வேண்டும் எனத் திருப்புகழில் வேண்டுதல் புரிகின்றார் அருணகிரியார்.

தேவாரப் பண்ணிசையில், சகல விதமான விந்யாசங்களும் நிறைந்துள்ளன. ஆகவே, பக்தியுடன் - ஜனரஞ்சகமாகக் கச்சேரி செய்யலாம்.

திருமுறைப் பண்ணிசையில், சகல ரசங்களும் மலிந்து கிடக்கின்றமை கவனிக்கற்பாலது. "ஏழிசையாய் இசைப் பயனாய் உள்ள இறைவன்", தானே பாடுகின்றான், ஆடுகின்றான் என்பதற்குத் திருமுறைப் பண்ணிசை சான்று பகர்கிறது.

*கேள்வி:-* உங்களிடம் தேவாரம் கற்றுக் கொண்டவர்கள் யாராவது தங்களைப் போல் கச்சேரி செய்வார்களா?

*பதில்:-* அடியேனிடம் பலர் பண்ணிசை பயின்றனர். தற்போதும் பயின்று வருகின்றார்கள். பண்ணிசைக் கச்சேரியும் செய்கின்றனர்.

*கேள்வி:-* பாடசாலைகளில் பண்ணிசை பற்றி யாது கூறுகின்றீர்கள்?

*பதில்:-* பாடசாலைகளில் பண்ணிசைக்கெனத் தனியான பகுதி இல்லை, சங்கீதம், நடனம் என்பன கற்பிக்கப்பட்டு வருகின்றன. சங்கீதத்தை ஒரு பாடமாக எடுத்துவரும் மாணவர்களுக்கு குறிப்பிட்ட சில தேவாரங்களைச் சொல்லிக்கொடுக்கின்றார்கள். அநேகமாகப் பாடசாலைகளில், பிள்ளைகள் தேவாரப் பண்களை முறையாக ஓதுவது குறைவாகவே காணப்படுகிறது.



கே.எஸ்.ஆர்.திருஞான சம்பந்தன் பண்ணிசைக்கச்சேரி நடத்தும் காட்சி

'அங்கமும் வேதமும் ஓதும் நாவார்' - என்ற தேவாரத்தை, 'அங்கமும் வேதமும் ஓதும் நால்வர்' - எனவும், 'மானினேர்விழி மாதராய் வழுதிக்கு மாபெருந் தேவிகேள்' என்பதை, 'மானினேர்விழி மாதராய்வழுதிக்குமாபெருந் தேவிகேள்' எனவும், 'மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்' என்ற தேவாரத்தை 'மண்ணினல் லவண்ணம்' எனவும், 'பெற்றாலும் பிறந்தேன் இனிப் பிறவாத தன்மை வந்தெய்தினேன்' என்பதை 'பெற்றலும் பிறந்தேனினிப்பிறவாததன்மை வந்தெய்தினேன்' எனவும் இப்படியாகப் பல பாடல்கள் தவறாகப் பாடுவதைக் கேட்க முடிகிறது. இந்தத் தவறுகள் திருத்தப்படுதல் வேண்டும்.

வடஇலங்கைச் சங்கீத சபையினரால், இசைப் பரீட்சையில் பண்ணிசையும் ஆசிரிய தரம்வரை இடம்பெற்றுள்ளதால் மாணவர்கள் ஆர்வத்துடன் பயின்றுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

யாழ்.பல்கலைக்கழக இசைத் துறையிலும் பண்ணிசை இடம்பெறுவது மிகவும் மகிழ்ச்சிக்குரியதாகும். பல இடங்களிலும் தற்போது பண்ணிசை வகுப்புக்கள் நடத்தப்பட்டு வருவது மிகவும் போற்றுதற்குரியதே.

*கேள்வி:-* தேவார ஓதுவார்கள் பற்றிய தங்கள் கருத்து என்ன?

*பதில்:-* "ஓதுவார்கள்? ஆமாம், காதலாகிக் கசிந்து கண்ணீர்மல்கி ஓதுவார்கள்! எம்பெருமானின் பெரும் புகழை, அவனருளாலே, அவன் தாள் வணங்கி, சுவாமியின் திருச் சந்நிதியில் பயபக்தியுடன் ஓதிவரும் நியமனத்தினைக் கொண்டவர்கள்.

சைவசமய தீட்சை பெற்றவர்களும், சைவசமயாசாரம் கொண்ட வாழ்க்கை வாழ்பவர்களும், பண்முறையுடன் பரமனுக்குப் பாமாலை சூட்டுபவர்களும் பன்னிரு திருமுறைகளையும் பக்தியுடன் பணிந்து போற்றி ஓதுபவர்கள்.

பண்ணிசையைப் பஜனையாகவும், செய்யலாம். ஒருவர் சொல்லிக் கொடுக்க, அதனை ஏனையோர் பாடுவது அல்லது சேர்ந்து பாடுவது பொருள் விளங்கும்படியாகப் பதம்பிரித்து பண்ணோடு, தேவார பஜனை செய்கின்றமை அளவிலாத ஆனந்தத்தைக் கொடுக்கும்.

*கேள்வி:-* வேறு ஏதாவது கூற விரும்புகின்றீர்களா?

*பதில்:-* சைவாலயங்கள் தோறும் திருமுறைகள் தினமும் ஒலிக்க வகை செய்யவேண்டும். திருமுறைப் பண்ணிசை வகுப்புக்கள் ஆலயங்கள் தோறும் நடத்தப்படுதல் வேண்டும். வித்தியாலயங்கள் தோறும் மாணவர்களுக்கும் பண்ணிசைப் பயிற்சி அளிக்கப்படுதல் வேண்டும்.

செவ்வி கண்டவர்
இராசையா ஸ்ரீதரன்

ஆலய விழாக்கள், சைவசமய குரவர்கள் விழாக்கள், தமிழிசை விழாக்கள், தெய்வீக இசையரங்குகள், மடாலங்கள் என்பவற்றில் பண்ணிசைக் கச்சேரிகள் நடத்தப்படவேண்டும்.

இவ்வகையில் உரியவர்கள் கவனித்து ஆவன செய்வது முக்கியமானதாகும்.

இந்தியாவில் தமிழ்நாட்டில் பல தேவஸ்தானங்களில் மஹோற்சவங்களிலும் திருமுறை விழாக்களிலும் தனிக்கச்சேரியும் பலருடன் சேர்ந்தும் நிகழ்ச்சிகளில் பங்குபற்றியுள்ளேன்.

திருமுறைக் கலாநிதி திருவாவடுதுறை டி.சோமசுந்தர தேசிகர், திருப்பனந்தாள் கலைமாமணி எஸ். முத்துக்கந்தசாமி தேசிகர், பண்ணிசை வாணர் திருத்தணி என்.சுவாமிநாதன், திருநள்ளாறு ஓதுவார் வடுகநாத தேசிகர், திருச்சி மலைக்கோட்டை வி.பாலசுப்பிரமணிய தேசிகர், குமார வயலூர் எஸ்.திருஞானசம்பந்தம் ஓதுவார், திருவாணைக் கோயில் பாண்டியன் ஓதுவார் உட்பட பல சிறந்த ஓதுவார் மூர்த்திகளுடன் சேர்ந்து பாடியுள்ளேன்.

மலேஷியாவிற்கு ஏழு தடவைகள் சென்று பல பாகங்களிலும் பண்ணிசைக் கச்சேரிகளும் பண்ணிசை வகுப்புகளும் நடத்தியுள்ளேன்.

இவையெல்லாம் ஆண்டவன் எனக்குத் தந்த அருட்கொடையாகும். ★

# போரா அல்லது சமாதானமா என்பதை தீர்மானிப்பது அரசும் படைகளுமே!

## பாடசாலை விளையாட்டு விழாவில் கவியன்பன் உரை

வலி.கிழக்கு,மார்ச்16

சமாதானம் தொடருமா, அல்லது சண்டை தொடங்குமா, என்பதைத் தீர்மானிப்பது அரசும் படைகளும்தான்.

உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தில் இடம்பெற்ற இல்ல மெய்வல்லுநர் போட்டியில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய யாழ்மாவட்ட கல்விக் கழகப் பொறுப்பாளர் கை.கவியன்பன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாடசாலை அதிபர் சு.யோகராசா தலைமையில் கடந்த வாரம் இடம்பெற்ற இந்த நிகழ்வில் அவர் தனது உரையில் மேலும் கூறியதாவது:-

அரசுக்கும் - புலிகளுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டு பிறகு நாம் அரசின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் எந்தவித ஆயுதங்களும் இல்லாமல் வந்து செயற்பட்டுக்கொண்டிருப்பது சண்டை தொடங்குவதற்காக அல்ல. சமாதான செயற்பாடு களை முன்னெடுத்து மக்களின் நிம்மதியான வாழ்விற்கு குரல் கொடுத்து சமாதானம் மூலம் நல்ல ஒரு தீர்வை மக்களுக்கு கிடைக்கச் செய்வதற்காகவே இங்கு நாம் செயற்பட்டும் கொண்டிருக்கிறோம்; இனியும் செயற்படுவோம் என்பதை உறுதியாகக் கூறுகின்றோம். ஆனால், மக்களின் இயல்பு வாழ்க்கை திரும்புவதற்குத் தடையாக இருக்கும் படையினர் பிடிவாதமாக நின்று மீறல்களில் ஈடுபடுகின்றனர்; எம்மைச் சீண்டிப்பார்க்கும் செயல்களில் ஈடுபடுகின்றனர். இது மிகவும் கவலைக்குரியது. எம்மை யுத்தத்திற்கு வலிந்து அழைக்கும் செயலாகவே உள்ளது.

எனவேதான் சமாதானம் தொடர வேண்டுமா சண்டை தொடர்வேண்டுமா என்பதற்கு அரசும் - படைகளும் தான் பதில் தரவேண்டும்.

இதனை உறுதிப்படுத்தும் ஆயுதம் மக்களிடமே உள்ளது. இந்த நடவடிக்கைகளை எதிர்த்து அழுத்தம் கொடுத்து அமைதி நிலை பெறச் செய்ய மக்கள் அனைவரும் ஒன்று சேரவேண்டும் - என்றார்.

பாடசாலை அதிபர் சு.யோகராசா தனதுரையில் கூறியதாவது:-

பாடசாலை மாணவர்களுக்கு தனியே கல்வி மட்டும் பொருத்தமானதல்ல. உடல், உள வளர்ச்சியும் ஒன்றுசேர்வதன் மூலம்தான் சமூகத்தில் நல்லதொரு மாணவ சமுதாயத்தை உருவாக்கமுடியும். இந்த வகையில் எமது பாடசாலையில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயிலுகின்றார்கள். மேலும் புதிய அனுமதி கேட்டு வருகின்றார்கள், ஆனால், பாடசாலைக்கோ, அடிப்படை வசதிகளான நிலம், தளபாடம், கற்றல் உபகரணம் போன்றவை மிகவும் பற்றாக்குறையாகவுள்ளன. பழைய மாணவர்கள் மூலம் சில உதவிகளைப் பெற்றிருந்தும் மேலும் இதே நிலைதான் நீடிக்கிறது. இதனை உணர்ந்து சம்பந்தப்பட்ட சகல தரப்பினரும் உதவ முன்வரவேண்டும் - என்றார்.

நீர்வேலி ப.நோ.கூ.சங்க வங்கிச் சேவை முகாமையாளர் ந.கணேசலிங்கம், வலி.கிழக்கு உதவிப் பிரதேச செயலாளர் க.இராசதுரை ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

(ஐ-180)



கொழும்பு ஜோன். டி. சில்வா அரங்கில் கலாசார அமைச்சினால் நடத்தப்பட்ட கலாபூஷண விருது வழங்கும் விழாவில் தமிழ்க் கலைக் காவலன் செல்லையா மெற்றாஸ்மயில் 'கலாபூஷண' விருது பெற்றுக்கொள்வதைப் படத்தில் காணலாம். (படம்: குருநகர் செய்தியாளர்)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

சிங்கப்பூரில் இருந்து தருவிக்கப்பட்ட Made in Japan Sony 2020, 2182, 2102, 1902, 1400 National T.V.க்கள் Sony National FH7, FH10, ரேடியோக்கள், வீடியோ டெக் வகைகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 142, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (15551)

Suzuki Ax100 மோட்டார் சைக்கிள் ஒன்று மிக நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. "கலைக்குடில்" 239, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (15620)

நல்ல நிலையிலுள்ள குளிர்சாதனப் பெட்டிகள் Sisil 80, Singer, Sisil Deluxe என்பன உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 103, கோயில் வீதி, யாழ்ப்பாணம் (ICRCக்கு அருகில்). (15626)

நிறைகூடிய புறொயிலர் தினமும் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். புறொயிலர் மொத்தமாகவும் விற்பனை செய்யப்படும். வியாபாரிகளுக்கு விசேட கழிவுகள் வழங்கப்படும். தொடர்பு: 21/61, இராமநாதன் வீதி, கலட்டி (மிலேனியம் பாருக்கு முன்பாக). (15562)

Prima, Broiler மற்றும் இறைச்சிக்கோழிகள் சுகாதார முறைப்படி சுத்தம் செய்து உங்களுக்குத் தேவையான நிறைகளில் நியாயமான விலையில் தினமும் பெற்றுக்கொள்ளலாம். (Electronic நிறுவை) 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (15588)

கல்பேட் புறொயிலர் (1Kg 140/-) விற்பனைக்குண்டு. சுத்தம் செய்தல் இலவசம். தொடர்பு: மான்ஸ் பாடசாலை வீதி, டச்றோட், உடுவில். (15591)

நிறைகூடிய புறொயிலர் இறைச்சிக்கோழிகள் விற்பனைக்குண்டு. (உயிருடன் 1Kg 135/- சுத்தம் செய்யப்பட்டது 1Kg 220/-) தொடர்பு: சிவா, இராமலிங்கம் வீதி, முடமாவடி, திருநெல்வேலி கிழக்கு. (15630)

Bahiraha Farm (Super Grade) புறொயிலர் குஞ்சுகள் இன்று காலை முதல் விநியோகிக்கப்படும். அடுத்த வாரம் குஞ்சுகளுக்கான பதிவுகளும் ஏற்றுக்கொள்ளப்படும். தொடர்பு: 40, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (15631)

## நாய்க்குட்டிகள் விற்பனை

காவலுக்குரிய Great Dane X Dobermann Pincher நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (15589)

டோபமன் பின்சர் (Doberman Pincher), சேபட் நாய்கள் உடன் விற்பனைக்குண்டு. மல்லிகாபதி, ஆஸ பத்திரி முன்பாக, மானிப்பாய். (15634)

40நாள் நிரம்பிய கிறேடேன் (Greetdern) நாய்க்குட்டிகளும் கொழும்பிலிருந்து கொண்டுவரப்பட்ட நல்லின ஜேர்மன் சப்பேட் (பிறப்பு அத்தாட்சி சான்றிதழுடன்) இன நாயும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: பாலா, 88/33, பத்திரகாளி கோயிலடி, கேசாவில் பிள்ளையார் கோயில் லேன், நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். 0777-[illegible]0131. (15601)

## மணமகன் தேவை

யாழ் இந்து [illegible] குடும்பத்தைச் சேர்ந்த, [illegible] இலக்கினத்துள்ள, வயது 33, நல்லழகும், நற்குணமும் பொருந்திய பட்டதாரி ஆசிரியையான தமது ஏக புத்திரிக்கு பெற்றோர் கிரகபாவம் 70இற்கு குறையாத, அரச சேவையிலுள்ள அல்லது நிரந்தர வருமானமுடைய படித்த மணமகனைத் தேடுகின்றனர். ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். தொடர்பு. C/o வி.இ. 1820, உதயன். (15561)

## மணமகள் தேவை

செவ்வாய்க்குற்றமற்ற, 31 வயதுடைய, சிவில் எஞ்சினியர்க்கு (Civil Engineer) டாக்டர் அல்லது மருத்துவபீட இறுதி ஆண்டில் இருக்கும் பெண் தேவை. ஜாதகம் மற்றும் விவரங்களுடன் தொடர்புகொள்ளவும். F.திருவிளங்கம், வாசிகசாலை ஒழுங்கை, 3ஆம் கட்டையடி, கல்வியங்காடு. (15584)

## வாடகைக்கு வீடு தேவை

ஆசிரியர் குடும்பம் ஒன்றிற்கு யாழ் நகர மையப்பகுதியை அண்மித்ததாகவும் பிரதான வீதிகளுக்கு அண்மித்ததாகவும் வாகன தரிப்பிட வசதியுடன் கூடிய வீடு வாடகைக்குத் தேவை. தொடர்பு: T.P. 0777 555938. (15549)

## தவறிவிட்டது

மல்லாகத்திற்கும் சுன்னாகத்திற்கும் இடையில் 06-03-2003 வியாழனன்று தேசிய அடையாள அட்டை (இல.618490637V), தொழில் அடையாள அட்டை, திறப்புக்கோர்வை, கொப்பிகள் என்பன தவறிவிட்டன. இதனைக் கண்டெடுத்தவர்கள் அல்லது கண்டெடுத்து வேறு யாரிடமாவது ஒப்படைத்தவர்கள் விநாயகர் தொலைத் தொடர்பகம், சித்தங்கேணி என்னும் முகவரிக்குத் தகவல் தரவும். சன்மானம் வழங்கப்படும். T.P.: 070 212428. (சி-26977)

## MUSIC NOTES

தமிழ் சினிமாப் பாடல்களுக்கான Organ Notes தனிப்பிரதிகளாக விற்பனைக்குண்டு. London/Local Music பரீட்சைகளுக்கும் தொடர்பு கொள்க. 49, Temple Rd.Jaffna. 0777-788127. (15617)

## மானிப்பாயில் இன்று மனிதாபிமான உதவிகள் வழங்கும் திட்டம்

கொழும்பு நகர லயன்ஸ் கழகமும், மானிப்பாய் கோவில்பற்று லயன்ஸ் கழகமும் இணைந்து இன்று ஞாயிற்றுக்கிழமை மானிப்பாயில் நலிவுற்ற மக்களுக்கு பல மனிதாபிமான செயற்றிட்டங்களை மேற்கொள்ளவுள்ளன.

இதன் அடிப்படையில் உடுதுணி வகைகள், பாடசாலை மாணவர்களுக்கான சீருடைகள், பாடசாலை உபகரணங்கள் மற்றும் சக்கர நாற்காலிகள், ஊன்றுகோல்கள், மருந்து வகைகள், குடைகள், பிளாஸ்ரிக் வாளிகள், மூக்குக் கண்ணாடிகள், தையல் இயந்திரங்கள், சைக்கிள்கள மற்றும் குழந்தைகளுக்கான பால்மா வகைகள் என்பன வழங்கப்படவுள்ளன.

இந்த உதவிகள் மானிப்பாய் மகளிர் கல்லூரி மண்டபத்தில் வைத்து வழங்கப்படவுள்ளன.

வன்னிப் பிரதேசத்துக்கான உதவிகள் நேற்று சனிக்கிழமை கிளிநொச்சியில் வைத்து வழங்கப்பட்டன. (எ.10)


**JAFFNA SCIENCE ASSOCIATION**

A LECTURE WILL BE DELIVERED

*By*

**Dr.JOHN HOLTON**

CONSULTANT - MICROBIOLOGIST,
READER IN MICROBIOLOGY,
ROYAL FREE AND UNIVERSITY COLLEGE,
LONDON MEDICAL SCHOOL, U.K.

On

INFLAMMATORY BOWEL DISEASE

காலம் : 17.03.2003 திங்கட்கிழமை
நேரம் : 2.30 - 3.30 பி.ப.
இடம் : விரிவுரை மண்டபம், இல.01, மருத்துவ பீடம்.

எல்லோரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

செயலாளர்,
யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்,
பகுதி - C.

(C/26963)

மீண்டும் விற்பனைக்கு

IBM,COMPAQ DELL, SIEMENS - Computers
ஒரு வருட உத்தரவாதத்துடன்
ரூபா 17000/= இலிருந்து
சந்தர்ப்பத்திற்கு முந்துங்கள்
STP Computer World (Pvt.) Limited
54A,Palaly Road,Kantharmadam, Jaffna.


## கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவனத்தில் ஒலிப்பதிவாளராகக் கடமையாற்றும் றிச்சாட் (தம்பா) அவர்களின் அன்புத் தந்தையார்

**அலோசியஸ் இம்மனுவேல் றிச்சேட்**

அவர்கள் காலமானதையிட்டு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரது ஆத்மசாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

சுப்பலோ வீடியோ ஓடியோ அன்ட் கலர் லாப்,
*யாழ்ப்பாணம்.*

உரிமையாளரும் பணியாளர்களும்

(C/26980)




உங்களுடைய உணவகங்கள், கூல்பார் மற்றும் சுப்பமாக்கற் போன்றவற்றிக்கு தேவையான, உலகப் புகழ் பெற்ற L.G மற்றும் Haier DEEP FREEZER வகைகளை ABANS நிறுவனத்தின் உத்தரவாதத்துடன் பெற்றிட



LG

JAFFNA ELECTRICALS
Authorised Dealer For
Abans
141, POWER HOUSE ROAD, JAFFNA
TEL: 021-222-5766


# நீங்காத நினைவலைகள்

| 21ஆம் ஆண்டு | 12ஆம் ஆண்டு | 4ஆம் ஆண்டு |
| --- | --- | --- |



அமரர்
**பொன்னம்பலம் கணபதிப்பிள்ளை**
(நடுவில்)
(சட்டத்தரணியும் சமாதான நீதிவானும், பிரசித்த நொத்தாரிசும்)

தோற்றம் : 15.09.1912
மறைவு : 14.03.1982
திதி : 22.03.2003



திருமதி
**சுறோஜினி ஞானபண்டிதன்**
(சுறோ)
(சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும்)

தோற்றம் : 10.02.1956
மறைவு : 28.12.1991
திதி : 16.03.2003



திருமதி
**மரகதவல்லி கணபதிப்பிள்ளை**

தோற்றம் : 12.10.1925
மறைவு : 05.11.1998

எமது குடும்பத்தின் ஒளிவிளக்குகளாய்த் திகழ்ந்து, எமக்கு நல்வழிகாட்டிய அன்புத் தெய்வங்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உங்களை நினைவு கூரும்:
குடும்பத்தினர்.

*இல.32,3/4 றோகினி றோட்,*
*கொழும்பு - 6.*

*கரணவாய் வடக்கு,*
*உடுப்பிட்டி.*

(15201)